# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 30 செவ்வாய்க்கிழமை (16-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:292




தியாகி திலீபனின் 16 ஆம் ஆண்டு நினைவு தின ஆரம்ப நிகழ்வுகளை, சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் தலைவர் வே.பிரபாகரன் நேற்று தியாகியின் உருவப்படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து ஆரம்பித்துவைத்தார்.

## தியாகி திலீபனின் நினைவுதினம் உணர்வுபூர்வமாக நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.16

தியாகதீபம் லெப்டினன்ட் கேணல திலீபனின் (இராசையா பார்த்தீபன்) 16 ஆவது ஆண்டு நினைவுதின தொடக்க நிகழ்வுகள் நேற்றுக்காலை 9.55 மணிக்கு தமிழர் தாயகப் பகுதியெங்கும் ஆரம்பமாகின. நேற்றுமுதல் எதிர்வரும் 26ஆம் திகதிவரை இந் நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரசியல்துறை அலுவலகங்கள், அரச பொது நிறுவனங்களின் அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் தியாகி திலீபனின் உருவப்படம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

குடாநாட்டின் பிரதான நினைவு தின ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை 10.15 மணிக்கு நல்லூரில் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் ஆரம்பமானது.

எழுத்தாளர் செம்பியன்செல்வன் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில், பொதுச்சுடரை தமிழீழக் கல்விக் கழகத் துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்டரும், தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து ஈகச்சுடரினை திருமதி கணபதிப்பிள்ளை ஏற்றினார்.

திலீபனின் உருவப்படத்திற்கு மாவீரர் அர்ச்சனாவின் தந்தையான சதாசிவம், பரமேஸ்வரக் குருக்கள் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர். இதன்பின், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், யாழ்வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மாநகரசபை ஊழியர்கள், போராளிகள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் திலீபனின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

பின்னர் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையின் பாதுகாப்புக் குறித்து

# பிரதமர் வெளியிட்டுவரும் தகவல்கள் முழுப்பொய் என்கின்றார் ஜனாதிபதி

### ரணிலுக்கு அனுப்பிய கடிதத்தில் சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு,செப்ரெம்பர் 16

**நாட்டின் இறைமைக்கும் பந்தோபஸ்துக்கும் மிக முக்கியமானவை எனக் கருதப்படும் திருகோணமலை கடற்படைத்தளம் மற்றும் துறைமுகம் ஆகியவற்றின் பாதுகாப்புக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால், அதை மறைத்து, உண்மை நிலையைத் திரிபுபடுத்தும் விதத்தில் - திருகோணமலையின் பாதுகாப்புக் குறித்து பிழையான எண்ணக்கருவை உருவாக்கும் நோக்கில் - பிரதமரும் அவரது ஊடகப் பேச்சாளரான அமைச்சர் பேராசிரியர் பீரிஸூம், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் பொய்யான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர்.**

**-இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

12.09.2003 எனத் திகதியிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தான் நேற்று அனுப்பிவைத்த கடிதம் ஒன்றிலேயே இக்குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க வரிசையாக அடுக்கியிருக்கின்றார்.

"திருகோணமலைக்கடற்படைத் தளத்துக்கும் துறைமுகத்துக்கும் புலிகளின் அச்சுறுத்தல்" - என்ற தலைப்பில் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கடிதத்தில் பிரதமரின் செயற்பாட்டைக் காரசாரமாக விமர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் இரண்டு விடுதலைப் புலிகள் கைது!

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை வன்னியிலிருந்து வவுனியாவுக்கு வந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரிடம் இரண்டு அடையாள அட்டைகள் இருந்தன என்றும், மற்றவரிடம் மூன்று செல்லிடத் தொலைபேசிகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டை வெடிக்கவைக்கும் கருவியொன்றும் இருந்தன என்றும் பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்களும் வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணைக்கு கொழும்பிலிருந்து குற்றப்புலனாய்வுப் பொலீஸார் வரவழைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி., வரதர் அணி முன்னாள் உறுப்பினர் இருவர் கொலை!

ஆரையம்பதி, செப்.16

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம இரவும் நேற்றுக் காலையும் இருவர் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர். மற்றையவர் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) உறுப்பினராவார்.

நேற்றுமுன்தினம் இரவு பாலமீனமடு, முகத்துவாரம் என்னும் இடத்தில் நடைபெற்ற சம்பவத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சுபாரத்தினம் சவுந்தரநாயகம் (வயது 26) என்பவர் இனந்தெரியாதோரால் நெஞ்சில் குத்தப்பட்டும், கழுத்தில் வெட்டப்பட்டும் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

இரவு 7 மணிக்கு வீட்டில் இருந்து சென்ற இவர், 8 மணியளவில் ஆற்றங்கரையருகே தாக்கப்பட்டுள்ளார். இவர் இரண்டு பெண்பிள்ளைகளுக்கும், ஓர் ஆண் பிள்ளைக்கும் தந்தையாவார்.

இவருடன் சென்றவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டபோது வயிற்றில் குத்துப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படாவிட்டால் சர்வதேச அக்கறை திசை திரும்பக் கூடும்!

### யசூசி அகாஷி கொழும்பில் தெரிவிப்பு

கொழும்பு,செப்.16

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகத்தின் கரிசனை குறையாதுள்ள போதிலும் இது தொடர்பாக அவர்கள் மத்தியில் அமைதியற்ற நிலையே தொடர்கிறது.

பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றே அவர்கள் விரும்புகின்றனர். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படாவிட்டால் வடகொரியா போன்ற வேறு நாட்டுப்பிரச்சினைகளில் சர்வதேச கவனம் திரும்பி விடும் அபாயம் உள்ளது.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி. நேற்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

உதவி வழங்கும் மாநாட்டில்

(12ஆம் பக்கம் பார்க்க)




தியாகி திலீபனின் நினைவுதின ஆரம்ப நிகழ்வு நேற்று நல்லூரிலுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது. இதில் ஈகச்சுடரை தமிழீழக் கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரரும், தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் ஏற்றுவதையும், உருவப்படத்துக்கு திருமதி கணபதிப்பிள்ளை சுடரேற்றுவதையும் மாவீரர் அர்ச்சனாவின் தந்தை சதாசிவம் மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜனாதிபதி பிரதமருக்கு அனுப்பிய கடிதம்

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமருக்கு 12-09-2003 ஆம் திகதியிட்டு அனுப்பிய பிந்திய கடிதத்தின் முழு விவரமும் வருமாறு:-**

*ரணில் விக்கிரமசிங்க அவர்களே!*

திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கும், துறைமுகத்துக்கும் விடுதலைப் புலிகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாகக் கடந்த மூன்று மாதகாலமாகப் பல கலந்துரையா



டல்களும், கருத்துக்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதுகுறித்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியதோடு, நான் அமைதியாக இவற்றை அவதானித்த வண்ணம் இருந்தேன். நாட்டின் மிக முக்கியமான ஒரு விடயம் குறித்து தலைமைத்துவமும் பொறுப்புணர்வும் அற்றவகையில் நீங்களும் உங்களது ஊடகப்பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் வெளியிட்ட கருத்துக்கள் என்னை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியதால் இறுதியாக இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதத் தீர்மானித்தேன்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து, சுருக்கமாக சில விடயங்களை வெளிப்படுத்தவிரும்புகின்றேன்.

திருகோணமலைக் கடற்படைத் தளம், துறைமுகம், துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகள் என்பவற்றின் பாதுகாப்பு நிலைமை மிகமோசமடைந்து செல்வது குறித்து கடந்த பல மாதங்களாகப் பல அறிக்கைகள் எனக்குக் கிடைத்துள்ளன. திருகோணமலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்புள்ள இராணுவத்தினதும், கடற்படையினதும் தளபதிகளை, அங்குள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து - குறிப்பாகப் புலிகளின் படைகளின் பிரசன்னம், அவர்களின் முகாம்கள் போன்றவை குறித்து - எனக்குத் தெளிவுபடுத்தும்படி இரண்டு மாதங்களுக்கு முன்னர் நான் கேட்டிருந்தேன்.

அது சரியாகச் செய்யப்பட்டது. அதன் மூலம் வெளிவந்த உண்மைகள் வருமாறு:-

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், அன்றைய நிலையில் விடுதலைப் புலிகளால் தற்போது பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள மணிராசகுள முகாம் உட்பட 13 முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.

திருகோணமலை துறைமுகத்தை சுற்றிவளைக்கக் கூடிய விதத்தில் இம் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. யாவரும் அறிந்துள்ளபடி, விடுதலைப் புலிகளிடமுள்ள - தூரநிலைகளைத் தாக்கும் - லோஞ்சர்கள் மூலம் இலகுவாக இலக்கு வைக்கக்கூடிய பிரதேசத்திலேயே புலிகளின் இந்த முகாம்கள் அமைந்துள்ளன.

துறைமுகத்தின் தென்முனை எல்லையில் உள்ள இலக்கந்தையில் கடற்புலிகளின் பெரிய முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் நிறுவியிருக்கிறார்கள். தாக்குதல் ஒன்று ஏற்படும் பட்சத்தில், கடற்படையினரின் படகுகளைத் தாக்கும் நோக்கில் தற்கொலைக் கடற்புலிகளுடன் வள்ளங்களை புலிகள் இங்கு இலகுவாகக் கொண்டுவரலாம்.

அதேவேளை, விடுதலைப் புலிகள திருகோணமலை மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளாது, மூதூர் பிரதேசத்தில் வாழுகின்ற முஸ்லிம் மக்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு தாக்குதல்களை நடத்துவது ஏன் என்று மக்கள் கேள்விகளை எழுப்புகின்றனர். மூதூர்ப் பிரதேசம் திருகோணமலைத் துறைமுகத்துக்கு அண்மையில் உள்ள ஒரு முக்கிய கேந்திர ஸ்தானமாகும். அங்கு அமைந்துள்ள பல்வேறு கட்டடங்களும் ஏனைய வசதிகளும் பயங்கரவாதிகள் கடற்படை முகாமொன்றை அமைப்பதற்கு ஏற்றவையாக உள்ளன. புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பின்னர் திருகோணமலையைச் சூழ் புலிகளால் ஸ்தாபிக்கப்பட்ட தொடர் முகாம்களின் வலயத்துக்கு இடைஞ்சலாகவும் அதற்கு அண்மையில் மூதூர் அமைந்துள்ளது.

திருகோணமலையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக அரசுக்கு தெளிவான அச்சுறுத்தலை விடுக்கும் விதத்தில் உள்ளபல அறிக்கைகளின் முக்கியமான இரண்டைப் பற்றி குறிப்பிட விரும்புகின்றேன்.

01. தாங்கள், எனக்கு அனுப்பிய தகவலின்படி - வடக்கு - கிழக்குப் பாதுகாப்புச் சம்பந்தமான மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி அமெரிக்காவின் ஆசிய பசுபிக் கட்பிராந்திய கட்டளையிடும் அதிகாரிகள் குழுவினை தாங்கள் கடந்தவருடம் கேட்டிருந்தீர்கள். 2002 செப்ரெம்பர் - ஒக்ரோபர் காலப்பகுதியில் இலங்கைக்கு வந்த அக்குழுவினர், நவம்பர் 2002 இல் உங்களிடம் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். "திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புப் பற்றிய" அந்த அறிக்கையின் சில முக்கிய பகுதிகளை இங்கு நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

"துறைமுகத்தின் தென்பகுதியை தற்போது புலிகள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்தப் பிரதேசத்தில் இருந்து அவர்கள் துறைமுகத்தின் உள்ளேயும், வெளியேயும் நடைபெறுகின்ற இலங்கைக் கடற்படையினரின போக்குவரவுகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். அதே போன்று, கடற்படை முகாமுக்கு எதிரான தற்கொலைத் தாக்குதல் மற்றும் பீரங்கித் தாக்குதலையும் அத்தோடு, துறைமுகத்துக்குள் பிரவேசிக்கின்ற அல்லது வெளியேறுகின்ற எந்தவொரு கப்பலையும் அழிக்கக் கூடிய தாக்குதல்களையும் புலிகளால் மேற்கொள்ள முடியும்..." "இப்பிரதேசங்களின் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்பு இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதும், இப்பிரதேசங்களின் பாதுகாப்பை முழுமையாக அதனால் மேற்கொள்ள முடியாதுள்ளது. இலங்கைப் பாதுகாப்புப் படைகள் இந்த நிலப் பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும். தற்போது நிலவும் இந்த ஆபத்தான நிலைமை இலங்கை கடற்படைத் தொகுதியின் பெரும் பகுதியையே பாதிக்கக் கூடியது. அதன் விளைவாக யாழ்ப்பாணத்திற்கு திருகோணமலையில் இருந்து மேற்கொள்ளப்படும் விநியோகங்களைக் கொழும்பில் இருந்து மேற்கொள்ள வேண்டி நேரும். அது யாழ்ப்பாணத்துக்கான தூரத்தை நான்கு மடங்காக்கும். இப்பிரதேசத்தின் மீது முழுக் கட்டுப்பாடு இல்லாத தன்மை திருகோணமலை மற்றும் அதனைச் சூழவுள்ள இடங்களின் பாதுகாப்பை எப்போதும் தோல்வியுறச் செய்வதாகவே அமையும். திருகோணமலைத் துறைமுகம் இல்லாமல் யுத்தத்தை நடத்துவது மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும்"

"இந்தப் பிரதேசத்தைப் பாதுகாக்க" ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளையிடும் படையணியின் ஆலோசனைக் குழுவினால் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகள் தொடர்பாக எதுவுமே - முழுமையாக எதுவுமே - தங்களால் செய்யப்படவில்லை.

## புலிகளின் புதிய முகாம்கள்

02. பாதுகாப்பு அமைச்சருக்கும் எனக்கும் இலங்கை இராணுவத்தளபதி அண்மையில் சமர்ப்பித்த அறிக்கை குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். அது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் புலிகள் 12 புதிய முகாம்களை அமைத்திருக்கிறார்கள் என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றது. இதற்கு மேலதிகமாக அப்பகுதியில் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முதல் இருந்த புலிகளின ஐந்து தற்காலிக முகாம்கள் இப்போது நிரந்தர முகாம்களாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பின்னர் புலிகளால் எந்த முகாமும் அமைக்கப்படவில்லை என்று நீங்கள் எப்படிக்கூற முடியும்?

படைகளின் தளபதிகளால் எனக்குச சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள 2003 செப்ரெம்பர் 05ஆம் திகதி லங்காதீப பத்திரிகையில் பிரசுரமான உங்களின் கூற்றிலிருந்து தெளிவாக முரண்படுகிறது. நீங்கள் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளவை:-

1. திருகோணமலை கடற்படைத் தளத்துக்கும் துறைமுகத்துக்கும் புலிகளால் எந்த ஆபத்தும் இல்லை.

2. யுத்தநிறுத்த உடன்பாட்டின் பின்னர் புலிகளால் முகாம் எதுவும் அமைக்கப்படவில்லை.

3. அத்தகைய ஆபத்து இருப்பதாக அறிவித்திருக்கும் கடற்படையின் கிழக்குத் தளபதியின் நடவடிக்கை தொடர்பாக அரசு விசாரணை நடத்தவுள்ளது.

4. எல்லாப் பாதுகாப்புப் படைகளின அறிக்கையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கே வழங்கப்படவேண்டும். அதாவது நாட்டினதும், அரசினதும தலைவரும் சிரேஷ்ட தளபதியுமான ஜனாதிபதிக்கு எந்த இராணுவ அறிக்கையும் அனுப்பக்கூடாது.

இந்தச் செய்தியில் கூறப்பட்ட விடயங்கள் உங்களால் திருத்தப்படாத நிலையில் அது சரியானதென்றே நான் கருத்தில் கொள்கின்றேன். அமைச்சர் பீரிஸ் கடந்த 11ஆம் திகதி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அதேபோன்ற கருத்தையே மீள வெளிப்படுத்தினார்.

இந்த விடயத்தில் மௌனத்தில் இருந்து நான் வெளிவரவேண்டிய நேரம் வந்துவிட்டதாகக் கருதுகின்றேன். நாட்டின் இறைமையையும், ஆட்புல ஒருமைப்பாட்டையும் மற்றும் மக்களின் பாதுகாப்பையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசமைப்பு மூலம் என்மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் மிக முக்கியமானதெனக் கருதப்படும் திருகோணமலைக் கடற்படைத்தளத்துக்கும் துறைமுகத்துக்கும் ஏற்பட்டுள்ள பாதுகாப்புச் சம்பந்தமாக பிழையான எண்ணக்கருவை உருவாக்கும் நோக்கில் தாங்களும் தங்களது ஊடகப் பேச்சாளரும் பாதுகாப்பு அமைச்சரும் விடுக்கும் பொய்யான தகவல்கள் சம்பந்தமான சில வினாக்களைக்கேட்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டுள்ளது.

நான் உண்மைத் தகவல்களைக் கீழே தருகின்றேன்:-

1. திருகோணமலையில் விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்பே முகாம்களை அமைத்திருந்தனர் எனவும், அவற்றால் பேராபத்து இல்லையெனவும், தாங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு தளபதிகள் எனக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இருந்து முற்றாக மாறுபடுகிறது.

2. திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கும் துறைமுகத்துக்கும் விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள கடும் அச்சுறுத்தல் மற்றும் இந்தப் பாதுகாப்பு நிலைமை மேலும், பலவீனமடைவதற்கு இடமளிக்கக் கூடிய வகையில் தாங்களும் பாதுகாப்பு அமைச்சரும் கடைப்பிடிக்கும் பொறுப்பற்ற நடவடிக்கைகள் ஆகியன குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன். இது சம்பந்தமாக எனது சிரேஷ்ட வெளிவிவகார ஆலோசகர் மற்றும் பாதுகாப்பு விவகாரம் தொடர்பான ஆலோசகர் ஆகியோருக்கு மேலும் விளக்கங்களை அளிக்குமாறு படைத் தளபதிகளிடம் நான் கேட்டிருந்தேன். அவ்வாறு கேட்டதற்குக் காரணம் படைத்தளபதிகள் மூலம் கிடைக்கும் அறிக்கைகளிலிருந்து எனது ஆலோசகர்கள் எனக்குச் சரியான தகவல்களையும் அறிக்கைகளையும் தருவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கும் என்பதனாலாகும். ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களுக்கு படைத் தளபதிகள ஏன் தகவல்களை வழங்கினார்கள் என்று கேட்டு வினா எழுப்பி அறிக்கை விடுவதற்கு முன்பு, இலங்கை ஜனநாயக குடியரசின் 1978ஆம் ஆண்டு அரசமைப்பைத் தெளிவாக வாசித்துப் பார்க்கும்படி உங்கள் மூலம் அமைச்சரவைக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள வர்களுக்கு விசேடமாக ஜிஎல்பீரிஸுக்கு - ஆலோசனை கூறப்பட வேண்டியுள்ளது.

03) இந்த நிலைமை குறித்து உங்களுக்கோ அல்லது பாதுகாப்பு அமைச்சருக்கோ விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார். அது முற்றிலும தவறானது ஆகும். தாங்கள் 2003 ஏப்ரலில் திருகோணமலைக்குச் சென்ற போது பாதுகாப்பு நிலைமை பலவீனமடைந்துள்ளது குறித்தும் அங்குள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் குறித்தும், 200 அதிகாரிகள் முன்னிலையில் மாரப்பன மற்றும் மொறகொட ஆகிய உங்கள் அமைச்சர்களுக்குத் தான் விளக்கமளித்தார் என்று கடற்படை ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக சில வாரங்களுக்கு முன்னர் தங்களுக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் அலரி மாளிகையில் வைத்து நீண்டதோர் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, கடந்த ஓகஸ்ட் மாதம் பாதுகாப்பு அமைச்சர் திருகோணமலை சென்ற போது முப்படைத் தளபதிகளின் முன்னிலையில் பாதுகாப்பு அதிகாரிகள் பெரும்பாலானோரால் இதுபற்றி மேலதிக விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இவ்வனைத்து விவரங்களையும் நீங்கள் மறுப்பது குறித்து நான் அதிர்ச்சி அடைந்துள்ளேன்.

04) இவற்றிற்கு மேலதிகமாக, பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் எனது பேச்சாளர் ஆகியோர் கலந்து கொண்ட தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள பல வற்றில் திருகோணமலையின் பாதுகாப்புச் சம்பந்தமான இப்பிரச்சினை குறித்து பல முறை நான் கேள்வி எழுப்பியுள்ளேன். அண்மையில நடைபெற்ற பாதுகாப்புச் சபை கூட்டத்தின்போது திருகோணமலை சம்பந்தமான பாதுகாப்பு நிலைபற்றி பாதுகாப்பு அமைச்சருக்கு நான் கடும் எச்சரிக்கைகளை விடுத்தேன். தங்களுடனும் இனப்பிரச்சினைகள் குறித்து மிகவும் ஆழமான ஆலோசனைகளை நடத்தி விடுதலைப் புலிகளின் முகாம்களை நீக்குவது சம்பந்தமாகப் பயனளிக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினேன். இவ்வாறு ஆலோசனைகளை வழங்குவதற்குக் காரணம் இந்த முகாம்களை நீக்குவது சம்பந்தமாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் மேற்கொண்ட முயற்சிகள் முற்றாகச் செயலிழந்தமையாகும்.

என்னுடைய 2003 ஓகஸ்ட் 23 என்ற தேதியிட்ட கடிதத்தில் நான் இந்த விடயம் குறித்து பின்வருமாறு வினா எழுப்பியிருந்தேன். தங்கள் முடிவை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் இருப்பதை கண்காணிப்புக் குழுவினர் ஒப்புக் கொண்டுள்ளனர். தங்கள் முடிவை அமுல் செய்வதற்கு அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை என்பது தெளிவாகின்றது. எனவே இந்த முகாமை வாபஸ் பெறச் செய்வதற்கு அரசின் அதிகாரம் விரைந்து பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகிறது.

## அதிர்ச்சி தரும் தகவல்

புலிகள் ஆயுதங்களைக் குவிப்பது குறித்தும் துருப்புக்களைக் குவிப்பது குறித்தும் பாதுகாப்பு அமைச்சிடம் அண்மையில் நடந்த தேசிய பாதுகாப்புச சபைக் கூட்டத்தில் நான் கேட்ட போது அவர் பாதுகாப்புப் படைகள் அதையே செய்வதால் புலிகளுக்கும் ஆயுதங்களைக் குவிக்க வேண்டிய தேவையுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்று பதில் அளித்தமை என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஓர் இறைமையுள்ள நாட்டின் சட்டபூர்வ இராணுவத்தையும் ஒரு பயங்கரவாத இயக்கத்தின் சட்டபூர்வமற்ற படையணியையும் சட்ட ரீதியாகவும் மற்றும் தார்மீக ரீதியாகவும் சம தரப்பினராக வைப்பதற்கு நீங்களும் உங்கள் அமைச்சர்கள் சிலரும முனைகிறீர்களா?

முன்னைய தேசிய பாதுகாப்புச் சபை கூட்டங்களின் அதிர்ச்சி தரும் வகையில் அமைச்சர்மாரப்பன வெளி



யிட்ட பொறுப்பற்ற கூற்றுக்களில் இதுவும் ஒன்றே.

பின்வரும் விடயங்கள் உட்பட பல விடயங்கள் குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களுடனும், பாதுகாப்பு அமைச்சர், முப்படைத்தளபதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு தேவையான வழிகாட்டல்களை நான் வழங்கியுள்ளேன். அத்தோடு தங்களுக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் எழுதியுமுள்ளேன்.

★ அதியுயர் பாதுகாப்பு வலயம்

★ யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் 13 தடவைகள் புலிகளின் தாக்குதலுக்குள்ளான கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

★ ஜனநாயக தமிழ் அரசியல்வாதிகள் கொலை செய்யப்படுவது.

★ தமிழீழ நீதிமன்றங்களை நிறுவுதல்

★ ஈழம் பொலீஸ் படை, வங்கி முறை, வரி அறவீட்டு முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை.

★ பிள்ளைகளைப் பலவந்தமாக யுத்த சேவையில் இணைத்தல்.

★ இலங்கைப் படைவீரர்களை கொலை செய்தல்.

★ விடுதலைப்புலிகளின் ஆயுதக் கடத்தல்.

இந்நிலையைத் திருத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நீங்கள் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் இந்த நிலமையை திருத்துவதற்காக பாதுகாப்பு படைத் தளபதிகளுடன் நேரடியாக நானே தொடர்பு கொண்டு செயற்பட வேண்டியதாகியுள்ளது.

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விடயம் உங்களை மட்டும் சார்ந்தது. அத்தகைய முக்கிய விடயத்தில் எனக்கு பங்களிப்பு இல்லை என்று நீங்கள் நம்பவைக்க முயல்கிறீர்கள்.

உங்களின் 2003 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் முழுப் பாதுகாப்பையும் பேணும் அதே சமயம், சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் முழுப்பொறுப்பும் இந்த அரசைச் சார்ந்தது என்று இந்த நாட்டு மக்கள் ஆணை தந்திருக்கிறார்கள் என்பதே என்றும் எனது நிலைப்பாடாகும். மக்கள் எம்மீது சுமத்தியுள்ள இந்த நம்பிக்கையை நிறைவு செய்வதில் நான உறுதியாகவுள்ளேன்....", "இது போன்ற நேரத்தில் அரசியல் சந்தர்ப்பவாதத்தின் அடிப்படையில் செயற்படுவது சரியான அணுகுமுறை அல்ல என்பதே எனது நிலைப்பாடு" என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறைமையை உறுதிப்படுத்துமாறு அரசை வற்புறுத்துவது அரசியல் சந்தர்ப்பவாதமா? நீங்கள் குறிப்பிடும் இந்தக் கருத்தை நீங்கள் முழுமையாக நம்புகிறீர்களேயானால், நாட்டின் மிக முக்கிய விடயத்தை இலகுவாக எடுத்துக் கொள்ளும் ஒரு பிரதமரை கொண்டிருக்கும் மோசமான நிலையிலேயே நாடு இருக்கிறது என்பதை ஆழ்ந்த கவலையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதமர் அவர்களே! நீங்களும் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த ஐ.தே.க.அரசினால் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்பைக் கவனமாக நோக்கும்படி நான் சிபாரிசு செய்கிறேன்.

(12ஆம் பக்கம் பார்க்க)




தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.

- தியாகி திலீபன்.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கொலம்பியாவில் கடத்தப்பட்டனர்!

பொகொட்டா,செப்.16

கொலம்பியாவிற்கு சுற்றுலாச்சென்ற 8 வெளிநாட்டவரை எவ்.ஏ.ஆர்.சி. கெரில்லாக்கள் கடத்திச் சென்றுள்ளனர். கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க ஆயிரக்கணக்கான படையினர் தேடுதலில் இறங்கியுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களில் நால்வர் இஸ்ரேலியர்கள்; இருவர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள்; ஏனைய இருவரும் ஜேர்மனி, ஸ்பெயினைச் சேர்ந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தலைநகர் பொகொட்டாவில் இருந்து வடக்காக 760 கி.மீ. தூரத்தில் உள்ள சியரா நெவாடா மலைப் பகுதியில் இச்சம்பவம் நடந்துள்ளது.

கடத்தப்பட்டவர்களைத் தேடும் பணியில் படையினருடன் இணைந்து உலங்குவானூர்திகளும், விமானங்களும் ஈடுபட்டிருக்கின்றன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள கடத்தப்பட்டமைக்கு ஜனாதிபதி அல்வரோ ஊறிப் வருத்தம் தெரிவித்துள்ளார்.

கபேயன் தீவுகளுக்கு அருகில் அரச படைகளின் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள கிராமம் ஒன்றுக்கு சுற்றுலாப் பயணிகள் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் ஊகங்கள் தெரிவிக்கின்றன.

சுற்றுலாப்பயணிகள் கடத்தப்பட்ட மலைப்பகுதி கெரில்லாக்களின் ஆதிக்கம் நிறைந்த பகுதி என்று தெரிவிக்கப்படுகிறது.

இங்கு வருடம்மொன்றிற்கு சராசரியாக 3 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் கடத்தப்படுகின்றனர். பணயப்பணத்தை எதிர்பார்த்து குறைந்தது ஐந்து ஆண்டுகள் வரை அவர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்படுகின்றனர் என்று பொலீஸார் மேலும் கூறினர்.

இரண்டு வருடங்களுக்கு முன் கடத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் இன்கிரிட்பெட்ரன் கோட் தற்போதும் கிளர்ச்சியாளர்கள் வசம் பணயக் கைதியாக இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



எவ்.ஏ.ஆர்.சி.கெரில்லாக்களின் முகாம் ஒன்று.

# பிரிட்டிஷ் தூதரகம் மீது ஈரானில் மீண்டும் சூடு!

தெஹ்ரான்,செப்.16

ஈரானிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் மீது நேற்றுமுன்தினம் மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் நடந்த மூன்றாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இதுவாகும். இதில் எவரும் காயமடையவில்லையாயினும் கட்டடத்தின் கண்ணாடி, ஜன்னல்கள் நொறுங்கின.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடினர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி முதலாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது. இதனால் அங்கு, பணியாற்றிய மேலதிக ஊழியர்கள் தாயகத்திற்கு திருப்பி அழைக்கப்பட்டனர்.

இரண்டாவது சூட்டுச் சம்பவம் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி நடந்தது. இச்சம்பவங்களை அடுத்து ஈரானுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் விரிசலடைந்திருந்தன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மூன்றாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

ஆர்ஜென்ரீனாவுக்கான ஈரானிய முன்னாள் தூதர் சொலமன்பூர் (வயது-47) பிரிட்டனில் கடந்த ஓகஸ்ட் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்ட பின்னரே மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

கைது செய்யப்பட்ட சொலமன்பூர் கடந்த வெள்ளிக்கிழமை 1.16 மில்லியன் டொலர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்ட அமைச்சரின் முயற்சி பலிக்கவில்லை

# யூரோ நாணயத்தைச் சுவீடன் நிராகரிப்பு!

யூரோ நாணயத்தை சுவீடனில் நடைபெற்ற கருத்துக்கணிப்பு நிராகரித்துள்ளது. யூரோவை சுவீடனில் ஏற்கக்கூடாது என்று 56.1 சத வீதத்தினரும் ஏற்க வேண்டுமென 41.8சத வீதத்தினரும் வாக்களித்துள்ளனர்.

யூரோ நாணயத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்த வெளியுறவு அமைச்சர் அனாலின்த் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டதால் யூரோ நாணயத்திற்கு ஆதரவான வாக்குகள் அதிகரிக்கும் என்று கருதப்பட்டது.

ஆனால், யூரோவை ஏற்கவேண்டுமென 41.8 சதவீதமானோரே வாக்களித்தனர்.

யூரோவை ஆதரித்த வாக்குகளில் பெரும்பாலானவை அமைச்சர் அனாலின்த் படுகொலைசெய்யப்பட்டதன் அனுதாபத்தினாலேயே விழுந்தன என்று அபிப்பிராயங்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன், டென்மார்க் போன்ற நாடுகளின் யூரோ எதிர்ப்பாளர்கள் இந்தக் கருத்துக்கணிப்பின் முடிவை வரவேற்பார்கள் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யூரோ எதிர்ப்பாளர்களுக்கு இது ஒரு வெற்றி என்று பிரதமர் கோரன் பேஸ்சன் கூறியுள்ளார். யூரோ நாணயத்தை ஏற்பது குறித்து எதிர்வரும் பத்து வருடங்களுக்கு கருத்துக் கணிப்பு நடத்தப்படமாட்டாது என்றும் அவர் கூறியுள்ளார்.

யூரோ நாணயத்தை சுவீடன் ஏற்காததால் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் எடுக்கும் சக்தி மீது சுவீடனின் செல்வாக்குக் குறைந்துள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ரோமானோபரோடி தெரிவித்துள்ளார்.

# முகச்சவரம் செய்தால், பாட்டுக் கேட்டால் மூக்கும், காதுகளும் வெட்டி அகற்றப்படும்!

## தலிபான்கள் மீண்டும் கடும் எச்சரிக்கை

காபூல்,செப்.16

ஆப்கானிஸ்தானில் மதச் சட்டங்கள் மீறி முகச்சவரம் செய்பவர்கள், இசை நிகழ்ச்சிகளை கேட்பவர்களுக்கு மூக்கும், காதுகளும் வெட்டப்படும் என்று தலிபான்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2001ஆம் ஆண்டு அமெரிக்கப் படையினர் ஆப்கானை ஆக்கிரமித்ததையடுத்து தலிபான்களின் ஆட்சி வீழ்ந்தது. எனினும், அவர்கள் மலைக்குகைகளிலும், கிராமப் புறங்களிலும் பதுங்கியிருந்தவாறு இடையிடையே தாக்குதல் நடத்தி வந்தனர்.

ஆனால், அமெரிக்க போர் விமானங்கள் ஆப்கானில் உள்ள மலைக் குகைகளில் கதிர் வீச்சுக்குண்டுகள் வீசி தலிபானகளை அங்கிருந்து விரட்டியது.

அங்கு, தற்போது மீண்டும் தலிபானகளின் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இடையிடையே அங்குள்ள அமைதிப் படையினர் மீது தலிபான்கள் மூர்க்கத்தனமான தாக்குதலைத் தொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், மேற்படி எச்சரிக்கையை தலிபான்கள் விடுத்துள்ளனர்.

இந்த எச்சரிக்கை, சுவரொட்டிகள் மூலமும், வாகனங்கள் மறிக்கப்பட்டு பயணிகளுக்கும் விடுக்கப்பட்டிருக்கிறது. இதனைக் காபூலில் உள்ள மாகாண ஆளுநர் அயதுல்லா பாபா தெரிவித்தார்.

தலைநகர் காபூலில் இருந்து 140 கி.மீ. தூரத்தில் உள்ள சரின் மாவட்டத்திலேயே எச்சரிக்கை சுவரொட்டிகள் அதிகம் காணப்படுகின்றன.

தலிபான்களின் ஆட்சி வீழ்ந்தபின, ஆப்கானில் சமூகச் சீர்கேடுகள் தலைதூக்கின; மக்கள் தவறாக வழி நடத்தப்பட்டனர்.

தலிபான்கள் தமது ஆட்சியின் போது முகச்சவரம் செய்வதற்கும், வானொலி கேட்பதற்கும் தடைவிதித்திருந்தனர். ஆனால், தலிபான்களின் ஆட்சி வீழ்ந்த பின்னர், அங்கு மேற்படி நடைமுறை மீறப்பட்டது.

இதனால், ஆரம்பத்தில் பலரின் மூக்கும், காதுகளும் வெட்டப்பட்டன. தற்போது மீண்டும் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு தலிபான்கள் கேட்டிருக்கின்றனர்.

இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கத் தவறுவோர் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தலிபான்கள் கூறியுள்ளனர்.

# அரபாத்தை தீர்த்துக்கட்ட திட்டம்

ஜெருசலேம்,செப் 16

அரபாத்தை தீர்த்துக்கட்டினால் நிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சு தொடரும் சாத்தியம் உண்டு என்று இஸ்ரேலியத் துணைப் பிரதமர் எஹித் வோல்டர் தெரிவித்துள்ளார்.

அரபாத்தைத் தனிமைப்படுத்த அல்லது நாட்டிலிருந்து விரட்டியடிக்க இஸ்ரேல் முடிவுசெய்ததற்கு பல்வேறு தரப்புக்களிலிருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கும் நிலையில் மேற்படி கருத்தை அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:-

அரபாத்தைத் தீர்த்துக்கட்ட வேண்டும் அல்லது அவரை முழுமையாக நாட்டைவிட்டுத் துரத்த வேண்டும். அப்போதுதான் நிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சு தொடர வழிபிறக்கும்.

தீவரவாதத்தை அழிக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. அரபாத் தும் ஒரு தீவிரவாதிதான் - என்றார்.

இஸ்ரேலிய துணைப் பிரதமரின் தான்தோன்றித்தனமான இந்தப் பேச்சுக் குறித்து கருத்துக் கூறியுள்ள பலஸ் தீன அதிகாரிகள் சமாதானப்பேச்சுக்கு அரபாத் முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்று கூறுவது தவறு. இஸ்ரேலிய துணைப் பிரதமரின் மேற்படி சிந்தனையும் வார்த்தை ஜாலமும் மா'பியா கும்பலின் செயற்பாடுகளைப்போலுள்ளது - என்றனர்.

துணைப்பிரதமரின் மேற்படி கருத்தை அமெரிக்கா உள்ளிட்ட பல வேறுநாடுகள் கடுமையாகச் சாடியிருக்கின்றன.

# ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் உள்ளனவா? அறிக்கையை வெளியிட அமெரிக்கா பின்னடிப்பு!

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளன என்று கூறி அந்நாட்டை ஆக்கிரமித்த அமெரிக்கா, இதுவரை அத்தகைய ஆயுதங்கள் எதனையும் அங்கு கண்டுபிடிக்கவில்லை. இதனால், இதுதொடர்பான இறுதி அறிக்கையை வெளியிட அமெரிக்கா பின்னடித்து வருகிறது.

பேரழிவு ஆயுதங்கள் குறித்து இறுதி அறிக்கை நேற்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அறிக்கை வெளியிட ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு அமெரிக்கா தெரியப்படுத்தியுள்ளது.

### யுரேனியம் திருட்டு!

பிரிட்டனில், பர்'பிளீட் என்ற இடத்தில் உள்ள நிறுவனம் ஒன்றிலிருந்த 15 கிலோகிராம் யுரேனியம் திருடப்பட்டுள்ளது. இதனால், நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மிகப்பெரிய அளவில் யுரேனியம் திருட்டுப்போனது பிரிட்டனில் இதுவே முதல்தடவை. திருடப்பட்ட யுரேனியத்தைக் கொண்டு, குண்டுகள் தயாரித்து நாட்டில் பெரும் அழிவுகளையுண்டாக்க முடியும் என்பதால் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

யுரேனியம் திருடப்பட்டது குறித்து நாடு முழுவதுமுள்ள பொலீஸ் நிலையங்களுக்குத் தகவல்கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை குறித்து பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'தி சன்டே ரைம்ஸ்' பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் மறைத்துவைக்கப்பட்டுள்ளனவா? என்பதை அறிய அமெரிக்கா, பிரிட்டனைச சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், புலனாய்வு நிபுணர்கள், படையினர் ஆகியோர் சோதனைகளை நடத்தினர். ஆனால், நான்கு மாதங்களுக்கும் மேலாக நடந்த இந்தச் சோதனைகளில் குறிப்பிடும்படியாக எதுவும் கடைக்கவில்லை.

இதனால், இது குறித்த அறிக்கையை வெளியிட அமெரிக்கா பின்னடித்து வருகிறது. சில வேளைகளில் இந்த அறிக்கை வெளியிடப்படாமலேயே போகலாம் - என்றுள்ளது.

பேரழிவு ஆயுதங்களைத் தயாரிக்க சதாம் திட்டமிட்டிருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று ஈராக்கில் ஆயுதங்கள் தேடும் குழுவுக்கு தற்போதைய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டேவிட் கே கடந்த வாரம் கூறியிருந்தார்.

ஆனால், நம்பும்படியான ஆதாரங்கள் எவையும் கிடைக்காததனால் டேவிட் கே கதைவிடுகிறார் என்று போரை எதிர்த்த பிரிட்டிஷ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

டேவிட் கே, தனது இறுதி அறிக்கையை அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.தலைவர் ஜோர்ஜ் டெனட்டிடம் இந்த வாரம் முடிவதற்குள் சமர்ப்பிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கினியாவில் இராணுவப் புரட்சி!

லிஸ்பன்,செப்.16

ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள கினியாவில் இராணுவத்தினர் ஜனாதிபதிக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டு ஜனாதிபதி கம்பாயாலாவை சிறை பிடித்துள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமரின் நிர்வாகம் நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்திவிட்டது என்று தெரிவித்தே இராணுவத்தினர் புரட்சி நடத்தி ஆட்சியை கைப்பற்றியுள்ளனர்.

புரட்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் ஜனாதிபதி கம்பாயாலாவை கைது செய்து இரகசிய இடத்தில் அடைத்துள்ளனர். அதேபோல் பிரதமரையும் கைதுசெய்ய தேடுதல்களையும் அவர்கள் நடத்துகின்றனர்.

இராணுவத்தினர் அரசவானொலி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஆட்சியை இராணுவம் கைப்பற்றிக்கொண்டது. பொதுமக்கள் எவரும் வன்முறைகளில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுள்ளனர்.

இராணுவத்தினர் கடந்த ஜூலை மாதம் இதேபோல் புரட்சி நடத்திய போதும் அந்தப் புரட்சியை அரசுக்கு ஆதரவான இராணுவத்தினர் முறியடித்தனர். ஆனால், தற்போது அரசுக்கு எதிரான இராணுவத்தினரின் புரட்சி வெற்றிபெற்றுள்ளது.


உங்கள் மகிழ்ச்சியான மணநாளினை மங்களகரமாக தெரிவியுங்கள்

இதுவரை அச்சிடப்படாத புத்தம்புதிய வடிவமைப்பில் மங்களகரமான திருமண அழைப்பிதழ்கள்

போஸ்கோ நிறக்கலை அச்சகம்
(Off - Set & Screen Printing)
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

பலநூற்றுக்கணக்கான தெரிவுகளில்

பொஸ் காகிதாதியாளர் (போஸ்கோ)
03,நவீனசந்தை, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

# இலங்கை-இந்திய கப்பல் சேவைக்கு விரைவிலேயே மற்றுமோர் ஒப்பந்தம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

"இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்குமிடையே கம்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு எமது அரசாங்கம் விருப்பம் தெரிவித்தது. அதனை தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதா வரவேற்கவில்லை. எனினும், மற்றோர் ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும். இலங்கையும், இந்தியாவும் நட்பு நாடுகளாகும். இருநாடுகளுக்குமிடையே வர்த்தக உறவுகளை மேம படுத்துவதற்காக எமது பிரதமர் சிந்தித்துச் செயற்படுகிறார். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பாலம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அதற்காகவே அவர் ஆர்வம் காட்டிச் செயற்படுகிறார்..

கொழும்பு முகத்துவாரம் ஹம்ஸா மகா வித்தியாலய கலாசூரி ஆர்.சிவ குருநாதன் அரங்கில் அண்மையில் நடைபெற்ற 'வரலாற்றில் இலங்கை கண்ட குமரி' என்ற நூல் அறிமுக விழாவில் உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நூல் அறிமுக விழாவில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை - இந்திய நல்லுறவுகளைப் பலப்படுத்தும் விதத்தில் தமது வர்த்தக முயற்சிகள் இந்தியாவுடன் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியாவுடன் கொள்கலன் ஏற்றுமதிகளை 50சத வீதம் நாம் கையாண்டு வருகிறோம். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைக்கப்பட்டால் பல மில்லியன் கொள்கலன்களை நாம் ஏற்றி இறக்கலாம். இதனால் இரு நாடுகளுமே பொருளாதார ரீதியில் நன்மைபெறும்.

உலக நாடுகளிடையே இலங்கை கொண்டுள்ள வர்த்தகக் கொள்கைகளை இலகுவாக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் கொண்டுள்ளார். அதன் வாயிலாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவர் ஆவலுடன் செயற்படுகிறார். இதனை நாம் அடைவதற்கு நாட்டில் நிரந்தர சமாதானத்தைக் கண்டடையவேண்டும். சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படக் கூடிய விதத்தில் சமாதானப் பேச்சுகள் நிறைவடைய வேண்டும். அதுவே நாட்டின் நிரந்தர பொருளாதார அபிவிருத்திக்கும் சமாதானத்திற்கும் வழி அமைக்கும்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1962 - 05 - 17

இறப்பு 2002 - 09 - 12

அமரர்

### கந்தையா மோகனச்சந்திரன்

என்றும் உம் நினைவுடன்...

5ஆம் ஒழுங்கை, அரசடி, நல்லூர்.

- குடும்பத்தினர்.

(22638) (26-21-14-19)

---

## 7ஆம் ஆண்டின் நினைவலைகள்



மண்ணில் விதையாக 01 - 10 - 1939

விண்ணில் சிதையாக 16 - 09 - 1996

### அமரர் பூதர் இரத்தினம்

(ஓய்வுபெற்ற ஊழியர் - காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம், முன்னாள் தலைவர் - தெல்லியூர் வாலிபர் ஐ.ச. சனசமூக நிலையம்)

அன்பின் சிகரமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய்
எமையெல்லாம் நல்வழிப்படுத்திய
அன்புத் தந்தையே! ஆண்டுகள்
ஏழு கரைபுரண்டோடினாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
இதயத்தில் மலரும்.

(22637) (25-14-19-21)

தூர்க்கா மில் அருகில், பொன்னாலை வீதி, மானிப்பாய்.

உங்கள் நினைவில்: - குடும்பத்தினர்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 21 - 07 - 1939

மறைவு 17 - 08 - 2003

### திருமதி கயிலாசபிள்ளை பரமேஸ்வரி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்வையும்
தெய்வத்துள் நீக்கமற நிலைத்து விட்ட தாயே!
வையத்துள் நாம் வாழும் காலம் வரை நீங்கள்
தெய்வமாக என்றும் எமக்கு வழிகாட்டி நிற்க வேண்டும் தாயே!

பாரினில் மாண்புற நாம் வாழ்வதைப் பார்த்து
மகிழ்வாய் என்றிருந்தோம் பாதியில் எம்மை
விட்டு நீர் சென்றதேனோ?
புதிதாய் பூமியிலே பூவொன்று பூக்குமுன்
பூவுலகம் நீதுறந்ததேனோ?

17.08.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவில் பல வழிகளிலும் பங்குகொண்டு உதவிகள் புரிந்து ஆறுதல் கூறி, அனுதாபச் செய்திகள் அனுப்பி, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 15.09.2003 திங்கட்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. இன்று (16.09.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


காளிகோயிலடி, மல்லாகம்.

(22462) (26-21-14-19)

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04 - 10 - 1942

மறைவு 15 - 08 - 2003

### அமரர் சிதம்பரப்பிள்ளை பூபாலசிங்கம்

(லுணுகல முன்னாள் பிரபல வர்த்தகரும், காரை மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் திருப்பணிச்சபைத் தலைவரும்)

ஸ்ரீ முருகப்பெருமான் மீது இடையறாத பக்திகொண்டு நல்லொழுக்க சீலராகத் திகழ்ந்து அவருடைய பாதார விந்தங்களைச் சென்றடைந்து அமரத்துவமுற்ற இவரது ஆத்மா சாந்தியடைய அந்த எல்லாம்வல்ல புகலி சிவசுப்பிரமணியரான ஆறுமுகப்பெருமானையே ஆராதித்து இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

- திருப்பணிச் சபையினரும் நிர்வாகமும்

மணற்பிட்டி, காரைநகர்.

(22610) (25-21-14-19)

---

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 03 - 02 - 1977

மறைவு 17 - 09 - 1997

செல்வன்

### கயிலாசபிள்ளை நித்தியானந்தன்

ஆண்டுகள் பல அகன்றாலும்
அகலாது உன் நினைவுகள்
நீயும் அங்கே எம் அம்மாவுடன்
கலந்திருப்பாய் என கண்ணீர் விடுகின்றோம்
ஆண்டுகள் தான் பல அகலும்
ஆனால் நாமோ நித்த நித்தம்
உனைநினைத்து நினைத்து தவிக்கின்றோம்
நொந்துபோன இதயத்துடன்
விதியை நினைத்து நினைவு கூருகின்றோம்.

காளிகோயிலடி, மல்லாகம்.

(22463) (26-21-14-19) - குடும்பத்தினர்.

உதயன்

# பேச்சு முயற்சிக்கு இன்று வயது ஒன்று

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான, சமாதான முயற்சிகள் வெறும் காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடுகளாக முன்னெடுக்கப்படுவதைப் பார்த்து பொதுமக்கள் - அமைதி விரும்பிகள் - சமாதானப் பிரியர்கள் - விசனமடைந்திருக்கின்றார்கள்.

இனப்பூசல் காரணமாகக் கொடூர யுத்தம் புரிந்து வந்த அரசுப்படைகளும் விடுதலைப் புலிகளும் மோதலை நிறுத்தி, இருபது மாதங்கள் கடந்துவிட்டன; இருதரப்பு யுத்த நிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 18 மாதங்கள் முடிந்து விட்டன; அரசும் - புலிகளும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பித்தும் இன்றோடு ஒரு வருடமாகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நின்று நிலைத்து நீடித்தாலும் கூட-

அதன் அடிப்படையிலான இருதரப்பு யுத்தநிறுத்தம் குலையாமல் தாக்குப் பிடித்தாலும் கூட - ஏழு மாதங்களாக நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்கள் மட்டும் அதோடு இடைநிறுத்தப்பட்டுவிட்டன.

இடைநிறுத்தப்பட்ட பேச்சுக்கள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என்று பல தரப்புகளிலிருந்தும் திரும்பத் திரும்பக் கூறப்பட்டாலும் அத்தகைய நம்பிக்கையை ஏற்படுத்தும் முன்னேற்றங்கள் ஏதும் களத்தில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

நடைபெற்று முடிந்த ஆறுசுற்றுப் பேச்சுக்களின் போதும் பல்வேறு விடயங்களில் இணக்கம் காணப்பட்டது; முடிவுகள் எட்டப்பட்டன; தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை யாவும் புறக்குடத்து நீராக வீணாகிப் போனதுதான் மிச்சம்.

இந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கடுமையான நிலைப்பாடு எடுத்தமையே பேச்சுக்கள் பயன்தராமல் தடக்குப்பட்டு நிற்பதற்குக் காரணம் என்ற சாரப்பட ஒரு பிரசாரம் இராஜதந்திர வட்டார மட்டத்தில் பரப்பப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டமிட்ட பரப்புரை - பசப்புரை - முற்றிலும் தவறானது என்பதை சர்வதேச சமூகம் - குறிப்பாக இராஜதந்திரிகள் - உணர்ந்து கொள்வது அவசியமாகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் இம்முறை ஆட்சி பீடத்துக்கு வரமுன்னரே - பொதுத்தேர்தலுக்கு முன்பே - தமது தனிப்பட்ட தொடர்புகள் மூலம் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை அணுகி எழுத்தில் இல்லாத சில உடன்பாடுகளுக்கு வந்திருந்தார்.

தனது அரசு ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் என்பதும், அதற்கு முன்னேற்பாடாக வடக்கு - கிழக்கின் நிர்வாகம் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு புலிகளுக்கு வழங்கப்படும் என்பதும் அந்த உடன்பாட்டில் இடம்பெற்ற விடயங்கள்.

சமாதானத்துக்கான நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமான சமயத்தில்கூட, இந்த உடன்பாட்டின் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தும்படி புலிகள் அரசை வற்புறுத்தவில்லை. எடுத்த எடுப்பில் வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைப்பதில் அரசுக்குள்ள சங்கடங்களைப் புரிந்துகொண்ட புலிகள், 'சிரான்' உபகுழு போன்ற மாற்று ஏற்பாடுகள் மூலம் இவ்விடயத்தை சுமுகமாக - பல தரப்பு இணக்கத்தோடு - தீர்த்துக் கொள்ள விரும்பினர். அதற்காக விட்டுக்கொடுப்புகளைச் செய்து - கீழிறங்கி வந்து - நிர்வாகத்துக்குப் பொறுப்பான 'உபகுழு' ஒன்றை ஏற்கவும் முன்வந்தனர்.

ஆனால், புலிகளின் இந்தத் தளர்வுப் போக்கை பிழையாகப் புரிந்துகொண்ட அரசுத்தரப்பு, மேலும் மேலும் இழுத்தடிப்புக்களை மேற்கொண்டதோடு, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணவும் மறுத்தது. பேச்சுக்களில் உடன்பட்ட விடயங்கள் செயலுருப் பெறாமல் காற்றில் பறக்க விடப்பட்டன.

இரு தசாப்தகால கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் தனது மக்களின் அன்றாட - அவசர - அவசிய - விவகாரங்களுக்கு உடனடித் தீர்வு பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் - தன்னுடைய அடிப்படைக் கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாத நிலையில் - வேறு வழியின்றி சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் புலிகள்.

வடக்கு - கிழக்குக்கு செயல்திறன் மிக்க இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே - இந்த முட்டுக்கட்டை நிலையை நீக்கி - பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வழி செய்யமுடியும்.

அத்தகைய இடைக்கால நிர்வாகத்துக்கான தமது உத்தேச வரைவை இம்மாத இறுதியில் புலிகள் அரசுக்குச் சமர்பிக்கப்போகின்றார்கள். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பதில்தான் சமாதான முயற்சிகளின் எதிர்காலமே தங்கியிருக்கின்றது.

மொத்தத்தில் பந்து மீண்டும் அரசின் களத்துக்குப் போகப்போகின்றது. அதை அரசு எப்படி விளையாடப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

17 கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு

## சுழற்சிமுறைக் கடன் திட்டத்தின் கீழ் 78 கண்ணாடி இழைப்படகுகள்

யாழ். மாவட்டத்தில் உள்ள 17 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன 78 கண்ணாடி இழைப்படகுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுழற்சிமுறைக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் இந்தப் படகுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கண்ணாடி இழைப் படகுகளுக்கென ரூ.39லட்சத்தை ஐ.நா.அபிவிருத்தித் திட்டமும் -

ஏனைய 39லட்சம் ரூபா நிதியினை கடற்றொழில் சங்கங்களும் வழங்கவுள்ளன.

முதற்கட்டமாக ஒரு சங்கத்திற்கு நான்கு படகுகள் வீதம் 7 சங்கங்களுக்கு 28 படகுகள் வழங்கப்படும்.

ஏனைய 50 படகுகளும் இதுவரை சுழற்சிமுறைக் கடன் திட்டத்தின் கீழ் பயன்பெறாத 10சங்கங்களுக்கு ஒவ்வொரு சங்கத்திற்கும் 5 படகுகள் என்ற வீதம் கையளிக்கப்படும். (எ-ரி)

## நாட்டு நடப்பு

### நல்லையூர் கந்தன் திருப்பள்ளி எழுச்சி (6)

பற்பல வாலிபர் கூடிநின் றொன்றாய்
பாவையர் தம்மை [illegible]திடுகின்றார்
நாற்புறம் வாலிபர் மீது [illegible]யில் மறிக்க
நாணிநின்றார் [illegible]கின் மன வாளா
செப்புறு ஐஸ்கிறீம் திகழும் நல்லூ ரில்
சிறப்புற மணிக்கடை பற்பல கண்டார்
அற்புதமான அம்மணிக்கடைகளை நன்ன
அடி வயிற்றினில் நுள்ளுகின்றார்கள்
கற்புறு மங்கையர் காதலன் கையினில்
களவொடு நுள்ளிடக் கண்டாய்
பற்பல சோடிகள் பாங்குடன் இணைய
பார்வதி மைந்தா! பள்ளி எழுந்தருளாயே!!

\- விகடகவி.

# புலிகளே ஏகபிரதிநிதிகள் என்ற நிலையை கூட்டணி தொடரவேண்டும்

## தமிழ்க் காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி கோரிக்கை

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள்தான் என்ற கோட்பாட்டில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கடந்த தேர்தல் முதல் கூட்டுச்சேர்ந்தோம். அந்தக் கோட்பாட்டின்படி தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்ந்து செயற்படவேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் கரவெட்டிக் கோட்ட சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் அப்படிச் சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர் எஸ்.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளை அரசாங்கம் தடைசெய்த வேளையில் தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரன் தான் என்றும், தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்றும் முதன் முதல் கூறியவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம். இப்போதைய அரசியலுக்கு அத்திவாரமிட்ட பெருமை அவரையே சாரும். அதற்காகத்தான் தலைவர் பிரபாகரன் குமார் பொன்னம்பலத்திற்கு மாமனிதர் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

புலிகள் தடைசெய்யப்பட்டிருந்த 2002ஆம் ஆண்டு காலப் பகுதியில் புலிகள்தான் ஏகபிரதிநிதிகள் என முதன் முதல் நாடாளுமன்றத்திலும் தமிழ்க் காங்கிரஸ்கட்சிதான் கருத்துச்சொல்லியிருந்தது.

கடந்த 20வருட காலமாக செய்துவந்த அரசியலைத்தான் இப்போதும் எமது தலைவர்கள் செய்கிறார்கள். 2002ஆம் ஆண்டில் தூய அரசியலுக்காக புலிகளே ஏகபிரதிநிதிகள் என்ற காரணத்துக்காக கூட்டணியுடன் கூட்டுச்சேர்ந்தோம். அந்த நிலைப்பாட்டில் கூட்டணி தொடர்ந்து செயற்படவேண்டும். ஜப்பானியத் தூதுவர் அகாஷியிடம் நான் ஏதோ கூறியதாக ஆனந்தசங்கரி என்னைத்தாக்கி பத்திரிகைகளில் அறிக்கை விடுகிறார். ஜப்பானிய தூதுவருடனான ஒரு சந்திப்பின் போது உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது 1990 ஆம் ஆண்டு என்ன நிலையில் பாதுகாப்பு படையினர் இருந்தனரோ அந்த நிலையிலேயே இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன். அவ்வேளை ஆனையிறவைக் கொடுக்கச் சொல்லுகிறார்கள் என என்னிடம் ஆனந்தசங்கரி கேட்டார். இதனை நான் சொல்லவேயில்லை. இதுதான் உண்மையான நிலை வரம்.

இனிமேல் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப பேசும் அரசியலுக்கு இடமில்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

13ஆவது திருத்தத்துக்குப் பின்னரே இடைக்கால நிர்வாகத்துக்கு அடித்தளமிடப்பட்டது. பொலீஸ், காணி நிர்வாகத்துடன் கூடிய இடைக்கால நிர்வாக சபை புலிகளிடம் கொடுக்கப்பட வேண்டும் என தூதுவர் அகாஷியிடம் நான் கூறினேன். இடைக்கால நிர்வாக சபை மூலமே வடக்கு-கிழக்கை கட்டியெழுப்பலாம். அதனை புலிகள்தான் செய்ய முடியும்; எங்களால் செய்ய முடியாது. ஆனால், அவர்களுக்கு ஒத்தாசையாக நாம் இருப்போம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இரு சக்திகளை வளர்க்க சந்திரிகா, கதிர்காமர் ஆகியோருடன் இந்தியாவும் முனைந்து வருகிறது.

அதனால்தான் ஈ.பி.டி.பியினையும் அவர்கள் வளர்க்க முயல்கிறார்கள்.

மாற்றுக் கட்சிகள் உண்மையான அரசியலைச் செய்ய எவ்வித தடைகளும் இங்கு இல்லை. அரசாங்கத்தின் நிதியையும், உணவு நிவாரணங்களையும் பெற்றுக்கொண்டு அரசின் கைக் கூலிகளாகச் செயற்படுபவர்களுக்கு அரசியலில் இடமில்லை. தூய அரசியலுக்கு மட்டுமே இடமுண்டு.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்டச் செயலாளர் சொலமன் சூ.சிறில் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

(ம-70-173)

# தமிழர் பிரதேச தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்!

## அகாஷியிடம் தமிழர் மகாசங்கம்

காரைதீவு, செப்.16

"அம்பாறை மாவட்டத்தில் அடிக்கடி இடம்பெற்றுவரும் இன வன்முறைச் சம்பவங்களில் அதி உச்சளவு பாதிக்கப்படுவது தமிழ்ச் சமுதாயமே. அம்பாறை தமிழர்கள் இழந்தவை ஏராளம். அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. எனவே, அவற்றை ஈடுசெய்ய ஜப்பானிய அரசு தமிழர் பிரதேச தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்."

\- இவ்வாறு ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூஷி அகாஷியிடம் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கப் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கல்முனைக்கு கடந்த சனியன்று விஜயம் செய்த அகாஷியிடம், 9பக்க மகஜரொன்றை அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத் தலைவர் கே. சுப்பிரமணியம் கையளித்துப் பேசினார்.

"நாட்டின் சமாதான முன்னெடுப்புகளில் ஜப்பான் அதிக கரிசனை கொண்டு பங்கெடுத்து வருவது குறித்து எமது தமிழர் மகாசங்கம் வாழ்த்துகிறது.

அம்பாறை மாவட்ட தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை இம்மகஜருடாகச் சமர்ப்பிக்கிறோம்.

கணவனை இழந்த பெண்களும், பிள்ளைகளை இழந்த தாய்மாரும் தமிழ்ச் சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்த சோக அம்சங்களாகும். இது வரலாறு.

அரசின் புனர்வாழ்வு, புனரமைப்பு, நஷ்டஈடு மற்றும் உதவிக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட தமிழர்களின் கைக்குச் சென்றடைவதில்லை.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே நல்ல புரிந்துணர்வு நிலவுவதைச் சில அரசியல்வாதிகள் விரும்புவதில்லை. இதனால், சந்தேகங்களும் தப்பபிப்பிராயங்களும் ஏற்பட்டுள்ளன.

அவற்றைக் களைய ஜப்பானிய அரசு முன்னுரிமை வழங்க வேண்டும். தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றினால் இப்பகுதி தமிழ் - முஸ்லிம் உறவு நிச்சயம் மீண்டும் வலுப் பெறும். பழைய நிரந்தர உறவு வலுப்பெறும்.

\- இவ்வாறு தமிழர் மகா சங்கத் தலைவர் தெரிவித்தார். (ம)

### நாளை

ஆவணி 31
புதன்கிழமை
(17.09.2003)
திதி : ஷஷ்டி
முற்பகல் 7.31 வரை
நட்சத்திரம்: ரோகிணி
முழுவதும்
சுபநேரம்: 4.33 - 6.03
ராகுகாலம்: 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அதிகாரத்தில் நாட்டம் கொண்டவரிடம் ஆனந்தம் தங்குவதில்லை.

# பனைவெல்லம் உற்பத்திக்கு மானிய நிதியாக ரூ. ஒருகோடி

## கூட்டுறவு நிறுவன பேரிணையம் வழங்கியது

யாழ்ப்பாணம், செப்.16

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தினால் பனை வெல்லத்துக்கான மானிய நிதியாக ஒரு கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாக பேரிணையத்தின் பொதுமுகாமையாளர் கே.சிவநேசன் அறிவித்துள்ளார்.

ஒரு கிலோ வெல்லத்தின் உற்பத்திச் செலவு 110ரூபா முதல் 135ரூபா வரை உள்ளபோதும் பாவனையாளர்களின் நன்மை கருதி ஒரு கிலோ வெல்லமானது 60 ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதனால் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தை ஈடு செய்வதற்காகப் பேரிணையத்தினால் ஒரு கிலோவுக்கு 55ரூபா தொடக்கம் 70 ரூபா வரை மானியப்பணம் வழங்குவதன் மூலமே பாவனையாளர்கள் பயன் பெற முடியும் என்றும் -

பனை வெல்ல உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு பேரிணையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வெல்ல மானிய உதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு வருடங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோ வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் - அவர் தெரிவித்தார்.

இந்த வெல்லத்தை உற்பத்தி செய்த சங்கங்களுக்கே மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது. போர்க்கால சூழ்நிலையின் மத்தியிலும் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் மாவட்ட இணையங்களும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

இவ்வாறான பாரிய நிதியை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளாமல் அங்கத்துவ சங்கங்களின் பங்களிப்புடன் மானிய நிதியை வழங்குவது, வேறு எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் இல்லாத ஒரு பாவனையாளர் நலத்திட்டம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-10)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 28 ௦ 04 ௦ 1931



உதிர்வு 17 ௦ 08 ௦ 2003

## திருமதி பொன்னையா தங்கம்மா

எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கே!
எங்களை வளர்த்து வாழ்வை வளமாக்க
அல்லும் பகலும் பாடுபட்ட அன்புத் தெய்வமே!
சின்னஞ் சிறுவயதில் எங்களை வளர்த்தெடுக்க
நீங்கள் பட்டபாட்டை நினைக்கும்போது கண்கள்
குளமாகின்றது
பெற்றவர்கள், வளர்த்தவர்கள் அனைவரும் கதறியழ
நீங்கள் நெடுந்தூரம் போய்விட்டீர்கள் அம்மா!
வாழ்வில் இனி எப்போது உங்களைக் காண்போம்?
தீராக் கவலையுடன் உங்கள் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்.

எங்கள் அன்புத் தெய்வம் திடீரென நோயுற்ற வேளையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த ஏழு நாள்களும் அல்லும், பகலும் நித்திரை விழித்து அவரைப் பராமரித்த எங்கள் உறவினர்களுக்கும், வைத்தியர்கள், தாதிமார்களுக்கும் அவர் எங்களை விட்டுப் பிரிந்தபோது உடன் உரிய நடவடிக்கைகள் எடுத்து அவரது பூதவுடலை வீடுவரை கொண்டு வந்தோருக்கும், இறுதிக்கிரியைகளின்போது கலந்துகொண்ட வ.பி.போ.சபை பருத்தித்துறை சாலை முகாமையாளர், உதவி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், இரங்கலுரை நிகழ்த்திய சமாச அங்கத்தவர்கள் மற்றும் நாம் பிறந்த ஊர்மக்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (16.09.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை, குடும்பத்தினர்.

*இல.07, டச்சு வீதி,*
*மகளிர் கல்லூரியடி,*
*உடுவில்.*

(22626) (26-15-19)

## சேவைநலன் பாராட்டு விழா

சுழிபுரம்,செப்.16

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் கா.நடராசாவின சேவை நலன் பாராட்டுவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் பிரதி அதிபர் திருமதி கலைராணி மகாதேவன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சேவைநலன் பாராட்டு விழாவில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், வலிகாமம் கல்வி வலய நிதி உதவியாளர் இ.தவராஜா, சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செலலையா, முன்னாள் கோட்டக் கல்வி பணிப்பாளர் அ.தற்பரானந்தன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். தொடர்ந்து மாண வர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (எ-28)

## வன்னியசிங்கம் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.16

கோப்பாய் கோமகன் அமரர் கு.வன்னியசிங்கம், திருமதி வன்னியசிங்கம் ஆகியோரின் நினைவு தினமும் இரங்கலுரை நிகழ்வும் நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் கூட்டணி பிரமுகர்கள் இந்தக் கூட்டத்தில் நினைவுரை நிகழ்த்துவர். கூட்டணியின் கோப்பாய் கிளை தலைவர் க.சின்னத்துரை தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.(எ)

## மைதானத்துக்கு காணி கொள்வனவு

சுழிபுரம்,செப்.16

சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கென காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்கள் மைதானக் கொள்வனவுக்கென நிதியுதவியினை வழங்கியுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-28)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

16-09-2003 HAPPY BIRTHDAY

பலாலி - கொல்லங்கலட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி ஜெகதீஸ்வரன் -வத்சலா
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### சமீரவன்



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (16-09-2003) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பாட்டிமார், பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், அத்தைமார், சித்தி, சித்தப்பா, மச்சாள்மார் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

•தகவல்: **சி.ஜெகதீஸ்வரன்**
(அப்பா)

'ரோகினி இல்லம்.'
கிழுவானை ஒழுங்கை. கோப்பாய் மந்தி.

(22619)(21-15-19)


## மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHO THERAPY)**

யாழ்ப்பாணத்தில் 15.09.2003 - 21.09.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரை குறைவு
இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:


பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-30109) (24-19-15)



# சுடர் ஒளி

செப். 21-27,2003 இதழில்




முறிவடைந்து போன சு.க. - ஜே.வி.பி. கூட்டணிப் பேச்சுக்கள்

மீண்டும் முன்னணிக்கு வரும் இராமர் கோயில் விவகாரம்

வெளிநாடு போனால்தான் பிழைப்பா? றப்பர் ஸ்ராம்ப் செய்தாலே உழைப்பு

ஒளி நாடாவில் ஒஸாமா பின்லேடன் ஆடிப்போயிருக்கிறது அமெரிக்கா!

பெட்டிகளில் பணம் பொலிஸ் காவலோடு புலிகளின் பாசறைக்கு...!

ஆபத்தான விளைவுகளைத் தரும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள்

திருமலையைக் குறிவைக்கும் தென் இலங்கை அரசியல்வாதிகள்

வவுனியாவில் பெண்கள் சங்கமம்

மற்றும் பல சுவையான அம்சங்கள்

(C/30187) (21-15-19)

# 'கூத்து' பண்பாட்டு மீள் உருவாக்கத்துக்கு வித்திட்டது 'இராவணேசன்'

**பேராசிரியர் சி.மௌன குருவின் 'இராவணேசன்' ஆற்றுகை பற்றிய குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.**

ஈழத்துக் கூத்துக்களை செம்மைப்படுத்தி பேணும் முயற்சியூடு எதிர்கால சந்ததிக்காக அவற்றைக் கையளிக்கும் பணியை ஆரம்பித்து வைத்தவர்களில் முதன்மையானவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள். 1950களின் பின் சிங்கள - தமிழ் மகளிடையே மேலெழுந்த 'தேசிய உணர்வு' இம்முயற்சிக்கு உந்து சக்தியாக அமைந்தது. இதன் விளைவாக பேராசிரியர் சு.வித்தியானந்தன், கிராமங்கள்தோறும் காணப்பட்ட கலைகளை நாடிச் சென்றார். இவர் சென்றபோது கிராமங்களில் காணப்பட்ட கூத்துக்கள் பட்டைதீட்டி செம்மைப்படுத்தப்படவேண்டிய நிலையில் காணப்பட்டன. அப்பணியை பல்கலைக்கழகத்தின் துணையோடு அவரே மேற்கொண்டார். இத்தோடு கூத்துக்களும் நாட்டார் கலைகளும் நீண்ட நெடு நாள் வாழவேண்டும் என்ற அவாவில் கூத்து ஏடுகளை புத்தகங்களாகவும், நாட்டார் பாடல்களை ஒலிப் பேழைகளாகவும வெளியிட்டார். பாடசாலைகளிலும், பல கலைக் கழகங்களிலும் கூத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தன்பணியை தொடர்வதற்கான 'மாணவர் பரம்பரை' ஒன்றை உருவாக்கினார். கூத்துக்களும் நாட்டார் கலைகளும் பல்கலைக்கழக ஆய்வுக்குரியவை என்ற நிலையையும் உருவாக்கினார்.

இதன் தொடர்ச்சியாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புதிதாக 'இராவணேசன்', 'நொண்டி' ஆகிய இரண்டு கூத்துக்களை தயாரித்து மேடையேற்றினார். படச் சட்ட மேடையில் கற்ற மத்தியதர வகுப்பினருக்காக இந்நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. பலரது பாராட்டுக்களையும் பெற்ற இம்முயற்சிகளுக்கு பேராசிரியர் சு.வித்தியானந்தனுக்கு பெரிதும் உதவியவர் வந்தாறுமூலை செல்லையா அண்ணாவியார் ஆவார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் பற்றிப் பேசும்போது செல்லையா அண்ணாவியாரை பேசாது விடமுடியாது (இன்று செல்லையா அண்ணாவியார் ஆடி ஓய்ந்த நிலையில் யாருமற்று ஒரு குடிசைக்குள் நடக்க முடியாமல் முடங்கிக் கிடக்கிறார்.)

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பணிகள் இன்று ஒரு சில நாடகத்துறை சாரா ஆய்வாளர்களால் குறை கூறப்படுகிறது. 'கிராமங்கள் தோறும் கூத்து அழிவதற்கு' இவரது பணிகளே காரணம் போன்றதான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. கிராமங்களில் கூத்துக்கள் வீழ்ச்சியடைந்ததற்கும் வித்தியானந்தனின் பணிகளுக்கும் முடிச்சுப் போடுவது களநிலை ஆய்வு அனுபவம் அற்றவர்களின் எழுமாற்றான கூற்றேயல்லாமல் உண்மை அதுவல்ல.

கிராமங்களில் வருடத்தில் ஒரு முறை மட்டுமே மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஆற்றுகை செய்யப்படும் கூத்துக்கள், மாறிவரும் சமூக இயங்கு நிலையில் கோயில்களிலிருந்தும் இளம் சமூகத்திலிருந்தும் தூரவிலகிச் செல்கின்றன என்ற உண்மையையும் இரண்டு தசாப்தகாலப் போர் இவற்றையெல்லாம் சிதைத்துள்ளன என்ற உண்மையையும் இங்கு புரிதல் அவசியம்.


இன்று வரை பல்வேறு மட்டங்களிலும் கூத்துக்கள் ஆடப்படுவதற்கும் பேசப்படுவதற்குமான களநிலையை சிருஷ்டித்துத் தந்தவர் பேராசிரியர் சு.வித்தியாணந்தன் ஆவார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கூத்துப் புத்தாக்க முயற்சியில் கூடவே நின்று கற்றுக் கொண்டவர்களில் பேராசிரியர் சி.மௌனகுரு முக்கியமானவர். கூத்து ஆடத்தெரிந்த இவர் இன்று வரை பேராசிரியர் வித்தியானந்தனின பணியை நகர்த்தி வருபவர். சிறந்த கூத்தாய்வாளன். பல கூத்தாய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். 1964 - 65 காலப்பகுதிகளில் மேடையேற்றப்பட்ட 'இராவணேசன்' நாடகத்தில் முக்கிய வேடம் தாங்கி நடித்தவர்.

தற்போது பேராசிரியர் சி. மௌன குரு 'இராவணேசன்' நாடகத்தை மீள உருவாக்கம் செய்துள்ளார். பல பகுதிகளிலும் இந்நாடகம் மேடையேற்றப்படுகிறது. இராவணேசனின் மீள் உருவாக்கம் கால இயங்குநிலையை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருப்பது சிறப்பானது. எழுத்துரு, பாடல் மெட்டுகள், இசை, காண்பியங்கள், அசைவியக்கங்கள் எனப் பலவற்றில் மீள் உருவாக்கம் நடைபெற்றுள்ளது. இன்றைய பார்வையாளருக்கு ஏற்றதான மாற்றங்களை உருவாக்கி ஒரு நாட்டார்கலை புதுமெருகு பெறுவது மகிழ்வுக்குரியது.

'கூத்து' என்று இறுகிக்கிடந்த கூத்தை தேக்கநிலைக்கு இட்டுச்செல்லாது காலத்தின் மாற்றத்துக்கு ஏற்ப மாற்றஞ்செய்யவேண்டும் என்ற எண்ணவுருவாக்கம் மிகவும் போற்றப்படவேண்டியது. இதுவே கூத்துக்கள் ஆண்டாண்டு காலம் நின்றுநிலைக்க உதவும்.

பேராசிரியர் சி.மௌனகுருவால் தயாரிக்கப்பட்ட இராவணேசன் கூத்தா? என்ற கேள்வி கூத்தில் பற்றார்வம் கொண்டவர்களால் முன்வைக்கப்படுகிறது. சரி, அப்போ அது நாடகமா? என்று மறுகேள்வி கேட்பவர்களும்



செல்லையா அண்ணாவியார்

உள்ளனர். இதற்கு நெறியாளர் நான் கூத்து போடவில்லை? என்ற பதிலை மட்டுமே தருகிறார். இந்தப் பின்னணியில் இராவணேசன் ஆற்றுகையைப் பார்க்க விளைகிறேன்.

இராவணேசன் துன்பியல் நாயகனாக படைக்கப்பட்டுள்ளான். அவனது பண்புநிலை வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் ஏற்றதாக ஏனைய பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. அங்கதன் தூதுவந்து 'துன்றிடும் பெண்ணை விட்டுத் தொழுதுவாழ்' என்று இராவணனிடம் கூறுவதில் இருந்து நாடகம் ஆரம்பமாகி இராவணன் படுகளத்தில் வீழ்வதோடு முடிவடைகிறது. இடையில் இலங்கைப் போரில் எரிந்து சாவீடாகக் கதறும் நிலைமைகளும், இழப்புக்களும், துயரங்களுமான நிலைமைகள் காட்சியாகின்றன.

பேராசிரியர் சி.மௌனகுரு குறிப்பிடுவது போன்று எடுத்துரைப்பு அரங்க முறையில் இருந்து அரங்கியல் பண்பு நிலைக்கு அளிக்கையை நகர்த்திச் செல்லும் பாணி வெளிப்படையாகின்றது. நெறியாளரின் இந்த எண்ணம் முழுமையாக ஆற்றுகையாளர்களால வெளிக்கொணரப்படவில்லை போலும். இருப்பினும், நாடகமுடிவில் அவல உணர்வு பார்ப்போர் மனதில் மேலெழுகிறது.

எடுத்துரைப்பு (Nairative theatre) அரங்கை குறிப்பாக வெட்ட வெளிக்குரியதான கூத்தரங்கை படச்சட்ட வெளிக்குள் அரங்கியல் (Dramatic) பண்புடையதாக்குவது என்பது மிகச் சிரமமானது. கூத்தின் பிரதான தொடர்பாடல் ஊடகம் ஆடலும், பாடலும். இந்த ஆடலையும், பாடலையும் படச்சட்ட மேடைக்கான பார்வையாளர் எதிர்பார்க்கின்ற பாத்திரப் பண்புக்கு ஏற்ப பிசைவதில் நெறியாளர் ஓரளவு வெற்றிகண்டுள்ளார். ஆனால், ஆடலுடனும், பாடலுடனும் உணர்வு பிசையப்படுதல் போதாமல் உள்ளது.

இராவணேசன் நாடகத்தின் காண்பிய விளைவு நாடகத்தின் உயிர் நாடியாக உள்ளது. பாத்திரங்களின் உடைகளைத்தேடி வரலாற்றினூடு வெகுதூரம் சென்று கண்டுகொண்டுள்ளார்கள். சாதாரணமான எழிமையான உடைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதும் பின்னணிக் காட்சியாக பச்சை, வெள்ளை நிறத்தட்டிகள் பயன்படுத்தப்படுவதும் அத்தட்டிகள் நாடகத்தின் உணர்வை - களங்களை, வேகத்தை - சோகத்தை வெளிப்படுத்த பயன்படுவது மிகச் சிறப்பான காண்பிய ஆழத்தைத் தருகின்றன.

காப்பரணாக, கோட்டையாக, தேசமாக, போர்க்களமாக, குடியிருப்பாக, இருப்பிடமாக என்று பலவற்றிற்கும் சுழன்று சுழன்று அசையும் தட்டிகள் பயன்படுகின்றன. இலங்கை, போர் நடப்பதற்கு முன்னும் பின்னும் ஒரே நிறத்தட்டிகளால் வெளிப்படுத்தப்படுகிறது. போரின் பின் சாவிளைந்து சாம்பல் மேடாகக் கிடக்கின்ற இலங்கையை பச்சையால் குறிப்பதை ஏற்க முடியவில்லை.

இசையின் கனதிக்கேற்ப மேடைக் கனதி சிலவேளைகளில் போதாமல் இருப்பதாக உணர்ந்து கொண்டோம். இசைச் சூழலையும், உணர்வையும் சிருஷ்டித்துத் தருகின்ற பணியை செம்மையாக இது செய்து தருகின்றது. இசையுடன் ஆற்றுகையாளர் கொடுத்து வாங்கி அளிக்கை செய்வது போதாமல் உள்ளது. பல்வேறு வகையான வாத்தியங்கள் பாவிக்கப்படுதல் ஆற்றுகை செறிவுக்கு பெரிதும் உதவுகின்றது. இசையின் கனதிக்குத்தக்க மேடையின் அசைவியக்கங்கள் சமப்படுத்தப்படலாம்.

எடுத்துரைஞர்கள் தம்பணியை சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார்கள். உணர்ச்சித் தளத்தை நகர்த்திச் செல்ல முயற்சிக்கிறார்கள். பாடல் மெட்டுக்களில் வேறுபாடுகள் இருந்திருக்கலாம்.

இராவணன், அனுமான், இந்திரஜித் போன்ற பாத்திரங்களின் அளிக்கை நேர்த்தித் தன்மை மேலும் வளர்க்கப்படலாம்.

வீரத்தின் விளைநிலமான இராவணன் மனிதனாகத் தெரிவது, பார்க்கின்ற எம்மை நடந்துகொண்டிருக்கும் போருக்குள் இழுத்துச் செல்கின்றது. இறுதிச் சண்டையின் போது முற்றுகையில் சிக்கிய தம்பியரைக் காப்பதற்கு அந்தரப்படும் இராமன், பல தடைகள் தாண்டி பல அரண்களை தகர்த்து வெற்றிபெறும் அசைவியக்கம் நாம் சந்தித்த சமர்க்களங்களை நினைவூட்டின. வீரத்திற்காக படுகளம் மீது வீழ்ந்த முடி நிலத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை. எமது பண்பாட்டினூடு மகிழ்வான முடிவுகளை மட்டுமே பார்த்த பழக்கத்தினால் போலும்.

**தே.தேவானந்த்**
இய்க்குநர்,
செயல்திறன் அரங்க இயக்கம்.

இரண்டு மணிநேரம் படச்சட்ட மேடைக்குள் காண்பிய விருந்தளித்து அவலச்சுவையை எமக்களித்த இராவணேசன் நாடகத்தை தயாரித்து 'கூத்துப் பண்பாட்டை படுகளம் மீது வீழ்ந்த முடிநிலம்' என்ற நிலைக்குத் தள்ளாது கூத்துப் பண்பாட்டு மீள் உருவாக்கலுக்கு வித்திட்ட பேராசிரியர் சி.மௌனகுருவின் செயல, கூத்துக்கள் நின்று நிலைத்திட பெரிதும் உதவும். ☆

---

# ஈரலிப்புப் பிரதேச கரட் பயிர் இன்று எம் பிரதேச பணப்பயிர்

**கரட் என்றால் அது நுவரெலியா கரட்தான். நுவரெலியாவில் இருந்து இங்கு குடாநாட்டுக்கு வருகின்ற கரட்டின் சுவையே தனி. அந்தக் கரட்டைச் சந்தையில் பார்த்தாலே வாங்க வேண்டும் போல இருக்கும். அதன் பருமனும் நிறமும் என்ன அழகு. அப்படியே பச்சையாக உண்ண வேண்டும் போல இருக்கும். என்ன நுவரெலியா கரட்டைப் பற்றி இவ்வளவு புகழ்ந்து கொண்டு போகிறேன் என்று நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. ஒரு காலத்தில் எம்மவர்களில் சிலரின் வாயில் இருந்து உதிர்ந்த வார்த்தைகள் தான் இவை.**

**மலைநாட்டில் மட்டும் செய்கை பண்ணப்பட்டு வந்த கரட், கோவா போன்றவற்றை இங்கும் செய்கை பண்ண முடியும் என்று நிருபித்துக் காட்டியவர்கள்தான் குடாநாட்டு விவசாயிகள். அதற்குத் தினமும் குடாநாட்டுச் சந்தைகளில் மலைபோல் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கரட், கோவா என்பனவே சான்று. இவற்றுள் ஒன்றான கரட் செய்கை பற்றியும் அது தொடர்பான விவரங்கள் பற்றியும் இன்றைய 'கமமும் புலமும்' பகுதியில் பார்ப்போம்.**

குடாநாட்டில் பணக்காரர்களின் உணவாக இருந்த கரட் இன்று சாதாரண ஏழை மக்களும் வாங்கி உண்ணக் கூடியதாக இருக்கின்றதென்றால் அது இங்கு தாராளமாகச் செய்கை பண்ணப்பட்டு வருவதே காரணமாகும். இன்று தாராளமாகச் செய்கை பண்ணப்பட்டுவரும் இது கடந்த 15 வருடங்களுக்கு முன்னரே ஒரு சில விவசாயிகளால் இங்கு பரீட்சார்த்தமாகச் செய்கை பண்ணப்பட்டது என்கிறார் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த நா.கதிரமலைநாதன் என்ற விவசாயி.

**சந்திப்பு: ஜெயஸ்ரீ**

இவரிடம் கரட் செய்கை பற்றி நாம் கேட்ட பொழுது தனது தோட்டத்துக்கு எம்மை அழைத்துச் சென்றதுடன் மட்டுமல்லாது அங்குள்ள கரட பயிர்களையும் எமக்குக் காண்பித்தார். அவை பச்சைப் பசேலென்று காட்சியளித்தன. அவற்றைப் பார்த்தபோது மிகச் சிறிய நற்சீரகம் போன்ற இலைகளுடன் சுமார் ஓர் அடி உயரத்தில இருந்தன. மிகவும் உயரம் குறைவாக இருக்கின்றனவே. இப்பயிர்கள் என்று நாம் கதிரமலைநாதனிடம் கேட்டபொழுது இன்னும் இவை உயரமாக வளரும் என்று கூறிய அவர், சுமார் நான்கு அடி உயரம் வரை இப்பயிர்கள் வளரும் என்றார்.

செய்கை பண்ணி 100-120 நாள்களில் கிட்டத்தட்ட நான்கு மாதங்களில் இவற்றை அறுவடை செய்ய முடியும். ஜப்பான் நாட்டிலிருந்து பின்னில் வருகின்ற இந்த விதைகள் 6 நாள்களில் முளைக்கக் கூடியன. ஆனால், கரட் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் நிலத்தை தெரிவு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். புற்கள் இல்லாத தரையாக இருந்தால் மிகவும் நன்று.

தரையை நன்கு பண்படுத்தி விதையை இட்ட பின்னர் பராமரிப்பு நல்லபடி இருந்தால் எவ்வித சிரமமின்றி நல்ல அறுவடையைப் பெற்றுக் கொள்ளலாம். மருந்துப் பாவனையும் மிகவும் குறைவு.

நவம்பர், டிசெம்பர் மாதங்களில் இதனைச் செய்கை பண்ணுதலே சாலச்சிறந்ததாகும். ஏனெனில், இக்காலத்தில் மழையும் அதனைத் தொடர்ந்து ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பனியும் காணப்படுவதனால் கரட் பயிர்களுக்கு அவை உகந்ததாக உள்ளன. இதனால், கரட் பயிர்கள் நல்லபடி வரும் என்று கூறிய அவர் நுவரெலியா கரட்டுக்குத் தனி மவுசு இருப்பதற்கு அது குளிர்ப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்படுவதே காரணம் என்றார்.

இந்த வெப்பப் பிரதேசத்திலும் கரட் செய்கையை மேற்கொண்டு நாங்கள் அதில் வெற்றி கண்டுள்ளோம் என்றால் அதற்குப் பல காரணங்களைக் கூறலாம். தரை பண்படுத்தல், பசளையிடல், நீர் பாய்ச்சுதல் போன்ற விடயங்களில் நாம் என்றுமே பின் நிற்பதில்லை. பிவண், பொஸ்பரஸ், அமோனியா போன்ற இரசாயனப் பசளைகளை நாம் பயிர்களுக்கு இடுவதால் அவை நன்கு பயன்தருகின்றன. ரி.டி. எம்மும் இடலாம்.

அறுவடை செய்யக் கூடிய காலம் வந்துவிட்டது என்பதை எவ்வாறு தெரிந்துகொள்வது என்று அவரிடம் நாம் கேட்டதற்கு பயிரின் அடிப்பகுதி நிலத்தைப் பார்த்தால் அதனைக் கண்டு பிடிக்க முடியும் என்றார். பயிரின் தளிர்களைப் பார்க்கின்ற போது அவை பனை வடலி மட்டைகள் விரிந்து காணப்படுவது போல இருக்கும் என்று கூறியதுடன் நின்று விடாது அவ்வாறு காணப்பட்ட ஓரிரு பயிர்களையும் எமக்குக் காட்டினார்.

அவற்றில் ஒரு பயிரைப் பிடுங்கிப் பார்த்த பொழுது சுமார் 200 கிராம் மதிக்கத்தக்க கரட் உருண்டு திரண்டு அழகாக இருந்தது. அதனைப் பார்த்ததும் நுவரெலியா கரட்டுக்கும் இந்தக் கரட்டுக்கும் என்ன வித்தியாசம் தெரிகிறது என்று என்னுடன் கூட வந்தவரிடம் கேட்டேன். அவரால் என்ன வித்தியாசத்தைக் காட்ட முடியும்.

இதே அளவுதான் எல்லாப் பயிர்களிலும் இருக்குமா அல்லது இதனை விடப் பெரிய கரட்டும் இருக்குமா என்று கதிரமலைநாதனிடம் கேட்ட பொழுது இவற்றை அறுவடை செய்வதற்கு இன்னும் சில நாள்கள் இருக்கின்றன. உங்களுக்குக் காட்டுவதற்காகவே இவற்றில் ஒரு பயிரைப் பிடுங்கிக் காட்டினேன். உரிய அறுவடைக் காலம் வந்தால் சுமார் 250-300 கிராம் வரையான கரட்டைக் கூடப் பெறமுடியும் என்றார் அவர்.

பணக்காரரின் உணவாக இருந்த




இதை குடாநாட்டில் வறிய மக்களின உணவாகவும் மாற்றிவிட்டீர்கள். அதற்கு முதலில் நாம் நன்றி கூற வேண்டும். ஆனால், நீங்கள் இதனைச் செய்கை பண்ணியதன் மூலம் பணக்காரர் ஆகினீர்களா என்று அவரிடம் நாம் கேட்டோம். முதலில் ஒரு சிரிப்பை உதிர்த்த பின்னர் அவர் அதற்கும் பதில் கூறினார். ஒரு சில காலங்களில் 100 ரூபாவுக்கும் ஒரு கிலோ கரட் விற்பனை செய்துள்ளோம். அதனை விடக் குறைவாகவும் விற்பனை செய்துள்ளோம். தற்பொழுது 50 ரூபாவுக்கே விற்பனை செய்யக் கூடியதாக உள்ளது என்றார். இதனை அவதானித்துக் கொண்டு நின்ற இன்னொரு விவசாயி, இம்முறை நான் கரட் செய்கையை அரை குறையிலேயே நிறுத்திவிட்டேன் என்று கூறியதுடன், அதற்கான காரணத்தையும் தானே கூறினார். பயிர்கள் நல்லபடி வரவில்லை. அதனாலேயே நிறுத்தினேன் என்றார். நூற்றுக்கு ஒருவருக்கு இவ்வாறு நிகழ்வது இயற்கையின் நியதி என்று எண்ணிக் கொள்வோம்.

ஆனாலும், குடாநாட்டு விவசாயிகள் தமது பெரு முயற்சியினால் புதிய புதிய பயிர்செய்கைகளில் ஈடுபட்டுக்கொண்டே இருப்பார்கள்.

சொந்த மண்ணில் இவற்றைச் செய்கை பண்ணி வெற்றி கண்ட ஒரு முழுமையான விவசாயின் பெருமிதம் கதிரமலைநாதனின் முகத்தில் தெரிந்தது. அவருடன் நாம் செலவிட்ட ஒரு மணி நேரத்தில் பல விடயங்களை அறிந்து கொண்ட திருப்தியுடன் நாம் அவரிடமிருந்து விடைபெற்றோம்.

# யுத்தம் மூலம்தான் சமாதானம் என்ற நிலையை ஜனாதிபதி விடவில்லையா?

## குருநாகல் கூட்டத்தில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் எழுப்பும் கேள்வி

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்துவைக்கக் கூடிய ஏதேனும் ஒரு திட்டம் தென்னிலங்கை மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறதா?

இவ்வாறு நம்புவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போன்றதாகும்.

மேற்படி எண்ணிப்பார்க்கக் கூடிய சூழ்நிலை ஒன்றரை வருடங்களுக்கு முன் பூதாகரமாக எழுந்து எல்லோரையும் சமாதானத்தின் பால்தூண்டியது உண்மையே.

ஆனாலும் அது எவ்வாறு உணர்வு பூர்வமானதொரு கட்சிசார் அரசியல் தீர்மானமாக இருந்ததோ அவ்வாறே இன்றும் கட்சிசார் அரசியல் சிந்தனைப போக்குகளால் தூண்டப்பட்டு, அந்த நல்லுணர்வு தணிந்து செல்கிறதாம்.

இவ்வாறு கருத்துக்கணிப்புக்கள் மட்டுமன்றி, அரசியற் போக்குகளும் உறுதிசெய்கின்றன.

இப்பிரச்சினை இன்றும் கட்சி அரசியல் சிக்கலுக்குள்தான் சுற்றிக் கொண்டு நிற்கிறது.

அதாவது, வடக்கு-கிழக்கின் பிரச்சினைக்கு தென்னிலங்கை ஏகமனதான முடிவைத்தெரிவிக்கும் நிலை இன்னும் ஏற்படவில்லை. அதேபோல ஒருமனதாகப் பிரச்சினையை நிராகரிக்கும் நிலையிலும் தென்னிலங்கை இல்லை.

### ஜனாதிபதி ஆதங்கம்

குருநாகலில்நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 52ஆவது மாநாட்டில் அதன்தலைவி, முக்கியமான விடயமொன்றை தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரம சிங்க சந்தர்ப்பத்தைத தவறவிட்டுள்ளார் என்று ஆதங்கப்படிருக்கிறார்.

2001 செப்டெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க், வாஷிங்டன் மீதான பின்லேடனின் தாக்குதலகளுடன் பயங்கரவாதத்திற்கெதிரான உலக அபிப்பிராயம் அமெரிக்கா தலைமையில் உருவாக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவின் பயங்காரவாதிகள் பட்டியலில் புலிகளின் பெயர் இருப்பதையும் அவர் ஒருவகையில் புட்டுக்காட்டியிருக்கிறார்.

பயங்கரவாதத்திற் கெதிரான உலக நடவடிக்கை உத்வேகம் பெற்ற கடந்த இரண்டு வருடகாலத்தில் அரசாங்கம், பொ.ஐ.மு. கையில் இருந்திருக்குமாயின் தமிழர்களுக்கு என்னென்ன நடந்திருக்கக்கூடும் என்பதை கற்பனை செய்வதற்கும் அவரது பேச்சு உதவுகிறது.

இத்தகைய உகந்த தொரு சூழ்நிலையைப் பயன்படுத்தி யுத்தம் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தியிருககலாம் என்று பொ.ஐ.முவின் தலைமைப்பீடம் கற்பனை செய்வது தெரிகிறது. ரணில் விக்கிரம சிங்க தவறவிட்டது இந்த சந்தர்ப்பத்தையே என்று அவர்கள் ஏங்குவதும் தெரிகிறது.

அத்துடன், எதிர்காலப் பிரசாரங்கள் எதனை மையமாகக்கொண்டு அமையப்போகின்றன என்பதையும் காட்டுவதாயுள்ளது.

தமிழர்களின் வாக்குகளைப் பெறாமல் அமைக்கக் கூடிய ஆட்சி புனிதமானது என்று நினைக்கும் இயல்பு அவர்களிடம் நிறையவே இருப்பது தெரிகிறது.

சிங்கள மக்களினதும், மற்றும் இருபெரும் கட்சிகளில் ஒன்றையே தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் உள்ள தென்னிலங்கை வாழ சிறுபான்மை மக்களில் ஒரு கணிசமானவர்களினதும் வாக்குகளையும் பெற்றே தென்னிலங்கைக் கட்சிகள் ஆட்சிக்குவந்தன.

தமிழர்களின் பாரம்பரிய வசிப்பிடம் எனப்படும் வடக்கு-கிழக்கு மக்களையும் அவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நாடாளுமன்ற ஜனநாயகம என்னும் பெயரில் அவை ஆண்டுவந்தன என்பது வரலாறு.

### கோடரிக் காம்புகள்

1956இல் இருந்து ஒன்றில் தமிழரல்லாத அமைச்சரவையோ அல்லது நியமனம் பெற்ற கொழும்புத் தமிழரொருவரையோ மட்டும் கொண்ட அமைச்சரவையேதான் வடக்கு - கிழக்கையும் ஆட்சிசெய்து வந்தது. நியமன அமைச்சர்களும் கோடரிக் காம்புகளாகவே பயன்பட்டனர்.

தென்னிலங்கையின் பேரினவாதத தளத்தில் நின்றுகொண்டு பெற்ற வாக்குகளின் ஆணையைப் பயன்படுத்தி ஆட்சிபுரிந்ததாலேயே சிங்கள மக்களுக்கு மட்டும் நன்மை பயக்கும் திட்டங்களை தங்குதடையின்றி நிறைவேற்ற அந்தக் கட்சிகளால் முடிந்தது.

அதுமட்டுமன்றி எமக்கு வாக்களித்த மக்களுக்காக நாம் பாடுபடுகின்றோம். அதில் என்ன தவறு இருக்கின்றது என்று தர்க்கவாதம் புரியவும் முடிந்தது.

ஒரு சில சந்தர்ப்பங்களில் "நீங்கள செல்வநாயகத்திற்கு வாக்களித்தீர்கள். உங்களது தேவைகளை அவரிடம் கேட்டுக்கொள்ளலாமே" என்று சிரேஷ்ட அரசியல்வாதிகள் நக்கலாகவும் நகைச சுவையாகவும் கூறியதுண்டு.

ஐக்கிய இடதுசாரி முன்னணி என்ற பெயரில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தில் நியமன அமைச்சராகவிருந்த செல்லையா குமாரசூரியர் தான், தமிழ் மக்களின் வாக்குகளில் ஒன்றைத்தானும் பெற்று அமைச்சராக வரவில்லை என்று தமிழர்களைப் பார்த்து கூறியிருந்தார்.

முக்காற்பங்கு வாக்காளர்கள் சிங்கள மக்களாகவே இருக்கையில், அந்த மக்களின் வாக்குகளை மட்டுமே பெற்று ஆட்சியொன்றை அமைப்பது முடியாத காரியமல்ல.

சிங்கள இனத்திற்கு மட்டும் விசுவாசமான தீர்மானங்களை எடுப்பதற்கு ஏற்ற சுதந்திர நிலையும் ஏற்படலாம்.

1994ஆம் ஆண்டில் பலவாக்குறுதிகளை கொடுத்து தமிழர்கள் பெரு நம்பிக்கை வைக்கும்படிசெய்து விட்டு பின்னர் அவர்களை ஏமாற்றிய தால் ஏற்பட்டிருக்கும் வடுக்கள், வக்கணைகளுக்கு பதில் கூறும் தேவையுமில்லாத ஓங்கிய நிலையில் இருந்து கொண்டு ஆட்சிசெய்யமுடியும்

இவ்வாறன அனுகூலங்களைப் பெறும் முயற்சியிலேயே இன்று பொ.ஐ.மு. இறங்கியுள்ளது. விளக்கம கோரும் கடிதங்கள் அடிக்கடி பிரதமருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

அமைச்சர்களை அழைத்து தனித தனியாகப் பேச்சுக்கள் நடத்தப்படும் செய்திகளும் வெளிவருகின்றன. வீர உரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

### சமாதான விரும்பிகள்

இலங்கை பல்லின மக்கள் வாழும ஒரு நாடு என்பதை விசுவாசமாக ஏற்றுக்கொண்ட சிங்களமக்கள் பிரிவினரே சமாதானத்தை ஆதரிப்பர். சிறுபான்மை மக்களும் சுயமரியாதையுடன் வாழவேண்டுமென்று விரும்புவர்.

இவர்களே, பெரும்பாலும் ஐதேக. அரசின் இன்றைய ஆதரவாளர்களாகவும் இருப்பர். இந்தப் பிரிவினருடன் இணைந்து சிந்திப்பவர்கள் சிறுபான்மையினர். மொத்தத்தில் இந்த வட்டத்தினரே இன்றைய அரசாங்கத்தின் முக்கிய ஆதரவாளர்களாயுள்ளனர்.

மறுபுறம், இந்நாடு சிங்கள இனத திற்குரியது என்று இறுக்கமான முடிவுகளை கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள்.

சிங்கள இனத்தின் வரலாற்று நூல்களை ஆராய்பவர்களும் வரலாற்று நூல்களை எழுதி வெளியிடுபவர்களாகவும் பழைய பெருமைகளைப் பேசி சிங்கள இனத்தின் காவலர்களாக தம்மை முன் நிறுத்தி அரசியல் பேசுவர்களும் உள்ளனர்.

யதார்த்த உண்மைகளைப் புறக் கணிப்பவர்களும், பௌத்த மதத்தின காவலர்களாக பெரும் எடுப்பில் காட்டி வருபவர்களும் இந்த வகையினரே. இவர்களே பொதுவாக இன்றைய பொ.ஐ.முவின் முதுகெலும பாக உள்ளனர்.

பொ.ஐ.மு. தனது கையில் ஆட்சியை பெறுவதற்கு இந்தப் பகுதியினரின் வாக்குகள் போதுமானதாக வில்லை. எந்தக் கட்சியையும் நிரந்தரமாக சார்ந்திராத, நியாய அடிப்படைகளை - தம் அறிவுக்கெட்டிய வரை ஆய்வு செய்து அரசியல் தீர்மானம் எடுக்கும் புத்திஜீவிகள், கல்விமான்கள், நடுத்தர வர்க்கத்தின் சில பிரிவினரே சமாதான விரும்பிகளாக உள்ளனர்.

ஆனால், சமாதானத்தை அடையும் வழிவகைகள் பற்றி கருத்தியலானதும் சட்ட ரீதியிலானதுமான முறைகள் பற்றி ஆய்வுசெய்யும் போக்குடைய இவர்கள் தமக்கு ஏற்புடைய அரசியல் முன்னோக்கை முன்வைக்கும் கட்சிக்கு வாக்களிக்கக்கூடியவர்கள்.

இப்பிரிவினரையும், ஆளும் கட்சியில விரக்தியடைந்தவர்களையும் கரைமுடிந்தால் பொ.ஐ.மு.தேர்தலில் வெற்றி பெறலாம் என்று சிந்திக்கிறது.

ஒட்டுமொத்தமாக. பொ.ஐ.மு. சிங்கள, பௌத்த பேரினவாதத் தளத்தில் பற்றிநின்றபடியே முடிந்த வரையிலும் அந்த வட்டத்தினுள்ளிருந்தே தனக்கு வேண்டிய பெரும்பான்மையைப் பெறுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கின்றது.

சிறுபான்மைக் கட்சிகளுடன் பேரம பேசுவதை விரும்பாதது போலவே சிறுபான்மையினத்தவரின் வாக்குகளுககாக அதிகாரப்பரவலாக்கம் போன்ற விடயங்களில் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை.

வடக்கு - கிழக்கு தமிழ் வாக்குகளை அது எதிர்பார்க்கவில்லை.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான பிரதான முஸ்லிம் கட்சிபற்றிய நம்பிக்கையுமில்லை.

அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் கோரிக்கைகளை முன்வைக்காத மலையகக் கட்சிகளை கறிவேப்பிலைகளாகப் பயன்படுத்த முயலலாம்.

ஆட்சி மாற்றம் பற்றியும், பொதுத் தேர்தல் பற்றியும் பெருமளவில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

சமாதானப் பேச்சுக்கள் குழம்பி விட்டன. இனிமேல் ஐ.தே.முவுக்கு எதிரான சக்திகளின் துணையுடன் ஆட்சியை அமைப்போம் என்று விழுந்தடிககிறார் ஜனாதிபதி .

யுத்தம் மூலம் சமாதானத்தை முனனெடுக்கும் முயற்சிகளுக்கு ஜனாதிபதி ஆதரவு தேடுகிறார் என்றும் அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

**- கலைவாணன்.**

# புலிகளின் வரைபு சமர்ப்பிக்கப்படும் .....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவிப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் கூறுகின்றன. அது பற்றி..?

*பதில்:-* எமது வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பின் தெற்கில் மக்கள் குழப்பமடைவார்கள் என நான் நினைக்கவில்லை. தெற்கில் உள்ள எதிர்க் கட்சிகளும் இனவாத சக்திகளும் தான குழப்பத்தை ஏற்படுத்த முனையும்.

எந்தத் தீர்வை முன்வைத்தாலும் அவர்களின் வேலை இதுவாகத்தான இருக்கும். பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போது அதைக் குழப்ப முனைந்தார்கள். யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலத்திலும் குழப்பத்தில் ஈடுபட்டனர். நாம் எந்த நல்ல விடயத்தையும் முன்னெடுத்தாலும் இந்தச் சக்திகள் குழப்ப முனையும். எனவே, வழமைபோல் இந்த வரைவையும் குழப்ப முனைவார்கள் என எதிர்பார்க்கலாம்.

எம்மைப் பொறுத்தவரையில், எங்கள் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய - எமது மக்கள் திருப்தியடையக் கூடிய - எமது மக்களின் வாழ்வியலை உறுதிப்படுத்தக் கூடிய - வகையில், அவர்களின் எதிர்காலத்தைக் குறியாகக் கொண்டே நாங்கள் தீர்மானங் களை முன்வைக்கிறோம்.

ரணில் விக்கிரமசிங்கவையோ, சந்திரிகா அம்மையாரையோ, அங்குள்ள இனவாத சக்திகளையோ திருப்திப் படுத்துவது எங்களது வேலையும் அல்ல; நோக்கமும் அல்ல.

எமது இனம் ஐம்பது வருடங்களுக்கு மேலாகப் போராடிக் கொண்டிருக்கின்றது. இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக எமது தலைவர் நெருக்கடியான - ஆபத்தான - சூழ்நிலைகளுக்கு எல்லாம் முகம் கொடுத்து, சர்வதேச சக்திகள் தலையிட்டு எம்மை பலவீனப்படுத்த முனைந்த நிலையிலும் அவற்றை எதிர் கொண்டு, போராட்டத்தை முன்னெடுத் துள்ளார். எமது மக்கள் அதற்குப் பக்க பலமாக நின்றிருக்கிறார்கள்; தொடர்ந் தும் பக்கபலமாக நிற்கிறார்கள்.

எண்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிர் கொடுத்துள்ளார்கள். 18ஆயிரம் பேர் வரையான எமது இளம் தலைமுறை ஒன்று தங்கள் உயிர்களை ஈந்துள்ளது. இரத்தத்தாலும் சதையாலும் உயிர்களாலும் கட்டி எழுப்பப்பட்ட எமது அரசியல் வரலாற்றை நாம் குழிதோண்டிப் புதைக்க முடியாது. மக்களின் வரலாற்றை, எதிர் காலத்தை உறுதியாக்கிக் கொள்ளும் பாதையிலேயே எப்போதும் எமது தலைவர் எங்களை வழிநடத்திச் செல்வார். எம்மைப் பொறுத்தவரை விட்டுக் கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. விட்டுக் கொடுப்பு ஏதுமின்றி எமது தலைவர் தீர்க்கதரிசனத்துடனும், அர்ப்பணிப்புடனும், நிதானத்துடனும் முடிவுகளை எடுத்து நடைமுறைப படுத்துவார். அதன் ஒரு கட்டமே தற் போதுள்ள சூழல்.

### சமஷ்டி தீர்வும் இடைக்கால நிர்வாகமும்

*கேள்வி:* தமிழ்மக்களுக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அடிப்படையாக இடைக்கால நிர்வாக அமைப்பு இருக்குமா?

*பதில்:-* எமக்குரிய இறுதித் தீர்வுக் கான ஓர் ஆரம்பமாகத்தான் இந்த இடைக்கால நிர்வாகம் அமைய வேண்டும். இந்த இடைக்காலத் தீர்வு, தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியதாகவும், தமிழ்மக்களின் நிரந்தர வாழ்வியலை உறுதிப்படுத்துவதாகவும் அமையும்போது மக்கள் இறுதித் தீர்வுக்கான தமது முழு ஆதரவைத் தெரிவிப்பார்கள்.

அதேவேளை, தென்னிலங்கையில் உள்ள குழப்ப சக்திகள், இனவாத சக்திகள் ஆகியவற்றின் எதிர் நடவடிக்கைகளும் பலவீனமடையும். இறுதித் தீர்வை எட்டுவதற்கான ஒரு நகர்வாகவே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைப் பார்க்கிறோம்.

### மீண்டும் யுத்தத்துக்கு திரும்புவீர்களா?

*கேள்வி:-* நீங்கள் சமர்ப்பிக்கும் வரைவை அரசு நிராகரித்தால் நீங்கள் யுத்தத்துக்கு திரும்புவீர்கள் என செய்திகள் வருகின்றனவே. அது பற்றி......?

*பதில்:-* (சிரித்துக் கொண்டு) தமிழ் மக்கள் எப்போதும் யுத்தத்தை விரும்பியவர்கள் அல்லர். தமிழ்மக்கள் மீது யுத்தம் திணிக்கப்படும்போது அதை எதிர்கொள்ளத்தான் தமிழ்மக்கள் ஆயுதம் ஏந்தினார்கள். ஜனநாயக வழிப் போராட்டங்கள், அஹிம்சை வழிப் போராட்டங்கள் எல்லாமே உதாசீனப் படுத்தப்பட்டு, பலவீனப்படுத்தப்பட்டு மக்கள் மீது கொடூரமான யுத்தம், வன்முறை ஏவிவிடப்பட்ட போதே எங்களது தலைவர் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, ஆயுதம் ஏந்தி எதிர்ப்பைக் காட்டவேண்டும் - எதிர்ப்பியக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் - என்ற நோக்கத்தோடு ஆயுதம் ஏந்தினார்; இந்த ஆயுதப் போராட்டத்தைக் கட்டியெழுப்ப முனைந்தார். அதைக் கட்டியெழுப்பி புதிய வரலாற்றைப் படைத்திருக்கின்றார் அவர். அதன் மூலம் எமது இனத்தைக் காப்பாற்றியிருக்கின்றார்.

ஆகவே, எமது இனம் யுத்தத்தை விரும்பி ஏற்றுக்கொண்டதல்ல. யுத்தமும், வன்முறையும் எங்கள் மீது திணிக்கப்படுகின்றபோது அதை எதிர் கொண்டு எங்கள் மக்களையும் தேசத்தையும் தற்காத்துக் கொள்வதுதான் எமது ஆயுத எதிர்ப்புப் போராட்டம். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் அர்த்த பரிமாணமே அதுதான். இதில் எமது தலைவர் தெளிவாக உள்ளார்.

எமது மண்ணில் சுதந்திரமாக - நெருக்குவாரம் இன்றி - இயல்பாகவே மக்கள் வாழும் சூழ்நிலை ஏற்படும் போது ஆயுதப் போராட்டமோ யுத்தமோ தேவையில்லாமல் போய்விடும். எங்கள் மீது மீண்டும் யுத்தம் ஏவிவிடப்பட்டால் எதிர்கொள்ள எமது இனம் எப்போதும் தயாராக இருக்கும். இதில் தலைவர் மிகத் தெளிவாக - உறுதியாக - இருக்கிறார். எமது தேசத்தையும் எமது மக்களையும் பலமான அரசியல், இராணுவ சக்தியாக நின்று அவர் வழிப்படுத்துவார்.

### அன்ரன் பாலசிங்கம் ஓரங்கட்டப்பட்டாரா?

*கேள்வி:-* விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பேச்சுக்களில் இருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளார் என வெளிவரும் செய்திகள் குறித்து...?

*பதில்:-* தென்னிலங்கைப் பத்திரிகைகளில ஆருடம் கூறும் செயலையிட்டு சிரிப்புத்தான் வருகின்றது. அந்தப் பத்திரிகைகள் எந்தவொரு காரியத்தையும் எதிர்மறையாகவே பார்க்கின்றன. எமது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எமது பிரதம பேச்சாளர். எமது சமாதானக் குழுவின தலைவராகச் செயற்பட்டவர்.

தற்சமயம் அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டு, ஓய்வு எடுக்க வேண்டிய நிலையில் உள்ளார். சிலகாலத்துக்கு முன் அவர் இங்கு (வன்னிக்கு) வந்த சமயம், உடல் நிலை மோசமடைந்து அவரை இங்கிருந்து அவசர அவசரமாக அழைத்துச் சென்று அவரது உயிரைக் காப்பாற்றியது உங்களுக்குத் தெரியும்.

பயணங்களை மேற்கொள்வதைத தவிர்க்கும் படியும் ஓய்வு எடுக்கும் படியும் வைத்தியர்கள் அவருக்குப் பணித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஓய்வு எடுத்து உடல் நிலையை தேற்றிக் கொள்வதைக் கூட இவர்களால் ஜீரணிக்க முடியாதுள்ளது.

எமது அமைப்பைப் பொறுத்தவரை, நாங்கள் நாளாந்தம் அவருடன் தொடர்புகொள்கிறோம். எங்களது தலைவருடனும் தலைமைப்பீடத்துடனும் அவர் அடிக்கடி கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கின்றார்.

பரீஸ் மாநாட்டிற்கு அவரும் சமுகம் தர இருந்தவர். ஆனால், சமுகந் தர முடியாது போய்விட்டது. அவருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்தும் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும். ஓய்வில் இருந்து அவர் பணிகளை தொடர்கின்றார்.

இந்த விடயத்தில் பத்திரிகைகள் மட்டுமல்ல முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இவை தொடர்பாக செய்திகளை வெளியிட்டுள்ளார். சமாதான நடவடிக்கைகளில் எந்தவிதத்திலும் சம்பந்தப்படாத கதிர்காமர், சமாதான முயற்சிகளை எப்படிக் குழப்பலாம் என்ற நோக்கில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

எமது அமைப்பு ஒரு கட்டுக்கோப்பான குடும்பம் போன்றது. எல்லோரும் தலைவரையும், அவரது கொள்கைகளையும், இலட்சியத்தையும் மதித்து, நேசித்துச் செயற்படுகின்றனர். இங்கு பிளவுகளோ, இடைவெளிகளோ ஏற்படுவதென்பது நிச்சயமாக நடக்கப்போவதில்லை. வீண் புரளிகளை - பிரசாரங்களை - எமது மக்களும் நம்பமாட்டார்கள் - என்றார்.

# விருந்தில் முஸ்லிம் தலைவர்களுக்கு அகாஷி வழங்கிய இனிய பாராட்டு

கொழும்பு இன்டர்கொன்டினென்டல் ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை இரவு நடந்த விருந்தில் முஸ்லிம் தலைவர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி இனிய பாராட்டுத் தெரிவித்தார். தங்களின் முஸ்லிம் சமூகப் பிரச்சினைகளில் அவர்கள் மிகுந்த கரிசனை கொண்டிருக்கிறார்கள் என்றே அகாஷி பாராட்டுத் தெரிவித்தார் என்று அமைச்சர் ஹக்கீமின் ஊடகப்பிரிவு அறிவித்திருக்கிறது.

அகாஷிக்கும் அவரது குழுவினருக்கும் விருந்து அளித்தவர் அமைச்சர் ஹக்கீம். இதில் அமைச்சர் நூர்தீன் மஷூர், நாடாளுமன்ற உறுப்பினர்களான பேரியல் அஷ்ரப், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, எச்.எம்.எம்.ஹரீஸ் முதலானோர் கலந்துகொண்டனர். (ம)

# ஜே.வி.பியுடன் மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதில் சு.கட்சி நாட்டம்!

கொழும்பு,செப்.16

ஜே.வி.பியுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து சுதந்திரக்கட்சி இப்போது கவனம் செலுத்தி வருகிறது. இதன்படி, இருதரப்பினரும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், அடிப்படை விடயங்களில் இணக்கம் காணுவது தொடர்பாக ஜே.வி.பியுடன் பேச்சு நடத்த சுதந்திரக் கட்சியின் பிரதிநிதி ஒருவரை ஜனாதிபதி சந்திரிகா நியமித்திருக்கிறார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சில தினங்களுக்கு முன்னர் லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர உட்பட கட்சித் தலைவர்கள் சிலருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே ஜனாதிபதி இத்தீர்மானத்தை மேற்கொண்டார் எனக் கூறப்படுகிறது.

முன்னணி அமைப்பது குறித்து நடத்தப்பட்ட பேச்சுக்களில் இணக்கம் காணமுடியாத விடயங்கள் குறித்து மீண்டும் ஆராய்ந்து இணக்கம் காண முடியுமா என்பதை ஆராயும் பொறுப்பு அப்பிரதிநிதியிடம் வழங்கப்படும் எனவும் தெரிகிறது.

# பிரதமரின் தூரநோக்கு பார்வையால் நாட்டில் இன்று அமைதி நிலவுகிறது

## அமைச்சர் திலக் மாரப்பன கூறுகிறார்

புத்தளம்,செப்.16

"பிரதமரின் தூரநோக்கு கொள்கை காரணமாக இன்று அமைதி நிலவுகிறது. பிரதமர் ஒரு சமூகத்திற்கு மாத்திரம் விசேட சலுகைகளை வழங்குவதில்லை. அனைத்து சமூகத்தவரையும் ஒரே விதமாகவே பார்க்கின்றார்."

புத்தளம் - கொழும்பு வீதியில் பாலாவிக்கு அண்மித்துள்ள "எருக்கலம்பிட்டி - நாகவில்லு கிராமத்தில் புதிய மினி ரயில்வே நிலையத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய சிவில் விமான போக்குவரத்து, பாதுகாப்புத்துறை அமைச்சர் திலக் மாரப்பன மேற்கண்டவாறு கூறினார்.

வன்னிப் புனர்வாழ்வுக்குத் துணை புரியும் அமைச்சர் நூர்தீன் மஷூரின் அழைப்பையேற்று அமைச்சர் மாரப்பன அங்கு விஜயம் செய்தார்.

மௌலவி சம்சுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் மாரப்பன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"சமாதானத்தை அடைய அரசு பல வழிகளிலும் முயன்று வருகின்றது. சமாதானம் ஏற்படாவிட்டால் அமைதி




என்ற பேச்சுக்கே இடமில்லை. சமாதான சூழ்நிலை நிலவுவதன் காரணமாகவே இப்படியான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடிகின்றது.

பிரதமர் மக்கள் அனைவரையும் இலங்கையர் என்றே நோக்குகின்றார். அவரது தலைமையின் கீழ் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு அமைதியும், நிம்மதியும் ஏற்படும்" - என்றார்.

அமைச்சர் நூர்தீன் மஷூர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

முஸ்லிம்கள் என்றும் சமாதானத்தையே விரும்புகின்றார்கள். தற்போது அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு முஸ்லிம்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றனர்.

அண்மையில் பிரதமருடன் நானும் மலேஷியாவுக்கு விஜயம் செய்த போது அங்கு ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைந்தோம். அதே போன்ற வளர்ச்சி இங்கும் ஏற்பட வேண்டும் - என்றார். (ம)



அண்மையில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்ட காவல்துறை நடுவப் பணியக கட்டடத்தையும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அங்கு கடமையாற்றிக்கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

## வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளின்

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விவரம் தர பிரதமர் பணிப்பு

கல்முனை,செப்.16

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பகுதிநேர ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களது விவரங்கள் திரட்டப்படும்.

அதுபற்றிய அறிக்கையொன்றை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரைப் பணித்துள்ளார்.

இதற்கமைய வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களிலும் பணியாற்றி வருகின்ற பகுதிநேர ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களினதும் விவரம் சேகரிக்கப்படும். ஓய்வுபெற்ற பின் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களினதும் விவரங்கள் சேகரிக்கப்படும். அவற்றின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விச் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு 3622 ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், 1561பேர் மாத்திரமே நிரந்தர நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும், கிழக்கில் கல்முனை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுமே கூடுதலான ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இது பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மூலம் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது. இவர்கள் நீண்டகாலமாக ஒப்பந்த அடிப்படையிலேயே பணியாற்றி வருகின்றனர்.

அதனால், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி இந்த ஆசிரியர்கள் கடந்த வாரம் திருகோணமலையில் மறியல் போராட்டம், சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஆகியவற்றை மேற்கொண்டனர்.

இவ்விடயத்தை தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கையில் இரண்டாவது பெரும் எண்ணிக்கை

# வடக்கு - கிழக்கு பகுதிகளில் 12 பேர் எய்ட்ஸால் பாதிப்பு!

## தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு கவனம்

இலங்கையில் மேல் மாகாணத்துக்கு அடுத்ததாக வடக்கு - கிழக்கிலேயே 'எயிட்ஸ்' நோயின் பாதிப்பு அதிகமாக உள்ளது என்று சுகாதார அமைச்சுப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் வடக்கு - கிழக்கில் எயிட்ஸ் நோய் தடுப்புத் திட்டம் ஒன்றை அவசரமாகச் செயற்படுத்தும் பணியிலும் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் எயிட்ஸ் நோயினால் 12பேர் பீடிக்கப்பட்டுள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தை அடுத்து அதிக எண்ணிக்கையில் வடக்கு - கிழக்கிலேயே இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். மேல்மாகாணத்தில் இந்நோயால் 13பேர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யாழ். மாவட்டத்தில் 6பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4பேரும் திருகோணமலை மாவட்டத்தில் இருவரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தமிழகத்தில் அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களில் 10பேரும் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்களைக் குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து வருபவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களது உடலில் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றியுள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும் என மாகாண சுகாதார அதிகாரிகள் சிபாரிசு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்

# ஆங்கிலமொழி மூலம் தோற்றியோரில் அரைவாசிப்பேர் சித்தியடையவில்லை

கொழும்பு,செப்.16

இந்த ஆண்டு நடைபெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு ஆங்கிலமொழி மூலம் தோற்றியவர்களில் அரைவாசிப்பேர் சித்தியடையவில்லை என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2ஆயிரத்து 327 மாணவர்கள் இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலமொழி மூலம் தோற்றியிருந்தனர். அவர்களில் ஆயிரத்து 19பேர் சித்தியடையவில்லை.

தற்போது நாட்டிலுள்ள 168 பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலம் ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ம)

## பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்துக்கு

# நெல் அறுவடை இயந்திரம் பெற்றுத்தரக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,செப்.16

பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்திற்கு நெல் அறுவடை செய்யும் இயந்திரம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு தொல்புரம் கமநல கேந்திரநிலையத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் சம்மேளனம் நடத்திய காலபோக நெற்செய்கை பற்றிய கூட்டத்தில் இதுகுறித்து தீர்மானிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட கடிதம் கமநல கேந்திர நிலையத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அறுவடை காலத்தில் நெல்லை அறுவடைசெய்வதற்குப் போதிய தொழிலாளர்கள் இல்லாத நிலை காணப்படுவதை அடுத்தே அறுவடை இயந்திரத்தைப் பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் - கூறப்பட்டது.

அறுவடை செய்யும் இயந்திரம் ஒன்று சம்மேளனத்திடம் இருந்தால் விவசாயிகள் அதற்கு வாடகைப்பணம் செலுத்தித் தமது நெல்லை அறுவடை செய்யமுடியும் என்று அபிப்பிராயமும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக சம்மேளனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (எ-10-135)

# பாக். இராணுவ அதிகாரிகள் கொழும்பு வருகை

கொழும்பு,செப்.16

பாகிஸ்தானைச் சேர்ந்த உயர் இராணுவ அதிகாரிகள் ஐவர் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

பாகிஸ்தான் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை அதிகாரிகளின் தலைவரான ஜெனரல் மொஹமட் ஏகான் தலைமையிலான ஐவர் கொண்ட குழுவினரே இங்கு வந்துள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டே இவர்கள் இங்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-12)

# நாட்டு மக்கள் பிரதமர் ரணிலின் பக்கம் இந்நிலையில் அரசைக் கவிழ்க்க முடியாது

## அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் உரை

பேருவளை,செப்.16

நாட்டு மக்கள் தமது வாக்குப் பலத்தின் மூலம் கடந்த பொதுத் தேர்தலில் தெரிவுசெய்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியை சதி நடவடிக்கையின் மூலம் கவிழ்க்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் மேற்கொண்ட திட்டம் யாவும் தவிடுபொடியாகிவிட்டது. இந்த நாட்டு மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பக்கம் இருக்கும் வரை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது. இவ்வாறு நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

அஞ்சல் திணைக்களத்தினால் 70 லட்சம் ரூபா செலவில் ஊரகஸ் மன்ஹந்திய நகரில் அமைக்கப்பட்ட புதிய தபாலகத்தையும், தொலைத்தொடர்பு நிலையத்தையும் கடந்த புதன்கிழமை திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சார்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அமைச்சர் அஸ்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த ஜயவீர தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் அஸ்வர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்து அரசைக் கவிழ்க்க பல சதித்திட்டங்களைத் தீட்டின. நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டது என்று போலியான துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தன. மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் பரப்பின. அரசாங்கத்தைக் கவிழ்க்க கூட்டு ஒப்பந்தம் செய்யவும் பேச்சு நடந்தது. அப்பேச்சு பின்னர் படுதோல்வியடைந்தது. இதன் மூலம் இரு கட்சிகளுக்கிடையேயும் பிளவும் பிரச்சினையும் தலைதூக்கியுள்ளன.

நாட்டு மக்கள் அனைவரும் சமாதானத்தையே விரும்புகின்றனர். அந்தச் சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரவு பகலாக முனைந்து கொண்டிருக்கிறார். எமது நாட்டின் அபிவிருத்திக்கு சமாதானம் இன்றியமையாததாகும். சமாதானம் நிலவினால்தான் அபிவிருத்தி திட்டங்கள் வெற்றியடையும். இதேபோல் நாட்டின் பொருளாதாரமும் முன்னேறும். பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்த பாரிய வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது - என்றார்.

## விஞ்ஞான பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்

3ஆம், 4ஆம் வருட மாணவர்களின் இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பாகவும், முதலாம் வருட மாணவர்களின் இடைநிறுத்தப்பட்ட விரிவுரைகள் தொடர்பாகவும் கலந்துரையாட இருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் :- மாணவர் நிலையம் **(Student Complex)**
காலம் :- நாளை **(17.09.2003)** புதன்கிழமை காலை **10.00** மணி

*விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்.*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(22654) (11-14)

## வேலையாள் தேவை

மரத்தளபாடங்களுக்கு வாணிஸ் அடிக்கத் தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் உடன் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

**மங்களா தளபாட நிலையம்**
153, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.0777 724966

(சி-30193) (19)

## பூசகர் தேவை

சுதிரிப்பாய் அச்சுவேலி ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயத்திற்கு நித்திய பூசை செய்வதற்கு பிராமணப் பூசகர் ஒருவர் தேவை. வீட்டுவசதிகள் கொடுக்கப்படும். சம்பளம்பற்றி நேரில்பேசவும்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. **021 226 3421**

- தலைவர்.

(12) (22646)

## மருத்துவ சேவை

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் நடமாடும் மருத்துவ சேவை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெறுகின்றது.

படையினரால் துன்புறுத்தல்களுக்குள்ளானோர், குண்டு வெடிப்பு, ஷெல் வீச்சினால் பாதிப்புற்றோர், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் மருத்துவ சேவை, அங்கப் பயிற்சி சேவை, உளவளத் துணை ஆகியன இடம்பெறும்.

இம்மருத்துவ சேவையில் உடுப்பிட்டி வல்வெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மேற்கூறிய பாதிப்புக்குள்ளானோர் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 28 - 05 - 1923

மறைவு 17 - 08 - 2003

### திருமதி வீரசிங்கம் சிவக்கொழுந்து

எங்கள் குடும்ப விளக்காகத் திகழ்ந்து சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று **(16.09.2003)** செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வந்து கலந்துகொண்டு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், நண்பகல் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*373/3, நாவலர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

**- அன்புடன் பிள்ளைகள்.**
(22648) (26-12-19-21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



இறைவன் மடியில் 13 - 10 - 1930

கர்த்தரின் கரத்தில் 16 - 08 - 2003

### ஸ்ரீபன் செல்வராசா நல்லையா

[அல்வாய்]

*"நல்ல போராட்டத்தைப் போராடினேன்*
*ஓட்டத்தை முடித்தேன்,*
*விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்."*

(II தீமோத்தேயு 4:7)

என்றும் நினைவுடன்:
*மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்.*

No: 68/1,JAYASIRI MAWATHA,
KALUBOWILA, DEHIWELA,
T.P. 2719824

(C/30196) (26-12-19-21)

## வீடு, காணி விற்பனைக்கு

இல.57,கோவில் வீதியில் பரப்பு 1 குளி 17.9 (2 பரப்புக்கு 1 குளி மட்டும் குறைவு) விஸ்தீரணம் கொண்ட காணியும் பாத்றாம் வசதிகள் கொண்ட வீடும், தனிக் கிணறு, குழாய்க்கிணறு, நாலு புறமும் சுற்று மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு.

(தரகர்கள் தேவையில்லை)

**தொடர்பு:T.P.:222 3818**

*காலை 8 மணிக்கு முன்னும் மாலை 5 மணிக்குப்பின்னும்.*

(12) (22647)


## அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்

ARUNS SPORTS SPOT

உங்கள் சகல விளையாட்டு உபகரணத் தேவைகட்கு-

★ தரமானது
★ மலிவானது

விசேட விலைக் கழிவுடன்

மாபெரும் மலிவு விற்பனை

நேரில் வாருங்கள்
பாருங்கள்
வாங்குங்கள்!

எமது புதிய முகவரி

257,ஸ்ரான்லி வீதி,
(BATA மொத்த விற்பனை நிலையத்திற்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

(C/30204)(11-14)


## கண்ணீர் அஞ்சலி

2003.09.09ஆந் திகதி காலமாகிய எமது சக அலுவலராகிய கந்தையா நடராஜா (மாவட்ட பதிவாளர் அலுவலகம்) அவர்களின் அன்புத் தாயார் **திருமதி கந்தையா இலட்சுமி** அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்.மாவட்ட செயலக அலுவலர்களும், நலன்புரிக்கழக உறுப்பினர்களும்.*

(C/30202)(11-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **இராமச்சந்திரா** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தப்பு வள்ளியம்மை** அவர்கள்

12.09.2003ஆம் திகதி லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடுபத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

*பி.உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்.* (22652) (29-11-14)

பி.உள்ளூராட்சி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்.

## உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு – கிழக்கு மாகாண சபை

### வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல. 1846 – SRI(SF)

திருத்தம்

### கேள்வி அறிவித்தல்-22

### கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

ஏற்கனவே 2003.09.08ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் அட்டவணையில் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் தொகுதி 1&2 புனரமைத்தல் சம்பந்தமாக பின்வரும் திருத்தம் பிரசுரிக்கப்படுகின்றது.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | MN/NECORD/IR/01 | மன்னார் மாவட்ட கட்டுக்கரை குளத்தின் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் புனரமைத்தல் – தொகுதி 1 | M 7 | 33,000/= |
| | | மன்னார் மாவட்ட கட்டுக்கரை குளத்தின் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் புனரமைத்தல் – தொகுதி 2 | M 7 | 28,000/= |

*த.லங்காநேசன்.*
*வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்.*
*திட்ட கேள்விச் சபைத் தலைவர்.*
*140. மின்சார நிலைய வீதி.*
*திருகோணமலை.*

(C/30200) (11-14)

## மரண அறிவித்தல்கள்

### நகுலேஸ்வரக் குருக்கள் கம்சினி

கல்வியங்காடு, மடத்தடி வீதியை வசிப்பிடமாக கொண்ட நகுலேஸ்வரக்குருக்கள் கம்சினி அவர்கள் நேற்று (15.09.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நகுலேஸ்வரக் குருக்கள்-கல்ப்பனா தம்பதிகளின் அருமை மகளும் வரதராஜக்குருக்கள்-விக்னேஸ்வரி, சுந்தரேஸ்வரக் குருக்கள்-பத்மாவதி ஆகியோரின் பேர்த்தியும், கேதீஸ்வர சர்மா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்-நல்லூர்)-வதனா, திவாகரேஸ்வரக்குருக்கள் (லண்டன்)-வதனி, அரிகர சர்மா, ஜெனனி, ரேகா, பிரியா (யாழ்.பல்கலைக்கழகம்-கலைப்பீடம்) ஆகியோரின் பெறாமகளும் லகுதர்சர்மா, கோகுலவாணி ஆகியோரின் மருமகளும் பவித்ராவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.09.2003) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடம்வீதி, கல்வியங்காடு.* (22655) (11-14)

தகவல்:
கேதீஸ்வரசர்மா (பெரிய தந்தை)

### திருமதி அப்பாத்துரை தங்கம்மா

மாவடி, ஆலய வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி அப்பாத்துரை தங்கம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் அப்பாத்துரையின் அன்பு மனைவியும் மனோரஞ்சிதம், மகேஸ்வரி, திருச்செல்வம் (தொழில்துறைத் திணைக்களம், வலி.மேற்கு பிரதேச செயலகம், சங்கானை), அருட்செல்வம் (வலி.மேற்கு பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரராசசேகரம் (திருமகள் என்ரர்பிறைஸ், பிரதான வீதி, சங்கானை), செகராசசேகரம் (ஓய்வுபெற்ற வரிமதிப்பு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), மதிவதனி, இந்திராவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, கந்தையா மற்றும் நல்லம்மாவின் சகோதரியும் தங்கம்மா, காலஞ்சென்றவர்களான சின்னையா, நேசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் கிருபாகரன் (வலி.மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அராலி உப அலுவலகம்), சிவரூபி (ஆசிரியை, தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), தவரூபி (யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி), சுகந்தன் (ரவீந்திரன் வேர்க் சொப், சுழிபுரம்), சுகிர்தா (மாணவி, தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு), ரகுபரன், கஜலக்சன், ஜெனன்சியா (மாணவர்கள்,யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி), அசினியா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமப்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*அ.திருச்செல்வம்*
*மாவடி ஆலய வீதி,*
*சங்கானை.* (C/30206) (29)(11-14)

தகவல்:
அ.திருச்செல்வம் (மகன்)

# மீளக்குடியமர உடனடி அனுமதி வேண்டும் இல்லையேல் அத்துமீறிக் குடியமர்வோம்!

## வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் சமாச பிரதிநிதி அரசுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.16

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் எமது சொந்த இடங்களில் நாம் அத்துமீறி மீளக் குடியமர்வோம்.

-இவ்வாறு எச்சரித்துள்ளார் வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் க.கணேஷ்.

இராமநாதன் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தக் கொடூரங்களால் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி நலன்புரி முகாம்களில் வாழ்கின்றனர்.

அவர்களுக்கு நலன்புரி நிலையங்களில் வீடுகள், மலசல கூடங்களை போதிய அளவில் அமைத்துக் கொடுக்க எவரும் முன்வரவில்லை. இத்தகைய நிலையங்களில் சிறுசிறு குடிசைகளில் மக்கள் வாழ்வதால் பல்வேறு குடும்பச் சிக்கல்களை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

எமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் போன்றவையும் மிகவும் பாதிப்படைந்துள்ளன. தமது குடும்ப வறுமை காரணமாக பல சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதேயில்லை.

நலன்புரி நிலையங்களில் வாழும் இளைஞர், யுவதிகளுக்கு ஏனைய இடங்களில் திருமணம் செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது. இந்த நிலைமை காரணமாக வெறுப்படைந்த பலர் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவயதில், குறிப்பாக 14வயதுக்கும் 16வயதுக்கும் இடையில் திருமணம் செய்யும் நிலையும் இங்கு காணப்படுகின்றது.

இவற்றைச் சீர் செய்ய வேண்டுமானால் நாங்கள் எமது வீடுகளுக்கு சென்று வாழும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

யாழ்.குடாநாட்டில் 50இற்கு மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச நிறுவனங்களும் சேவை செய்து வருகின்றன. இந்நிறுவனங்களுக்கு நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தெரியவில்லையா?

இங்கு சேவை செய்வதற்காக வந்துள்ள நிறுவனங்கள் எவையும் எமது மக்களுக்கு சேவை செய்ய வரவில்லை. இங்கு மேற்கொள்ளும் சிறு சிறு சேவைகளை உலக நாடுகளுக்கு படம் பிடித்துக் காட்டி அதன் மூலம் கிடைக்கும் நிதியினை சூறையாடவே அவை எத்தனிக்கின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)



வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின்சமாசம் நேற்றுமுன்தினம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சுடர் ஏற்றுவதையும்- சமாசத் தலைவர் க.கணேஸ் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்


### யாழ்நகரில் மேசைத் தொலைபேசி விற்பனைக்கு....!

P.C.T.C

கவர்ச்சிகரமான விலையில் மேசைத் தொலைபேசிக்கு யாழ்நகரில் முதற்தர நிறுவனம்.

*பவர் செல்லுலர்.*
*185, கஸ்தூரியார் வீதி,*
*ராஜா தியேட்டர் அருகில்.*

I.DD இணைப்புகள் ஸ்ரீலங்கா தொலைபேசி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்கள் வழங்கப்படும்.

உத்தரவாதம் உண்டு.

தொடர்புகளுக்கு:0777242416,0712-399220
0712-381125;
**E-mail: Power@cl.lk**
யாழ்நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம். (C/30208)

### சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

எமது கழகத்தால் 'கால சுரபி' இதழ்-IV வெளியீட்டுக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திப்போடப்பட்டு எதிர்வரும் 01.10.2003 (புதன்கிழமை) அதிர்ஷ்டம் பார்க்கப்படும். தொடர்ந்து சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழகம்.* (22653)(16-18-29) *-வரலாற்றுக் கழகம்*

### லொறி உரிமையாளர்களின் கவனத்திற்கு

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு ஏற்றிச் செல்லக் கூடிய பொருள்கள் எமது நிறுவனத்தில் உள்ளன. கீழ் உள்ள முகவரியில் தொடர்புகொண்டு ஏற்றிச்செல்லவும்.

ஈஸ்வரபகவான் & கம்பனி,
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2222350.

(C-30205) (29-18-10)

### HAYLEYS AGRO

### யாழ். விவசாயிகளுக்கோர் அரிய சந்தர்ப்பம்
*விற்பனைக்குப் பிந்திய சேவை*

விவசாயிகளே உங்களின் தேவைகளை கருத்தில் கொண்டு தரத்தில் சிறந்த உங்களின் பாவனையிலுள்ள **Hayspray** தெளிகருவிகளை பழுது பார்த்துக்கொள்ள ஹேலீஸ் அக்ரோ நிறுவனம் தங்கள் சேவையை வழங்க முன்வந்துள்ளது.

இடம்: 17.09.2003 புத்தூர் கமநல சேவை நிலையம்.
18.09.2003 உடுவில் கமநல சேவை நிலையம்.
காலம்: காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை.

★அனைத்து **Hayspray** பாவனையாளர்களும் மேற்குறித்த தினங்களில் சேவையைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.



ஹேலீஸ் அக்ரோ
புரொடக்ஸ் லிமிட்டெட்.
இல. 25, பொஸ்டர் வீதி,
கொழும்பு-10.

(22651) (29-18-16)

### தேவை

தேநீர்சாலை ஒன்றில் பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை. தங்கி நின்று வேலை செய்பவர்களுக்கு சலுகைகளும் முன்னுரிமையும் வழங்கப்படும்.

★ ரீமேக்கர்
★ றொட்டி போடுபவர்
★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:-வாணிவிலாஸ்,
இல.76, K.K.S றோட்,
சுன்னாகம்.

### லக்சுமி சினிமா இணுவில்

சரத்குமார், சிம்ரன், வடிவேலு மற்றும் பலர் நடிப்பில்

அரசு (ரீல்ஸ்)

11.00, 2.00, 7.30 (பி.ப.)

### நாகம்ஸ் சுன்னாகம்

அருண்பாண்டியன், ஹரிஸ்ராகவேந்திரா, ராதிகாசவுத்ரி நடிக்க

விகடன் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.00,7.00(பி.ப.)

### ராஜா யாழ்ப்பாணம்

அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த

அன்பு

10.30, 2.30, 5.30, 8.30 (பி.ப.)

### நிர்மலா

M.G.R., ஜெயலலிதா நடிக்க

ராமன் தேடிய சீதை

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.ப.)

WISH MASTER

### மீண்டும் யாழ்நகரில்
### New R.N.CEIKO-Industries

சிறிது இடைவெளியின் பின் ஆரம்பிக்கும் எமது நிறுவனத்தில் பின்வரும் உற்பத்திப்பொருள்களை ஓடருக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம்.

★ ஓமோ வாட்டர்
★ பொன்னாங்காணி தைலம்
★ சந்தனாதி எண்ணெய்
★ வேப்பெண்ணை
★ செவ்விளநீர் எண்ணெய்
★ ஒலிவ் எண்ணெய்
★ நெய், தேன்
★ அபிஷேகத் திரவியங்கள்

### எமது நிறுவனத்திற்கு வேலையாள் தேவை

உடன் தொடர்பிற்கு:-
**New R.N.CEIKO-Industries**
**NO-89,** பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
**T.P 0712-380370**


## கண்ணீர் அஞ்சலி

கொழும்பில் அகாலமரணமடைந்த
செல்வன்
**சுப்பிரமணியம் புவராஜ்**

சொல்லாமல் விடைபெற்றாயோ வழியனுப்ப முடியாமல் தவிக்கும்

பயிற்றோலை வைரவர் தேவஸ்தானம்
திருநெல்வேலி.

(C-30203) (29-18-13)

## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் நடராஜா இராசரட்ணம் (தையிட்டி)

(ஓய்வுபெற்ற ஓமந்தை வைத்தியசாலை பொறுப்பதிகாரி)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா வைரவப்புளியங்குளம், இல.71, வைரவர்கோவில் வீதியில் வசித்தவரும், ஓய்வுபெற்ற வவுனியா மாவட்ட பதிவு வைத்திய அதிகாரியும் (DRMO), வவுனியா சனத்தொகை சேவைகள் நிலையத்தில் (PSL) கடமையாற்றி வந்தவருமாகிய டாக்டர் நடராஜா இராசரட்ணம் நேற்று (15.09.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராஜா - சிவபாக்கியம் தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் முகுந்தன் (MSF, வவுனியா), ரமணன் (CPA - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொழும்பு), கோபிகா (தேசிய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நிலையம், கொழும்பு), பாலகரன் (தகவல் தொழில்நுட்பவளாகம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் இளங்கோவனின் (Arkansus University of America) அன்பு மாமனாரும் தர்மலிங்கம், சோதிலிங்கம், காலஞ்சென்ற தெய்வநாயகி, காலஞ்சென்ற இராசநாயகி, குணசேகரம், ஜெயமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தசாமி (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கொழும்பு), சச்சிதானந்தன் (Y.M.H.A வட்டுக்கோட்டை), சரவணபவன் (இலங்கை வங்கி, வவுனியா), பரமேஸ்வரன் (செயலாளர், இந்து கலாசார அமைச்சு), புவனேஸ்வரி, கனகாம்பிகை, துரைராஜா, இலங்கைநாயகி, சிவகுமாரி, காலஞ்சென்ற பரமன் ஆகியோரின் மைத்துனரும் திருமணச்செல்வியின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை( 17.09.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில், அவரின் இல்லத்தில் நடைபெற்று, தட்சணாங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.முகுந்தன் (மகன்)
*தொலைபேசி: 024-2221935*

(C/30209 (29-18-16)

### திருமதி செல்லத்தம்பி அன்னம்

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லத்தம்பி அன்னம் அவர்கள் இந்தியாவில் நேற்று (15.09.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பியின் (பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை) அன்பு மனைவியும் நாகன்-குஞ்சரத்தின் பாசமிகு மகளும் அழகரத்தினத்தின் சகோதரியும் விஸ்ணுகுமார், கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்), தவேந்திரகுமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயமாலினி, கவிதா, மேரிசில்வியா, நளினி (இந்தியா) ஆகியோரின் மாமியாரும் கம்ஷாஜினி, தனுசாஜினி, சுபத்திரன், பிருநுஜன் வருனிகா, வருன், கோகுலன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இந்தியாவில் நேற்று (15.09.2003) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.* (22658) (29-18-16)

தகவல்:
செ.விஸ்ணுகுமார் (மகன்)

## போராட்டம் குறித்த விசேட உரை

வரலாற்றில் ஏற்படும் மாற்றங்கள் என்னும் தலைப்பில இன்று காலை 8.30 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் தமிழ் ஈழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் மா.க. ஈழவேந்தன் கருத்துரை வழங்குவார். (ஓ-3)

## பேச்சுக்கள் விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த நிதியை வடக்கு -கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பினூடாக பெறுவதைப் புலிகள விரும்புகின்றனர்.இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான புலிகளின் திருத்த ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் எனவும் அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

டோக்கியோவில் கடந்த ஜுன் 9,10 ஆம் திகதிகளில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைத்தது. ஜப்பான் வழங்கும் உதவு தொகையில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி ஏற்கனவே பல்வேறு திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்து உதவி வழங்கும் நாடுகள் மேலும் நிதி உதவியை வழங்கத் தயாராகவுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டைப்போல் இவ்வருடம் டிசெம்பர் மாதம் அல்லது அடுத்த ஜனவரி மாதம் மேலுமொரு மாநாடு கொழும்பில் நடைபெறும் ஏற்படும் என நம்புகிறேன்.

இலங்கைக்கான இந்த ஐந்தாவது விஜயத்தில் எனது நோக்கம் நிறைவேறியுள்ளது.பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா , அமைச்சர்கள் ஜீ.எல். பிரிஸ், மிலிந்த மொறகொட மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினேன் கிழக்கில் அமைச்சர் ராவூப் ஹக்கீம் மற்றும் முஸ்லிம் எம்.பிக்களைச் சந்தித்தேன். செய்தியாளர் மாநாட்டுக்கு வரும் முன்னர் ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசினேன். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினேன் -இப்படி அவர் கூறினார்.

## தியாகி திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் எஸ்.வரதராஜா, யாழ்நல்லூர்க் கோட்ட எழுச்சிப் பேரவையின் செயலாளர் சி.வி.கே.சிவஞானம், விடுதலைப் புலிகளின் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா, யாழ்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சூ.சிறில் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வு நடைபெற்ற இடத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவரும் பிரசன்னமாகியிருந்தார்.

இதேவேளை -

தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவுதின ஆரம்பநிகழ்வு நேற்றுக் காலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் இடம்பெற்றது.

மாவீரர் துயிலும் இல்லத்தைச் சேர்ந்த த.கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சுதாஸ்ம், ஈகச்சுடரை வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வசந்தியும் ஏற்றிவைத்தனர்.

தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு அரசியல்துறையைச் சேர்ந்த பாலையா மலர்மாலை அணிவித்தார். இந்நிகழ்வில் பெருமளவு போராளிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ஒ-8-9-17-30-86-70)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சிதம்பரப்பிள்ளை குமார் (வயது 22) என்பவராவார்.

மற்றச் சம்பவம் நேற்றுக்காலை மட்டக்களப்பு முகத்துவாரம் வீதியில நடைபெற்றது.

அங்கு முன்னாள் ஈ.பி. ஆர்.எல்.எவ். உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

தங்கத்துரை நவநீதன் என்னும் இந்த இளைஞனைக் கைத்துப்பாக்கியால் சுட்ட ஒருவர் ஓடித் தப்பியிருக்கிறார்.

சின்ன உப்போடையைச் சேர்ந்த நவநீதன், வீட்டிலிருந்து மட்டக்களப்பு நகருக்குச் சென்றபோதே சுடப்பட்டார்.

கடுமையாகக் காயமடைந்த அவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மரணமானார். (ஓ-3-9)

## ஜனாதிபதி பிரதமருக்கு...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் நிறைவேற்று அதிகாரம் எங்கள் அரசமைப்புப் படி நாடு, அரசு, அமைச்சரவை ஆகியவற்றின் நிறைவேற்றுத் தலைவராகிய ஜனாதிபதியாகிய எனக்கு வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் -

அரசின் நிறைவேற்ற அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு உங்களை அனுமதிக்கும்படி நீங்கள் என்னைக் கோரி வந்தமையே -

நிலைமையை அவதானித்து ஆலோசனை வழங்குவதோடு நான் தள்ளி நின்றதுக்கு முழுக்காரணமாகும்.

தாங்கள் 2001 தேர்தலின் போது நாட்டு மக்களுக்களித்த உறுதியுரையின் படி, ஆட்சிபீடம் ஏறி முதல் 100 நாள்களுக்குள் நாட்டின் பிரச்சினைகளை நிவர்த்தியாக்குவதற்கு அவகாசத்தைத் தரும்படி நீங்கள் கேட்டதற்காகவே நான் இவ்வாறு இணங்கினேன்.

இருப்பினும், 1999 தேர்தல் பிரசாரத்தின்போது என்னுடைய உயிருக்குப் புலிகள் ஆபத்து விளைவிக்க முயன்றதன் மத்தியிலும் கூட மிகப் பெரும்பான்மை ஆணை மூலம் இரண்டு தடவைகள் எனக்கு மக்கள் தந்த கடமையை நிறைவேற்றுவதற்கு நான் ஒருகணம் கூட தயங்கப் போவதில்லை. அந்தப் பின்னைய தேர்தலில் நீங்கள தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர்.

நாடு எதிர்நோக்கியுள்ள இந்தப் பயங்கர அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டைப் பாதுகாக்கும் நோக்கில் தங்களுக்கும் தங்கள் அமைச்சர்களுக்கும் நான் பலமுறை ஆலோசனைகள் வழங்க முயற்சிகளை மேற்கொண்டேன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நினைக்கின்றேன். நான் அவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டதற்கான காரணம், ஒத்துழைப்புடன் கூடிய ஓர் அரசியல் சகவாழ்வை முன்னெடுத்துச் செல்லும் ஒரு நன்நோக்கத்திலே யாகும்.

தற்போது நாட்டில் அபாயகரமான நிலைக்கு நீங்கள் இடமளித்திருக்கின்றீர்கள் என்பதை எமது எஜமான்களாகிய நாட்டு மக்களுக்கு தெரிவிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது என்றே நான் நினைக்கின்றேன். அவ்வாறான அபாயகரமான ஒரு நிலைமை இந்நாட்டுக்கு ஏற்பட்டுள்ளதற்கு பின்வரும் முறையில் அனுமதித்துள்ளீர்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

★ முதலாவதாக, அரசினதும், நாட்டு மக்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை.

★ இரண்டாவதாக, ஊடகங்களில் வெளியிட்டுள்ள தவறான செய்திகளின் மூலம், திருகோணமலையிலும் ஏனைய பிரதேசங்களிலும் உள்ள ஆபத்தான பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து மக்களையும், அமைச்சரவையையும் தவறாக வழிநடத்துதல்.

★ மூன்றாவதாக, விடுதலைப் புலிகளுக்கும் தங்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ள - தவறுகள் நிறைந்த - புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறக்கூடிய விதத்தில், இலங்கைக் குடியரசின் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடியவகையில், விடுதலைப் புலிகளுக்கு இடமளித்து எத்தகைய திட்டமும் பொறுப்பும் இன்றி சமாதான முயற்சிகளை நீங்கள் முன்னெடுத்துச் செல்வது.

பாதுகாப்புப்படைத் தளபதிகள் குறித்து நீங்கள் வெளியிட்டுவரும் பொறுப்பற்ற பல கூற்றுக்கள், மிகக் கஷ்ரமான சூழ்நிலையிலும், நாட்டுக்கு விசுவாசமான வகையில் மிகுந்த உறுதியோடு பணியாற்றிவரும் அத்தளபதிகளுக்கு முறையற்றனவாக அமைவதோடு முழுப்பாதுகாப்புப் படையின் மனத்திடத்தினையும், பாதித்து வருகின்றன.

அவற்றின் அடிப்படையில் உங்களுக்கு பின்வருமாறு கூறுகின்றேன்:-

1. திருகோணமலையின் பாதுகாப்பு நிலைமை குறித்து உண்மைகளை மறைத்துத் திரித்துக்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

2. படைத்தளபதிகள் தங்கள் கடமைகளைச் செய்யவிடாது தடுத்து, அவர்களை அவதூறு செய்வதையும் தொல்லைப்படுத்துவதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

3. நான் தலைமை வகிக்கும் தேசிய பாதுகாப்புச் சபையின் அனைத்துக் கூட்டங்களிலும் நீங்கள் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துங்கள்.

4. சிறிலங்காவின் பாதுகாப்பையும் இறைமையையும் விட்டுக்கொடுக்கும் மேலும் வேறு செயல்களைச் செய்வதையும், செய்யாமல் விடுவதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மீளக் குடியமர உடனடி...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில நிறுவனங்கள் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்து வதற்கு முன்வந்தபோதும் அவற்றை சரியான முறையில் செயற்படுத்தவில்லை

இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச நிறுவனங்களும் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இல்லாது விட்டால் அவர்களால் வழங்கப்படும் அற்ப சொற்ப சலுகைகளையும் நாம் முற்றாகப் புறக்கணிப்போம்.

அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் நாம் எமது சொந்த இடங்களுக்கு சென்று மீளக்குடியமர முடியும் என்றும் எமது இயல்பு வாழ்வுக்கு அது வழிசமைக்கும் எனவும் எதிர்பார்த்தோம்.

ஆனால், அரசும் படையினரும் தமது நலன்களைக் கருத்திற் கொண்டு எமது பாரம்பரிய பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தி எமது மீள் குடியேற்றத்தைத் தடுத்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின் கல்லோயா, திருகோணமலை மற்றும் கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் சிங்கள மக்களை மீளக்குடியமர்த்தும அரசு எமது பகுதிகளில் எம்மைக் மீளக்குடியமர அனுமதிப்பதற்கு மறுக்கிறது.

நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு வீடமைப்பு மற்றும் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு என கடந்த கால அரசினால் வழங்கப்பட்ட நிதி இன்றுவரை பலருக்குக் கிடைக்கவில்லை. இந்த நிதி அதிகாரிகளால் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் சென்று வாழும் போதுதான் இங்கு இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படும் அதன்மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முடியும்.

எமது பகுதிகளில் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகள் கோருகின்ற இடைக்கால நிர்வாக சபையை வழங்க அரசு முன்வர வேண்டும்.

இடைக்கால நிர்வாக சபையை புலிகளிடம் வழங்காத பட்சத்தில் எமது வாழ்வுரிமையை வென்றெடுப்பதற்காக அவர்களுடன் நாங்களும் ஆயுதம் ஏந்திப் போராடும் சூழல் ஏற்படும் இதனை யாரும் தடுக்க முடியாது - என்றார்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின உள்ளூர் இடம்பெயர்ந்தோர் செயற்திட்ட அதிகாரி வி.வேழினி, யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கம் உட்பட பலநிகழ்வில் உரை நிகழ்த்தினர். (ம-5-86)

## பிரதமர் வெளியிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித்திருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க. "திருகோணமலை நிலைமை தொடர்பாக இனியும் நான் வாய்மூடி மௌனியாகப் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது."

"நாட்டின் மிகச் சிக்கலான இந்த விவகாரம் குறித்து தகுந்த இராஜதந்திரமும் திறமையுமற்ற நிலையில் அரசு இருப்பது என்னை ஆச்சரியப்பட வைத்துள்ளது."

"நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இந்த விடயத்தில் பாதுகாப்புப்படைகள் உரிய நடவடிக்கை எடுக்கமுடியாத நிலையில் இருப்பதற்கு ஒரே காரணம் புலிகளைச் சமாதானப்படுத்துவதற்காக அப்படிச் செய்யக்கூடாது என நீங்கள் வலியுறுத்தி வருவது தான்" என்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை நிலைவரம் தொடர்பாக அண்மைக்காலத்தில் பிரதமர் மற்றும் அமைச்சர்களான பீரிஸ், மாரப்பன ஆகியோரால் வெளியிடப்பட்டவை எனக் கூறப்படும் கூற்றுக்களை இக்கடிதத்தில் ஆங்காங்கே - விலாவாரியாக -ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அக்கூற்றுகளை மறுத்துரைக்கும் கருத்துக்களையும் அவர் அதில் விவரித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு 2001 டிசெம்பரில் பதவி யேற்ற பின்னர், பிரதமருக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்த மிகக் கடுமையான தொனியில் அமைந்த - கடிதம் இது வாகும்.

இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 9மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(29-12) (21933)

இதய அஞ்சலி

சிவசுப்பிரமணியம்
புவராஜா
(புவா)



காத்திருந்த நினைவுகளைத் துவிக்க விட்டு
காலமெலாம் எம்முடன் இருக்கவென்று
ஊருக்கு வருவேன் என்றாய்!
காத்திருந்தோம் நாமெல்லாம் அனைவரும் - ஆனால்
காலனவன் காட்டிவிட்டான் தனது வித்தையை.

காத்திருந்து வாடும் திருநெல்வேலி மத்திய விளையாட்டுக்கழக நண்பர்கள்

ஸ்ரீ சாரிகா வேனர்ஸ்

எமது சட்ட ரீதியாக அங்கீகாரம்பெற்ற A தரம் உடைய சாரதிப் பயிற்சிக் கல்லூரியில் சகலவிதமான வாகனங்கள் செலுத்துவதற்கும் சிறந்த முறையில் பயிற்சி அளித்த சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் இம்மாத இறுதிக்குள் கனரக வாகனங்களுக்குரிய செயல் முறைப்(ரயல்)பரீட்சை யாழ். நகரிலேயே நடைபெறும் என்பதை யாழ். மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

பஸ்நிலையம் முன்பாக, இல.38,கஸ்தூரியார் வீதி, (H.N.Bank இற்கு பின்னால்) யாழ்ப்பாணம்.
தலைமைக்காரியாலயம் இல.108, புதிய பஸ்நிலையம், வவுனியா. T.P. 024-22515
(19318) (29-12-18)

யாழ்நகரில் மீண்டும் பல வர்ணங்களில்
TVS Scooty Pep, Fiero F2
மோட்டார் சைக்கிள்கள்
எமது ஸ்தாபனத்திற்கு வந்துவிட்டன.






அங்கீகாரம் பெற்ற TVS விற்பனை முகவர்
பாசா மோட்டோர்ஸ்,
163,165, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. : 222 2544
(சி-30207)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புலிகளின் வரைபு சமர்ப்பிக்கப்படும் சமயத்தில் தெற்கில் குழப்பம் ஏற்படும் என்று கூறுவது தவறு



செவ்வி கண்டவர்:
குகா

**ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூர்த்தியடைகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இருதரப்புகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு இன்று நிறைவடைகின்றது.**

**இக்காலப் பகுதியில் நடந்தவைகள் என்ன, அவை தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன பரிகாரத்தை தந்தன என்பன பற்றிய கருத்துக்களை தாங்கி வரும் செவ்விக்களம் இது.**

**பலரது செவ்விகள் இந்தப் பகுதியில் தொடராக வெளிவரவிருக்கின்றன. அந்த வரிசையில் முதல் செவ்வி இது.**

*கேள்வி:-* அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள ஆரம்பமாகி ஓராண்டு பூர்த்தியாகியுள்ளது; இவ்வளவு காலமும் நடந்த பேச்சுக்களில் ஏதாவது முன்னேற்றம் உண்டா?

*பதில்:-* பேச்சுக்கள் ஆரம்பமாகி ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது. ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. ஆறுசுற்றுப் பேச்சுக்களிலும், ஆரம்பத்தில் மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய வகையிலும் - மக்கள் மகிழ்ச்சியடையக் கூடிய வகையிலும் - பல செய்திகள் வெளியாகின; பல இணக்கப்பாடுகளும் காணப்பட்டன.

ஆனால், காலம் செல்லச்செல்ல - பேச்சுக்கள் கட்டம் கட்டமாகத் தொடரும் சூழலில் ஒவ்வொரு சுற்றுப்பேச்சுக்களின் போதும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், இணக்கப்பாடுகள் - அவை இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் - நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதுவே பேச்சு முயற்சிக்கும் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் உருவாகக் காரணமாக அமைந்தது.

ஒவ்வொரு கட்டப் பேச்சின் போதும், இயல்பு நிலையைக்கொண்டு வருவதற்கு - யுத்தத்தால் சீரழிந்த மக்களின் வாழ்வைச் சீராக்குவதற்கு - இராணுவ நெருக்குவாரங்களைப் போக்குவதற்கு - பொருளாதாரத் தடையை அகற்றுவதற்கு - மக்களின் தடுக்கப்பட்ட நடமாட்டச் சுதந்திரத்தைச் சீராக்குவதற்கு - முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதற்காக யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை செம்மையாக நடைமுறைப் படுத்தப்படாத காரணத்தினால் மக்கள் மீதான நெருக்குவாரங்கள் அதிகரித்துக் கொண்டு போகின்றன.

பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படாததால், பேச்சுக்களை இடைநிறுத்த வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். மக்களுக்கு நன்மை அளிக்காத போலி வாக்குறுதிகளின் அடிப்படையில், நாங்கள் ஒரு பேச்சைத் தொடரமுடியாது.

### தலைவர் பிரபாகரனின் உறுதியும் அர்ப்பணிப்பும்

நாங்கள் மக்களுக்காகப் போராடுகின்ற தேசிய விடுதலை அமைப்பு. எமது தலைவரின் உறுதியும் அவரது அர்ப்பணிப்பும் எல்லோருக்குமே தெரிந்தது. எமது மக்களின் எதிர்காலத்துக்கு நன்மை அளிக்காத எந்தக் காரியங்களிலும், எந்த நடவடிக்கைகளிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளமாட்டார்.

ஏற்கனவே பல நெருக்கடிகள், சவால்கள் அவருக்கு இருந்தபோதும் எமது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய - அல்லது மக்களை அடிபணிய வைக்கக் கூடிய - அல்லது எமது மக்களின் உரிமைகளை மறுக்கக் கூடிய - விடயங்களுக்கு - இணங்குவதற்கு அவர் என்றுமே விரும்பமாட்டார். அத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொண்டு, எமது மக்களுக்கு சுதந்திரமான - கௌரவமான - ஒரு வாழ்வைத் தேடிக்கொடுப்பதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படுகிறார் தலைவர். அவருடைய தலைமைத்துவத்தில் எமது தேசிய விடுதலை அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழ் நிலை காரணமாக சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் தலைவருக்கு ஏற்பட்டது. பேச்சுக்களில் எந்தவித நன்மையும் ஏற்படாத காரணத்தால் பேச்சை இடை நிறுத்த அவர் முடிவு செய்தார்.

எமது எதிர்ப்பைக் காட்டுவதற்காகவும் ஓர் உறுதியான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவும் சர்வதேச சமூகத்திற்கு எமது நிலைப்பாட்டை தெளிவாக விளக்குவதற்காகவும் பேச்சை இடைநிறுத்தினோம். நம்பகத் தன்மையான சூழ்நிலையை ஏற்படுத்தி நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டும், மீண்டும் சுமுகமான - உரிய - சூழலை உருவாக்குவார்களேயானால் நிச்சயமாக சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்க தலைவர் ஆயத்தமாகவே இருக்கின்றார்.

### கண்காணிப்புக் குழுவின் போக்கும் செயற்பாடும்

*கேள்வி:-* மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அரசும் - நீங்களும் உடன்பாடு ஒன்றைக் கைச்சாத்திட்டீர்கள். அந்த உடன்படிக்கை முறைப்படி நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அது விடயத்தில் மேற்பார்வை செய்யும் கண் காணிப் புக்குழு மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனரா?

*பதில்:-* உண்மையிலேயே உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கண்காணிப்புக் குழுவினர் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டியதும் கட்டாயமானதாகும். மக்களின் இந்த எதிர்பார்ப்பையும் நிலைப்பாட்டையும் கண்காணிப்புக் குழுவினருக்கு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். நோர்வே அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கூட தெளிவுபடுத்தி வருகிறோம்.

கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளிலும் சமாதான முயற்சிகளிலும் மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில், மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஒன்றரை வருட யுத்தநிறுத்த காலத்திலும் - ஒருவருட கால பேச்சுக காலத்திலும் - நாம் பெற்ற அனுபவங்கள் ஊடாக புதிய நிலைப்பாட்டை எமது தலைமைப்பீடம் எடுத்துள்ளது. வடக்கு-கிழக்கில் - தமிழர் தாயகப் பிரதேசத்தில் - தமிழ்மக்களே தங்களை நிர்வகிக்கக் கூடிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பை நிறுவிக்கொள்ளவேண்டிய அவசியத்தை நாம் தெளிவாக்கியுள்ளோம். இது நாம் எடுக்கும் புதியதொரு நிலைப்பாடு அல்ல.

ஜனாதிபதியாக இருக்கும் சந்திரிகா அம்மையார், முன்னர் தான் ஆட்சியில் இருந்த காலத்திலும் சரி, ரணில விக்கிரமசிங்க தான் ஆட்சிக்கு வந்த காலத்திலும் சரி இருவருமே வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - புலிகளின் ஆளுகைக்குள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை நிறுவிய அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கப் போகின்றோம் என ஏற்கனவே கூறி வந்துள்ளனர். இதைத்தான் இன்று நாம் மீண்டும் கூறுகின்றோம்.

இதுவே இன்றுள்ள சூழ்நிலையில், நடைமுறைச் சாத்தியமான வழியாகும். இதைவிட வேறு எந்த வழியும் சாத்தியம் இல்லை.

முழுஅளவில் அதிகாரம் பொருந்தியதாகவும் - எவராலும் குழப்ப முடியாததுமாகவும் - தமிழ்மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றக் கூடியதாகவும் - அந்த நிர்வாகக் கட்டமைப்பை இடைக்கால ஏற்பாடாக நிறுவிக்கொள்ள வேண்டும்.

சர்வதேச ரீதியாக நாம் கவனித்தால் பிரதேசரீதியாக மோதல்கள், பிணக்குகள் காரணமாக நடந்த யுத்தங்களின் பின் இப்படியான கட்டமைப்புக்கள் நிறுவப்பட்டே வந்துள்ளன என்பது புலப்படும்.

இப்படியான கட்டமைப்புக்களை அந்த நாடுகள் நிறுவித்தான், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தேசத்தையும் மக்களின் மறுவாழ்வையும் மீளக் கட்டி எழுப்பியுள்ளன. இடைக்கால அமைப்பு புதிய விடயம் அல்ல.

பரீஸில் நாம் சட்ட வல்லுநர்களுடன் பேச்சுக்களை நடத்திய சமயத்தில், இத்தகைய இடைக்கால அமைப்பு உருவாக்கப்பட்ட ஏனைய நாடுகளில் அது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட வரைவுகள் பரிசீலிக்கப்பட்டன. அந்த வரைவுகள் அந்தந்த நாடுகளின் அரசமைப்புக்குப் புறம்பாகவே - தனி அதிகாரம் கொண்ட அமைப்புகளை உருவாக்குவனவாகவே - இருந்தன. அந்த நாடுகளில் முன் வைக்கப்பட்ட வரைவுகளின் அடிப்படையில்தான் எமது வரைவும் அமையும். எமது சட்ட வல்லுநர்கள் சிறப் புற அந்த வரைவைத் தயாரித்துள்ளனர்.

சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்ட - சர்வதேச சமூகம் அங்கீகரித்த - வரைவுகளின் அடிப்படையில் எமது வரைவும் அமைந்துள்ளது. எமது வரைவை இலங்கை அரசும் ஏற்றுக்கொள்ளும் என நாம் நம்புகிறோம். இதுவே பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். தற்போது உருவாகியுள்ள புதிய சூழ்நிலையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் தனது நிலைப்பாட்டில் அரசு உறுதியோடும் அர்ப்பணிப்போடும் இணைந்து கொள்வதுதான் நல்லது எனக் கருதுகிறேன்.

### புலிகள் சமர்ப்பிக்கும் வரைவு எத்தகையது?

*கேள்வி:-* தாங்கள் சமர்ப்பிக்கவுள்ள வரைவில் சட்டம், ஒழுக்கு, நிதி, காணி அதிகாரங்களும் அடங்குகின்றனவா?

*பதில்:-* வரைவு இன்னமும் அரசிடம் சமர்ப்பிக்கப்படாததால், அதுபற்றி நான் எதுவும் கூறமுடியாது. எனினும், இந்த விடயங்கள் இல்லாத நிர்வாகத்தால் பயன் இல்லை என்பதை மட்டும் கூறி வைக்க விரும்புகிறேன். இவ் அதிகாரங்கள் எதுவும் இல்லாமல் அபிவிருத்தியோ, மீள்குடியேற்றமோ நிதிநிர்வாகமோ செய்யமுடியாது. இந்த அதிகாரம் இல்லாத அமைப்பு வெறும் ஒரு நிறுவனமாகவே அமையும். நாம் கோருவது வெறும் நிறுவனம் அல்ல என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

நாம் சமர்ப்பிக்கும் புதிய வரைவில் இந்த அதிகாரங்கள்தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும். ஆனாலும், என்னென்ன - எத்தகைய - அதிகாரங்களை வரைவு கொண்டுள்ளது என்பது குறித்து நோர்வேயிடம் வரைவைக் கையளித்தபின்னர்தான் கூறக கூடியதாகவிருக்கும்.

'சிரான்' உபகுழு முன்னர் செயலிழந்தது சகலருக்கும் தெரியும். எந்த அதிகாரமும் அதற்கு இல்லாததால் - கொஞ்சங்கூட நகர முடியாமல் - அது முடங்கிப் போனது. அந்தப் படிபபினையைப் பாடமாகக் கொண்டு, சர்வதேச சட்டங்களிலும் இலங்கை அரசமைப்புச் சட்டத்திலும் நிபுணத்துவம் பெற்ற சட்ட வல்லுநர்கள் இணைந்து, நடைமுறைக்குச் சாத்தியமான இடைக்கால நிர்வாகத்துக்கான சட்டவரைவை உருவாக்கியுள்ளோம்.

இதை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளும்; சர்வேதச சமூகம் அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். இந்த அடிப்படையில் தமிழ் மக்களின பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசு அர்ப்பணிப்போடு முன் வருமாயின், நிச்சயமாக அமைதிச் சூழலை உறுதியாக முன்னெடுக்க முடியும் என நான் நம்புகின்றேன்.

*கேள்வி :-* ஏற்கனவே அரசால் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரைவுகளுக்கும், தாங்கள் தயாரித்துள்ள வரைவுக்கும் இடையில் பெரும் இடைவெளி இருக்கும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:-* மூன்று தடவைகள் அரசால் எமக்கு வரைவுகள் தரப்பட்டன. ஆனால், அவற்றில் எந்த வித அதிகாரங்களும் இருக்க வில்லை. மிகச் சுருக்கமான - ஒரு பேச்சுக்கான அடிப்படைகளைக் கொண்ட - வரைவுகளைத்தான் அரசு சமர்ப்பித்திருந்தது. முன்மொழிவுகளாகவே அந்த வரைவுகள் அமைந்தன. அவற்றில் பல அதிகாரங்கள் குறித்துத் தெளிவாக ஏதும் வரையறுக் கப்படவில்லை.

நாம் கையளிக்கவிருக்கும் வரைவில் அதிகாரங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன. என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும், அந்த அதிகாரங்கள் உள்வாங்கப்படும் போதுதான் அது இடைக்கால நிர்வாகம் என்ற முழு வடிவம் பெறும் என்பதெல்லாம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த அடிப்படையில்தான எமது வரைவு அமைகின்றது.

### பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகுமா?

*கேள்வி:-* நீங்கள் சமர்ப்பிக்கும் வரைவின் அடிப்படையில் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கும் என நம்புகின்றீர்களா?

*பதில்:-* நிச்சயமாக, அரசு பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவும் பேராசிரியர் பீரிஸும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை குறித்து பகிரங்கமாகவே பேசி வருகின்றனர். அந்த அமைப்பின் அவசியத்தையும் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள்; வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் நடைமுறைச் சாத்தியமான - முழுமையான, அதிகாரம் கொண்ட - மீண்டும் குழம்பிப் போகாத - ஓர் இடைக்காலக் கட்டமைப்பை உருவாக்கும்போது அதை அவர்கள் ஏற்கத்தான் வேண்டும். எமது வரைபை அவர்கள் நிராகரிப்பார்கள் என நான் நினைக்கவில்லை.

எமது வரைபை நிராகரிப்பது, சர்வதேச உதவிகளை இழக்க வழி செய்துவிடும். சர்வதேசப் பொருளாதார உதவிகளைப் பெற்று சிங்களத் தேசத்தையும் தமிழ் தேசத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் எமது வரைபை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.

**.....புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து ஒன்றரை வருடம் பூர்த்தியான சூழ்நிலையில் துப்பாக்கிச் சத்தங்களும் குண்டு முழக்கங்களும் ஓய்ந்திருக்கின்றனவே தவிர, மக்களின் சீர்குலைந்த வாழ்வு நிலையை மீள ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை ஏதும் முன்னேற்றகரமாக மேற்கொள்ளப்படவில்லை. இது மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது. இந்த நிலை மாறி நம்பிக்கையுடனான சூழலைக் கட்டி எழுப்ப அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதுவே எமது எதிர்பார்ப்புகள்.....**



### தென்னிலங்கையில் குழப்பம் வருமா?

*கேள்வி:-* புலிகளின் வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பின் தெற்கில் குழப்பம் ஏற்படுகின்ற வகையில் வன்னிச்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளும் இந்தியாவின் அரசியல் அழுத்தங்களும்

**43 வருடங்களாக பல நாடுகளில் வெளிநாட்டுத் தூதுவராகப் பணியாற்றிய பேர்னாட் திலகரத்தின இலங்கை - இந்திய விவகாரங்கள் குறித்து நன்கு அறிந்தவர். தொடர்புகளைக் கொண்டிருந்தவர். இந்தியாவில் ஸ்ரீலங்காவுக்கான உயர் ஸ்தானிகராக மூன்று முறை பணியாற்றியவர். அவரது அனுபவங்களை லங்காதீப நாளிதழுக்கு வழங்கியிருந்தார். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

சமாதானத்தை எட்டுவது என்பது மிகச்சிரமமானதொரு செயலாகும். இன்று இடம்பெறும் சமாதானத்திற்கான முன்னெடுப்புகளை உற்று நோக்குகையில், அது நன்கு புலனாகிறது. இதில் பலவித சவால்கள் மற்றும் சிக்கல்கள் தோன்றியபோதும், இந்த அரசு ஆரம்பித்த சமாதான முயற்சிகள் இன்னும் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

கடந்த இரண்டு வருட காலங்களாக நாட்டில் யுத்தமில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்று நடைமுறையிலுள்ளது. இத்தகைய பாரதூரமான பிரச்சினையொன்றின்போது, பல தரப்பினரதும் கருத்துக்களுக்கமைய செயற்படுவதில் சிரமமுள்ளது. ஆயினும், எவ்விதத்திலாவது சமாதானத்தை எட்டுவது மிக அவசியமானதாகும். இத்தகைய செயற்பாடுகளின்போது சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரினதும் பங்களிப்பு அவசியமானது என்பதே எனது கருத்தாகும்.

இன்று இச்சமாதான முயற்சிகள் இடைக்கால நிர்வாகம் என்ற விடயத்திற்கு அண்மையாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தன இடைக்கால நிர்வாகம் பற்றிப் பிரஸ்தாபித்தார். அதன் பின்னர் 2000ஆம் ஆண்டில் தற்போதைய ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புத் திருத்த யோசனைகளில் இடைக்கால நிர்வாகம் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளும் அடங்கியிருந்தன.

அதனால், மக்கள் மனதிலும் அது சம்பந்தமான சில கருத்துகள் உருவாகியிருக்கக் கூடுமென நான் எண்ணுகிறேன். இறுதித் தீர்வொன்று எட்டப்படுவதற்கு முன்னரான இந்த இடைப்பட்ட கால எல்லைக்கு இவ்வாறான இடைக்கால நிர்வாக அமைப்பொன்று அவசியமானதாகும்.

இடைக்கால நிர்வாகம் என்பது பலவிதமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. இலங்கை அரசு இன்று விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இடைக்கால நிர்வாகமொன்றிற்கான ஆலோசனைகள் அடங்கிய வரைவொன்றைச் சமர்ப்பித்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பும் மாற்று ஆலோசனைகள் அடங்கிய வரைவொன்றினை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிகிறது.

அவர்களது மாற்று ஆலோசனைகள் பற்றிய விவரங்களை தெரிந்துகொள்ளும்வரையில், சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் எதனையும் வெளியிடமுடியாத நிலை உள்ளது. ஆயினும் தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது, அரசின் இடைக்கால நிர்வாக ஆலோசனைகளுக்கும், புலிகள் அமைப்பினால் வெளியிடப்படவுள்ள ஆலோசனைகளுக்கும் இடையில் அதிகளவிலான வேறுபாடுகள் இருக்கக் கூடும்.

எவ்வாறாயினும் பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரங்களை (சமஷ்டி அல்லது வேறு விதமான) ஏற்பதற்கு புலிகள் தயாராய் இருப்பதாகத் தெரிகிறது. அவ்விதமாகவேனும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம், பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படுமாயின் அது மிகச் சிறந்ததாகும்.

இன்று சமாதானப் பேச்சு தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ள போதும், சமாதானத்துக்கான முயற்சிகள் கைவிடப்படவில்லை. எத்தகைய நிலைப்பாட்டிலும், போரைவிட சமாதானமே சிறந்ததாதலால், இன்று நிலவும் தற்காலிகமான பின்னடைவுகளையிட்டு பெரிதாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

எவ்வாறாயினும் எமது நாட்டின் இப்பிரச்சினையில், எமது அயல் நாடான இந்தியாவின் கருத்துக்கள், ஆலோசனைகள் முக்கியமானவை. இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் அதிகாரப் பரவலாக்கல் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்று எட்டப்படுவதைத் தான் விரும்புவதாகவும் இந்திய அரசு தனது மாநில அரசுகளுக்கு வழங்கியுள்ள அதிகார வரம்புகளுக்கு மேற்படாத வகையில் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் இந்திய அரசு ஏற்கனவே கூறியுள்ளது.

இது எம்மால் புரிந்துகொள்ளப்படவேண்டிய உலக அரசியல் நிலைமையின் பிரதிபலிப்பாகும்.

இலங்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இந்திய அரசு அதிக அக்கறைகொள்வதற்கு காரணம், எமது நாட்டில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளால் இந்தியாவில் தீய விளைவுகள் உருவாகலாமென்ற பீதியே ஆகும். பாதுகாப்பு மற்றும் ஸ்திர அரசியல் நிலை போன்ற காரணிகளை முன்னிட்டே இந்தியா, இலங்கையின் பிரச்சினையில் கவலை கொள்கிறது.

எம்மால் அதிக அதிகாரங்கள் வழங்கப்படும் வேளையில், தமிழ் நாடும் தனிநாட்டைக் கோரலாமென இந்திய அரசு கருதுவதாகத் தெரிகிறது.

எமது அரசு ஏதேனுமொரு வகையில் இந்திய அரசு தமது மாநிலங்களுக்கு வழங்கியுள்ள அதிகார மட்டத்திற்கு மேலான அதிகாரங்கள் கொண்ட அதிகாரப் பகிர்வு ஒன்றை வழங்க முற்படும்போது, அது பெரும பிரச்சினைகளை உருவாக்குமென்பது நிச்சயம். அவ்வாறான ஒரு நிலையின்போது, இந்திய அரசினால் மேற்கொள்ளப்படும் எதிர்விளைவுகள், எத்தகையனவாக அமையுமென்பதை தற்போது கூறமுடியாது.

அதிக அதிகாரப் பகிர்வொன்றுக்கு முனையும்போது, இந்தியாவில் மாத்திரமின்றி இலங்கையின் தென்பகுதி அரசியல் நிலையும் இன்றிருப்பதை விடவும் தீவிரமடைவதற்கு வாய்ப்புள்ளது. அரசு இதையிட்டும் சிந்திக்க வேண்டியுள்ளது. இதற்கிடையில் பிறிதோர் ஆலோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுப்பாதுகாப்பு ஒப்பந்தமொன்று கைச் சாத்திடப்படுவதன் அவசியமாகும்.

அவ்வாறான ஒன்றிற்கு அவசியமுள்ளதா? என்பது பிரச்சினைக்குரியதே. எனது தனிப்பட்ட கருத்திற்கமைய இந்த இரு நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு ஒப்பந்தமொன்று அவசியமற்றது. ஆயினும், பாதுகாப்புக்கான நடவடிக்கைகளின்போதான ஒத்துழைப்புகள் முக்கியமானதே. இந்தியாவில் இன்று இருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி நாளை இல்லாமற்போகலாம். நாளை ஆட்சியேற்கும் காங்கிரஸ் கட்சி மறுநாள் அதிகாரத்தை இழக்கலாம். இதனால், இத்தகைய ஒப்பந்தங்கள் உருவாவது சாதகமற்றதாகத் தோன்றிய போதிலும், எதிர்காலத்தில் அவைகளால் வேறு அனுகூலமொன்று ஏற்படக்கூடுமென்பதால் நாம் இயன்ற வரையில் எமது சுயாதீனத்தைப் பாதுகாத்துக்கொள்வதே முக்கியமானது.

நெருக்கடியான அபாய கட்டங்கள் உருவாகும் சந்தர்ப்பங்களில் அதிக பாதுகாப்புக்கான ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் கைச்சாத்தாகும் ஒப்பந்தங்களினால் இப்பிரச்சினை தீர்க்கப்படமாட்டாதென்பதற்கான, சாட்சியங்கள் நிறையவே உள்ளன. 1987 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையிலான பிரபல்யமான இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதற்கமைய, பாதுகாப்பு சம்பந்தமாக இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கு பகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்பட்டது. ஆயினும், அவ்வொப்பந்தமும் வெற்றியளிக்கவில்லை.

1987 இல் இடம்பெற்ற இந்திய-இலங்கை ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட ராஜதந்திர நடவடிக்கைகளில் வெளிப்படையாகவே ஈடுபட்டிருந்த நான் அச்செயற்பாடுகள் பற்றி நன்றாகவே அறிந்துள்ளேன். அதனால், இன்று அதுபற்றி என்னால் சுதந்திரமான கருத்துக்களை வெளியிடமுடியும்.

அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வேறொன்றும் செய்ய முடியாத இக்கட்டான நிலையிலேயே, அந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டார். அந்த உடன்பாட்டின் மூலம் எதுவிதமான அரசியல், பாதுகாப்பு தொடர்பான நன்மைகளும் இல்லையென்பதை ஜே.ஆரைப்போன்றே, அச்செயற்பாடுகளில சம்பந்தப்பட்டிருந்த நாம் அனைவரும் அறிந்திருந்தோம்.

இருப்பினும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தெளிந்த அரசியல் ஞானத்தில் பெரும் சூரராக இருந்தார். அவர் கடந்த காலங்களில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினைத் தமது அரசியல் லாபங்களுக்காகப் பயன் படுத்திக் கொண்டார். இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகும்வேளையிலும் அது சாத்தியமற்ற ஒன்று என்பதை அவர் நன்கறிந்திருந்தார். அதற்கமைய அந்நாட்டிலிருந்து இராணுவ ரீதியான உதவியொன்றைப் பெற்று இப்பிரச்சினையை பலத்தின் மூலம் கட்டுப்படுத்த நுட்பமான திட்டமொன்றை வகுத்தார்.



இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான சில மணி நேரங்களுக்குள்ளாக ராஜீவ் காந்தி கொழும்பில் தங்கியிருந்த வேளையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்திய இராணுவத்தை இங்கு அனுப்பிவைக்குமாறு கோரினார். அதற்கிணங்க ராஜீவ் காந்தி இந்திய இராணுவத்தை இங்கு வரவழைக்க வேண்டியதாயிற்று. இச செயல் ராஜீவ் காந்தியின் தீர்க்காலோசனையற்ற நிலையால் ஏற்பட்ட ஒன்றாகும்.

எமது நெருங்கிய நட்பு நாடு என்ற வகையில் இந்தியாவின் அரசியல் முன்னெடுப்புகள், இலங்கைப் பிரச்சினைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தியாவில் இன்று ஆட்சியிலுள்ள பாரதிய ஜனதா கட்சியின் கொள்கைகளுக்கும் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளுக்கும் இடையில் சிறு வேறுபாடுகள் காணப்பட்டாலும் இந்தியாவிற்கான பொதுவான அரசியல் கொள்கைகள் எக்கட்சியின் அதிகாரத்தின் கீழும் மாற்றமடைவதில்லை.

எனது 43 வருடகால ராஜதந்திர சேவையில் கூடியபங்கு இந்திய செயற்பாடுகளுடனான தொடர்புகளைக் கொண்டிருந்தமையால் இந்தியா எம்மைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை நான் நன்கறிவேன்.

நான் அநேக மேற்குலக மற்றும் கீழைத்தேய நாடுகளில் தூதராகப் பணியாற்றியுள்ள போதும் இந்திய வெளி விவகார அமைச்சின் அதிகாரிகளைப் போன்று ஆற்றல் மிக்க அதிகாரிகளை வேறெந்தவொரு நாட்டிலும் காணவில்லை. எந்தவோர் அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள், தங்களது வெளிநாட்டுக் கொள்கைகளைமாற்றுவதற்கு இடமளிப்பதில்லை. அவர்களுக்குப் பாகிஸ்தானைப் பற்றி ஒரு நிலைப்பாடு உள்ளது. இலங்கையைப் பற்றிய பிறிதொரு நிலைப்பாடு உள்ளது.

இவற்றை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்திய வெளிவிவகார அமைச்சு, இலங்கையின் செயற்பாடுகளில் அதிக கவனமெடுப்பதற்கு காரணம் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அரசியல் தீர்வுகள், இந்தியாவுக்குப் பாதகமாக அமையலாமென்ற சந்தேகமே ஆகும்.

இந்திய அதிகாரப் பகிர்வுக்கு மேலதிகமான அதிகாரங்கள் கொண்ட தீர்வொன்று இங்கு எட்டப்பட்டால் அதன்மூலம் இந்தியாவுக்கு ஏற்படும் பாதிப்புகளையிட்டு இந்திய வெளிவிவகார அமைச்சு தீர்க்கமான கணிப்பீட்டினைக் கொண்டுள்ளது. இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் மரணம் காரணமாக, இந்திய அரசினால் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எவ்வித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாதென்பது சிலரது அபிப்பிராயமாக உள்ளது. ஆயினும், அந்நாட்டின் அரசியல தலைமை, சோனியா காந்திக்குக் கிடைக்குமாயின் அவர் தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு உட்பட்டு கருமமாற்றக் கூடுமென்று நான் கருதமாட்டேன்.

எவ்வாறாயினும் காங்கிரஸ் கட்சியை விடவும் பாரதிய ஜனதா கட்சி பாதுகாப்பு நடவடிக்கைகளில் கடும் போக்கினைக் கொண்டிருந்தாலும் அனைவரும் இந்தியப் பாதுகாப்புக் கொள்கைகளுக்கு அமையவே செயற்பட முடிந்துள்ளது. இந்திய அரசு இலங்கைக்கான தீர்மானமொன்றினை மேற்கொள்ளும்போது தமிழ் நாட்டு அரசியல் நிலையையும் மற்றும் அதன் முதலமைச்சரான செல்வி ஜெயலலிதாவின் அபிப்பிராய பேதங்களையிட்டும், செவிமடுப்பது அவசியமாயுள்ளது.

இந்திய அரசியல் தீர்மானங்களின் சாதக பாதகங்களைப் பிரதி பலிக்கும் முக்கிய களமாக தமிழ் நாடு அமைவதால், அதைத் தவிர்த்துச் செயற்படுவது இந்திய அரசுக்கு இயலாத காரியமாகும். இதனால் தமிழ் நாட்டு அரசியல் களத்தில் இலங்கையின் பிரச்சினைகள் பாரதூரமான பாதிப்புகளை உருவாக்கவல்லன.

அண்மையில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலமொன்றினை அமைக்கும் ஆலோசனைக்கு தமிழ் நாட்டின் முதலமைச்சர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். அத்தகைய பாலமொன்று அமையும் நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு மிகச் சுலபமாக தமிழ் நாட்டுடனான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் வாய்ப்புகள் உருவாகலாமென்று கருதியே ஜெயலலிதா பீதியடைந்துள்ளார். இதன் காரணமாகவே அவர் அதற்குத் தமது தீவிரமான எதிர்ப்பினைக் காட்டியுள்ளதோடு, பாதுகாப்பினைக் கருதியே தாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.

ஜெயலலிதா விடுதலைப்புலிகள் அமைப்பின் தீவிரமான எதிரியாவார். அதேவேளை, அவர் காங்கிரஸ் கட்சியினதும் மற்றும் சோனியா காந்தியினதும் மிக நெருங்கிய நண்பியுமாவார். இதன் மூலம் அவரது எதிர்ப்பை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அவர் எதிர்கால அரசியலை முக்கியமெனக் கருதுகிறார்.

அதாவது, இப்பாலம் நிறுவப்படுவதால் நாளை தமிழ்நாட்டில் எத்தகைய பிரச்சினைகளும் உருவாகக் கூடுமென அவர் ஆலோசிப்பது தெரிகிறது. அவரைப் பொறுத்த வரையில அது மிகச் சரியானதே. எமது சிந்தனை, இப்பாலம் அமைவதன் மூலம் இலங்கையின் எதிர்காலப் பொருளாதார வளம் பற்றிய நோக்காகவே உள்ளது.

இந்திய அரசின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இச் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. உலகிலுள்ள இராணுவங்களில் நான்காவது இடத்தினை வகிக்கும் இந்திய இராணுவத்தால் கூட கட்டுப்படுத்த இயலாத அல்லது கட்டுப்படுத்தப்படாத, பிரபாகரன் என்னும் மனிதர் ஓர் இலகுவான அரசியல் பாத்திரமானவரல்லர். அவரது நிலை குருதியைக் கொண்டும் இரும்பைக் கொண்டும் சாதிக்கத் தயார் நிலையிலுள்ள ஒருவரது நிலையாகும். அவர் இந்திய இராணுவத்திற்கே சவால் விடுத்த ஒரு நபராவார். அவர் வசம் தற்கொலைப்படை ஒன்றுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் மீண்டும் இந்திய இராணுவத்தை வரவழைத்து இந்நாட்டிலிருந்து தீவிரவாதத்தை ஒழிக்கலாம் என நான் நினைக்கவில்லை.

பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில், இந்திய இராணுவத்தை இந்நாட்டிலிருந்து வெளியேற்றிய முறை குறித்து இந்திய அரசு அதிருப்தி கொண்டுள்ளது. அன்றைய நிலையில் ஜனாதிபதி பிரேமதாஸ செயற்பட்ட விதம் அவரது நிலைப்பாட்டிற்கமைய சரியானதே. இருப்பினும் ராஜதந்திர மட்டத்தில் அவர் செயற்பட்டிருப்பின் இந்திய அரசின் நல்லெண்ணத்தில் கறைபடியாது காப்பாற்றியிருக்கலாம்.


கடந்து போனதையிட்டு இன்று பிரஸ்தாபிப்பது பயனற்றதாகும். அரசு சமாதானத்தை நிலை பெறச் செய்வதற்காக ஈடுபாட்டுடன் செயலாற்றுவது புலனாகிறது. இதில் புலிகள் அமைப்பு கொண்டுள்ள ஈடுபாட்டினைப் பற்றிப் பலரும் பலவிதமாகப் சொல்கின்ற போதும், அவர்கள் இன்னமும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து வருவதால் அதை யிட்டும் சிந்திக்க வேண்டியுள்ளது. சமாதான முனைப்புகள் பற்றி நாம் நிறைந்த அனுபவங்களைப் பெற்றுள்ளோம். திம்புப் பேச்சுகளில் கலந்துகொண்ட அரச பிரதிநிதிகளில் நானும் ஒருவனாக செயற்பட்டுள்ளமையால், அங்கு ஆரம்ப முதற்கொண்டு இடம்பெற்ற பேச்சுக்கள் மற்றும் செயற்பாடுகளின நெழிவு சுழிவுகள் பற்றிய தெளிவு எமக்குள்ளது. திம்புத் தீர்மானங்களிலிருந்து விடுதலைப் புலிகள் இன்னும் விலகியதாகத் தெரியவில்லை.

இதற்கமைய அரசும் புலிகளும் தமது நிலைப்பாடுகளிலிருந்து சற்றும விலகாதவரையில் இப்பிரச்சினை தொடர்பாக நிரந்தரத் தீர்வொன்றுக்கான சாத்தியம் இல்லையென்றே நான் நினைக்கிறேன்.

*தமிழில்:* **கே.எஸ்.எம்**

நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று சமாதானத்தை எட்டுவது மிகக் கடினமானதுதான்; சிக்கலானதுதான். ஆனால், எமது நோக்கு, சமாதானமேயன்றி வேறொன்றுமில்லை. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலம் முதற்கொண்டு, யுத்தமொன்றுக்கு சமமான வகையில் இடம்பெற்றுள்ள சிங்கள மற்றும் தமிழர் மத்தியிலான இப்பிரச்சினை எமது அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பெற்ற, பலவிதமான தீர்மானங்களினால், மேன்மேலும் உக்கிரமடைந்தது .

இச்சிக்கலான பிரச்சினையின் முடிச்சுக்களை அவிழ்ப்பது அரசினால் மாத்திரம் சாத்தியமான ஒன்றல்ல. அதற்குச் சகல சமூகங்களினதும் ஏகோபித்த பங்களிப்பு அவசியமானதாகும். எத்தகைய நிலைப்பாட்டின் போதும், யுத்தத்தை விடவும் சமாதானமே சிறந்தது என்பதை நாம் ஏற்கவேண்டும். அதை நோக்கிப் பயணிக்கும் பாதையில் தான் சிக்கல் உள்ளது. எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும், சமாதானத்தின் பெறுமதியை எம்மால் இலகுவில் எழுத்து வடிவில் மதிப்பீடு செய்ய இயலாது.



அமெரிக்காவில் இடம்பெறும் உலக மல்யுத்தப் போட்டியில் நேற்று ரஷ்ய வீரர் சயித் சயிடோ (தாடியுடன் இருப்பவர்) அமெரிக்க வீரர் கால் சாண்டர்சனை தூக்கிப் புரட்டிய காட்சி.

# இலங்கை கிரிக்கெட் சபையின் பெயர் 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்' என மாற்றம்

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பெயர் ஸ்ரீலங்கா கிரிக்கெட் என மாற்றப்பட்டுள்ளது. நேற்றுமுன் தினம் இப்பெயர் மாற்றம் மேற்கொள் ளப்பட்டது.

இப்பெயர் மாற்றம் தொடர்பான உத் தியோகபூர்வ வைபவமொன்று இம் மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள் ளது. ஐ.சி.சி. தலைவர் ஈஷான் மனி இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் என எதிர்பார்க் கப்படுகிறது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையும் அண்மையில் தனது பெயரை கிரிக் கெட் ஆஸ்திரேலியா என மாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, முன்னர் இலங்கை கிரிக்கெட் சங்கம் (சிலோன் கிரிக்கெட் அசோ ஷியேஸன்) என பெயரிடப் பட்டிருந்தது.

1975ஆம் ஆண்டு முதல் இலங் கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை என்ற பெயரில் இயங்கி வந்த இச்சபை யின் பெயர் மாற்றம் தொடர்பான வாக் கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இத்தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிப் பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, ஸ்ரீலங்கா கிரிக் கெட்டின் சந்தைப்படுத்தல் கிளையாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் இன் கோர்பரேட் டட் எனும் நிறுவனமொன்று இலங் கைக் கம்பனி பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கம்பனியின் முகாமைத்துவ சபை யில் திலங்க சுமதிபால, ஏ.ஜே.எம். முஸம்மில், அரவிந்த டி சில்வா, மொறான் டி சில்வா, லால் நாணயக் கார ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி, சந்தைப்படுத்தல் பிரிவுத் தலைவர், மூன்று நிரந்தர ஊழி யர்கள், விளையாட்டுத்துறை அமைச் சின் பிரதிநிதிகள் மூவர் ஆகியோர் வாக்குரிமையற்ற இயக்குநர்களாக இச்சபையில் இடம்பெறுவர்.

# இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் லண்டனில் பொலீஸாரால் கைது!

இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் இருவர், லண்டனில் பயங்கரவாத எதிர்ப்புப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

இவ்வீரர்களில் ஒருவரான மனோஜ ஹெட்டியாராசசி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். மற்றொரு வீரரான பாதிஷா டி சில்வா தண்டனை எதுவுமின்றி தப்பி யுள்ளார்.

இவ்விருவரும் ஹரோவ் நகரி லுள்ள சட்பரி கிரிக்கெட் கழகத்துக் காக விளையாடச் சென்றவீரர்களாவர்.

கடந்தபுதனன்று இவர்கள் இலங்கை திரும்புவதற்காக விமானத்தில் ஏறவி ருந்த வேளையில் ஹீத்ரோ விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

தகவல் ஒன்றையடுத்து பயங்கர வாத எதிர்ப்புப்பிரிவு அதிகாரிகள் மேற் படி வீரர்களை சோதனையிட்டனர். அப்போது ஹெட்டியாராசசியிடமிருந்து, முறைகேடாக மறுபதிப்புச் செய்யப்பட்ட 22 கடன் அட்டைகளையும் 20 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களுக்குரிய (சுமார் 30 லட்ச ரூபா) காசோலையையும் கைப் பற்றினர். கடந்த வியாழனன்று ஹீத்ரோ பொலீஸ் நிலையத்தில் விசாரிக்கப் பட்டனர். அப்போது பாதிஷா டி சில் வாவே தம்மிடம் கடன் அட்டைகளைக் கொடுத்தார் என ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தனது பணப்பை (பேர்ஸ்) நிரம்பி விட்டதாக கூறியே ஹெட்டியாராச்சி யிடம் கடன் அட்டைகளை கொடுத்துள் ளார் டி.சில்வா.

கடன் அட்டைகள் பலவற்றை வைத்திருப்பது முறையானதா என சில்வாவிடம் ஹெட்டியாராச்சி வினவினா ராம். இது போன்ற பல அட்டைகள் எனது பையில் இருக்கின்றன. என்னு டன் இருந்த சில கிரிமினல்கள் சில நாளகளுக்கு முன்னர் என்னைத் தாக் கினர். அதனால் நான் பயப்படுகிறேன் என்று சில்வா பதிலளித்தார் என ஹெட்டியாராச்சி புலனாய்வு அதிகாரிக ளிடம் கூறினாராம்.

இலங்கையிலுள்ள நண்பர் ஒரு வருக்காக மேற்படி காசோலைகளை தாம் கொண்டு சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், டி.சில்வா விசாரிக்கப்பட்டபோது கடன் அட்டை களை தாம் ஹெட்டியாராச்சியிடம் கொடுக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

எனினும்,ஹெட்டியாராச்சிக்கு இங்கிலாந்து கழகத்தில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்ததுடன், தங்குமிட வசதியும் செய்து கொடுத்தார். அதனால் நன்றிக்கடனுக்காக மேற்படி கடன் அட்டைகளை கொண்டு செல் லும் நிலை ஹெட்டியாராச்சிக்கு ஏற்பட் டது என லண்டன் வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

விசாரணையின் பின்னர் டி.சில் வாவுக்கு எதிராக ஆதாரங்கள் எதுவும் இல்லாமையால் அவர் விடுவிக்கப் பட்டார். திருடப்பட்ட பொருளகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின பேரில் ஹெட்டியாராச்சி நீதிமன்றத் தில் ஆஜர் செய்யப்பட்டார். விசார ணைக்காக அவர் சிறையில் அடைக் கப்பட்டார். இவ்வி சாரணை முடிவடை வதற்கு குறைந்த பட்சம் இரு மாத காலம் செல்லும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

எவ்வாறெனினும், இந்த மோச டிக்கு பாதிஷா டி. சில்வாவே பின்ன ணியில் இருப்பவர் என நாம் நம்புகி றோம் என புலனாய்வாளர்கள் தெரி வித்துள்ளனர்.

மேற்படி கடன் அட்டைகள் கொடுக் கல் வாங்கல்களின் போது உரிமை யாளர்களுக்குத் தெரியாமல் பிரதி செய்யப்படுவனவாகும். மோசடி பேர் வழிகள் இவற்றின் மூலம் பொருள்களை கொள்வனவு செய்யும் போது அந்த அட்டைகளின் உண்மையான உரிமை யாளரே பணம் செலுத்த நேரிடும் என் பது குறிப்பிடத்தக்கது.

27 வயதான டி சில்வா, தமிழ் யூனியன் கழகத்துக்காக பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாடியவர். 25 வயதான ஹெட்டியாராசசி பி.ஆர்.சி. கழகத்துக்காக விளையாடியவர் ஆவார்.



டெனிஸ் வீராங்கனை ஷெரீனா வில்லியம்ஸு டன், சகோதரி யெண்டுண்டே பிரைஸ் கடந்த ஜூ லை மாதம் நிகழ்வொன்றில் எடுத்துக் கொண்டபடம்.

# வீனஸ் வில்லியம்ஸின் சகோதரி அயலவரால் சுட்டுக்கொலை!

அமெரிக்க டெனிஸ் வீராங்கனை களான வீனஸ் வில்லியம்ஸ்,செரீனா வில்லியம்ஸ் ஆகியோரின் மூத்த சகோதரியான யெடுண்ட பிரைஸ் (வயது-31) சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஞாயிறன்று அதிகாலை அமெரிக் காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் கம்ப்டன் பகுதியில் இச்சம்பவம் நடந் தது. அயலவர் ஒருவருடனான வாக்கு வாதமொன்றையடுத்து பிறைஸ் மீது அயலவர் துப்பாக்கியால் சுட்டார். மார்பில் காயமடைந்த பிரைஸ், வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட சிறிது நேரத்தில் மரணமடைந்தார்.

இச்சம்பவத்தின் போது ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் உடனடியாக ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணைகளை ஆரம்பித்தனர். பிர தான சந்தேக நபர் உடனடியாக தலை மறைவானார். எனினும், ஞாயிறன்று மாலை, 24 வயதான ஆரோன் மைக் கல் கம்மர் என்பவரை பொலீஸார் கைது செய்தனர்.

அவர் பிணை மறுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என லொஸ் ஏஞ்சல்ஸ் பிராந்திய பிரதி செரீப்பான் ரிச்சர் பேனா தெரிவித்தார்.

மேற்படி சம்பவத்தின் போது பிரை ஸுடன் இருந்த அவரின் ஆண் சகா வான ரோலண்ட் வோர்ம்லியும் (வயது-28) வாக்குவாதத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. வோர்ம்லியைக் கைது செய்த பொலீஸார் அவரை வெளியில் சென்று திரும்பிவர அனும தித்துள்ளனர்.

வீனஸ் வில்லியம்ஸ் (வயது-23), செரீனா வில்லியம்ஸ் (வயது-21) ஆகிய இருவரும் உலக டெனிஸ் தர வரிசையில் முதல் இடத்தை வகித்த வீராங்கனைகளாவர். இரு வரும் மொத்தமாக 10 கிராண்ட் ஸ்லாம் சம்பியன் கிண்ணங்களை வென்றுள் ளனர்.

இவர்கள் போட்டிகளில் பங்கு பற்றும் போது அவர்களின் மூத்த சகோதரியான பிரைஸும் அநேகமாக அரங்கில் இருப்பார். இவர் பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவ தாதி ஆவார். 3 பிள்ளைகளின் தாயான பிரைஸ், விவாகரத்து செய்தவர்.

வீனஸ், சேரினா ஆகியோரின் தாயான ஒரா செனுக்கு ஐந்து பெண பிள்ளைகள். ஓராசென் முன்னர் யூஸெவ ஏ.கே.ரஷீட் என்பவரை திருணம் செய் திருந்தார். பின்னர் ரிச்சர்ட் வில்லி யம்ஸ் என்பவரை திருமணம் செய்தார். றிச்சர்ட் வில்லியம்ஸ் - செரீனா வில்லி யம்ஸ் தம்பதியின் பிள்ளைகளே வின ஸும் செரீனாவும் ஆவர்.

இவர்கள் அனைவரும் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் முன்னர் வசித் தனர். பின்னர் புளோரிடாவுக்கு இடம் பெயர்ந்தனர். புளோரிடாவிலேயே வீன ஸும் செரீனாவும் பிரபல டெனிஸ் நட்சத்திரங்களாகப் புகழ்பெற்றனர்

"யெடுண்ட் பிரைஸின் மரணத்தி னால் நாம் மிகவும் அதிர்ச்சியும் கவ லையும் அடைந்துள்ளோம். அவர் அன் பான ஒரு தாயாக, மகளாக, சகோ தரியாக, நண்பியாக விளங்கினார். இது எமது வாழ்க்கையின் மிகவும் துயரமான நாள்" -

இவ்வாறு வில்லியம்ஸ் குடும் பத்தினர் விடுத்த அறிக்கையொன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்த வருடத்தின் சிறந்த மெய்வல்லுநர்கள்



குளோரட் ஹேஸ்ட்ரீ

இவ் வருடத்தின் சிறந்த ஆண் மெய்வல்லுநராக தென்னாபிரிக்கா வின் குளோட் ஹேஸ்ட்ரீ தெரிவு செய் யப்பட்டுள்ளார்.

பெண்கள் பிரிவில் தென்னாபிரிக் காவின் உயரம் பாய்தல் வீராங் கனை குளோட் ஹேஸ்ட்ரீ வருடத்தின் சிறந்த மெய்வல்லுநராக தெரிவானார்.

ஞாயிறன்று மொனாக்கோவின் மொன் கார்லோ நகரில் முடிவுற்ற உலக மெய்வன்மைப் போட்டிகளின் இறுதியில் இவ்விருவரும் வருடத்தின் சிறந்த மெய்வல்லுநர்களாக அறிவிக் கப்பட்டனர்.

மூன்றாவது தடவையாக எல் கியூரோஜ் இவ்விருதை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் விருதை பெறும் முதலாவது ஆபிரிக்கா வீராங்கனை குளோட் ஆவார்.

# விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

காலை 8.30 மணி முதல் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெறும் ஆட்டங்கள்

**14 வயதுப்பிரிவு**

சித்தங்கேணி கணேசா வித்தியா லயம் எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

அராலி இந்துக்கல்லூரி எதிர் அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலை.

பிற்பகல் 2.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மைதானத் தில் 16 வயதிற்குட்பட்டோருக்கான கால் இறுதி ஆட்டங்கள் இடம்பெற வுள்ளன. (ம-5-86)

★ ★ ★

தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையே நடை பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டியில் இன்று பிற்பகல் 2 மணிமுதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்க ளில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப்பிரிவு**

அளவெட்டி அருணோதயக் கல் லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

**18 வயதுப்பிரிவு**

வசாவிளான் மத்திய மகாவித்தி யாலயம் எதிர் மல்லாகம் மகா வித்தி யாலயம்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி. (ம-5-80)

★ ★ ★

யாழ்பல்கலைக்கழக உடற்கல்வி அலகினால்நடத்தப்பட்ட மாவட்ட ரீதியான மேசை வரிப் பந்தாட்ட சுற்றுப் போட்டி யின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் மேசை வரிப்பந்தாட்ட அறை யில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி டி. குணராஜாசிங்கம் கலந்து கொள்வார். (ம-5)

★ ★ ★

கோப்பாய் கல்விக்கோட்டப் பாட சாலைகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிமுதல் கோப் பாய் கிறிஸ் தவக்கல்லூரி மைதானத் தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விரம் வருமாறு:-

**14 வயதுப்பிரிவு**

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் புத்தூர் நடராசா இராம லிங்கம் வித்தியாலயம்.

**16 வயதுப்பிரிவு**

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் மகாவித்தியாலயம். (ம-5-86)

★ ★ ★

நல்லூர் கோட்டப் பாடசாலைக ளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் அரியாலை கனக ரெட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங் களில் கலந்து கொள்ளவுள்ள அணிக ளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப்பிரிவு**

யாழ்.இந்துக்கல்லூரி எதிர் நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.

**16 வயதுப்பிரிவு**

யாழ்.இந்துக்கல்லூரி எதிர் திரு நெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர்கோண்டாவில் இந்து மகாவித்தி யாலயம் (ம-5-86)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கற்கோவளம், பருத்தித்துறை என்னும் இடத்தில் 3 பரப்பு வீட்டுக் காணி பாதையோரத்தில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 021-2263421.

(22617)

### கணனி பதிப்புக்கள்

தமிழ், ஆங்கில
கணனிப் பதிப்புக்கள்
(ஸ்கானிங் உட்பட)
செய்து கொடுக்கப்படும்.
நாடுங்கள்:
312 A, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(12) (ஆலடிச்சந்தி) (22641)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.16

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஆரிய குளம்சந்தியில் உள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் விவரங்களை நாளை புதன் கிழமை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால் சகல ஆசிரியர்களையும் இதில தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-ரி)

## வாகனம் வாடகைக்குத் தேவை

எமது பாடசாலைகள் மற்றும் வீடுகள் புனரமைப்புத் திட்டத்திற்கு இணுவில்/ நாவற்குழி களஞ்சியத்திலிருந்து கம்பி, மரம் உள்ளடங்கலான கட்டடப் பொருள்களை விநியோகம் செய்வதற்கு Elf/Canter வகையான வாகனங்கள், லொறிகள் தேவைப்படுகின்றன.

இதற்கான மேலதிக விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் இல.472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் பெற்று 19.09.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

செயற்பாடுகளுக்கான இணைப்பாளர்.
GTZ - JRP
(C/30197) (25-12-19-21) T.P: 222 2635 / 222 6011

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



வவுனியா உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் சாவகச்சேரி கிராமாந்திர நீதிமன்றிலும் லிகிதராகக் கடமைபுரிந்தவரான

### திரு.தம்பு சிதம்பரப்பிள்ளை

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டதையிட்டு அவரை மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

1990 வரை ஆசிரியப்பணி புரிந்து சமகாலத்தில் கிராமோதய சபைத் தலைவராகவும் சாவகச்சேரி ப.நோ.கூ.ச. தலைவராகவும் சங்கத்தானை சனசமூக நிலையத் தலைவராகவும் கிராம்புவில் முருகன் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும் மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சபைத் தலைவராகவும் சங்கத்தானை ஐ.நாணய சங்கத் தலைவராகவும் சாவகச்சேரி வடக்கு இணக்கசபை நீண்டகாலத் தலைவராகவும் இருந்து அரும்பெருஞ் சேவையாற்றிய இவர் மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்றுத் திகழ இறையருளை இறைஞ்சுகின்றோம்.

கல்வயல், சாவகச்சேரி. திரு.செ.கதிரவேலு.
(22644) (25-12-19-21)



உ

சாவகச்சேரி அருள்மிகு
### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## கேதார கௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

எதிர்வரும் புரட்டாதி மாதம் 19ஆம் நாள் (05-10-2003) ஞாயிற்றுக்கிழமையன்று

### கேதார கௌரி விரதம் ஆரம்பம்

எனவே, விரதம் அனுஷ்டிப்பவர்கள் கடைசி நேரம் வரை காத்திராது முன்கூட்டியே தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

தூர இருந்து வரும் விரதகாரர்களுக்காக நேரத்துடன் பூஜை நடைபெறும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

ப.மகாகணபதி சர்மா
தர்மகர்த்தா.
(22636) (19-21-12)

## கண்ணீர் அஞ்சலி




செல்வி
### நகுலேஸ்வரக் குருக்கள் கம்சினி

அவர்களின் மறைவையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊர்மிளா போட்டோ அன் கொமினிக்கேஷன்
T.P.021-222 6587

8ஆம் கட்டை,
கல்வியங்காடு. (22643) (26-19-12)

## கண்ணீர் அஞ்சலி





நவாலியூர்
### பிரம்மஸ்ரீ சோ.சண்முகரத்தினக் குருக்கள்

எமது ஆலயத்தின் பிரதமகுருவாகிய பிரம்மஸ்ரீ சோ.சண்முகரத்தினக் குருக்கள் அவர்கள் 12.09.2003 அன்று பிரான்ஸில் காலமானார். அன்னாரது பிரிவினால துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தயடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபையினரும்
வழிபடுவோர் சங்கத்தினரும்.
நவாலி, அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம்.
(22639) (26-12-19-21)

## மரண அறிவித்தல்

### திருமதி கார்த்திகேசு தவமணி
(மணி)

தனங்களப்பைப் பிறப்பிடமாகவும் கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு தவமணி அவர்கள் 12.09.2003 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் த.கு.கார்த்திகேசு (இளைப்பாறிய பிரதம லிகிதர், பிரதேச செயலகம், தென்மராட்சி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வவிநாயகம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபாபதி விநாயகமூர்த்தி மற்றும் பத்மநாதன், சாரதாதேவி, ஞானபூபதி (லண்டன்), திருச்செந்தூர்ச்செல்வி, சற்குணானந்தன் (லண்டன்), சரோஜினிதேவி (லண்டன்), சச்சிதானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, சிவபாக்கியம் காலஞ்சென்ற நல்லையா மற்றும் சிவகுருநாதபிள்ளை (லண்டன்), சிவராசா (கனடா), மல்லிகாதேவி (லண்டன்), கணேசமூர்த்தி (லண்டன்), நளாயினி (லண்டன்), திருமதி பொன்னம்பலம் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீகணேசன் (லண்டன்), தவக்குமாரி (பிரான்ஸ்), ஸ்ரீகாந்தன் (லண்டன்), சிவகுமாரி (பிரான்ஸ்), சந்திரகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகதீஸ்வரி (லண்டன்), கலைச்செல்வன் (பிரான்ஸ்), தில்லைக்கரசி (லண்டன்), விமலச்சந்திரன் (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17-09-2003) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். கெருடாவிலிலும் அன்றையதினம் நினைவுப் பிரார்த்தனை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.பத்மநாதன்
(சகோதரர்)

கெருடாவில்,
சாவகச்சேரி. (22642) (26-12-19)

CAS
S.C.A.L.E.

சீ.ஏ.எஸ். - தராசு
உலகில் நிறுக்கும் பணி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகைத் தராசு

மளிகைக் கடைக்காரர், சில்லறைக் கடைக்காரர், மொத்தவியாபாரி, நகைக் கடைக்காரர், வாகனத்தில் ஏற்றிப் பறிப் போர் என் குடும்பப் பெண் எவராயிருந்தாலும் ஒரு தராசு கட்டாயம் அவசியம்

CAS - சீ.ஏ.எஸ். ஒவ்வொருவரின் தேவைக்கும் பொருத்தமான தராசை வழங்குகிறது

விலைகணிக்கும் தராசுகள்*

நிலைக்கால் தராசுகள்*

நுண் நிறுவைத் தராசுகள்*

எண்ணும் தராசுகள்

இலகுவான நிறுவைத் தராசுகள்*

லேபல் அச்சிடும் தராசுகள்

தூக்குத் தராசுகள்


*அளவைக் கூறுகள், கட்டளைகள், சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டவை.

1 வருட உத்தரவாதம்

CAS S.C.A.L.E. சீ.ஏ.எஸ். - தராசு
ஒரு நீண்ட காலத்துக்கு, மேல் இலங்கைச் சந்தையில் முன்னணி வகிப்பது.

தயாரிப்போர் CAS சீ.ஏ.எஸ். கோர்ப்பரேசன், கொரியா
இலங்கையில் விற்பனையும் பராமரிப்புச் சேவையும் செய்வோர்

CAL கொழும்பு ஏஜென்சீஸ் லிமிட்டெட்
505 ஸ்ரீ ஜெயவர்தனபுர மாவத்தை, கதுல் கோட்டே, கோட்டே.
தொலைபேசி: 2878200-03, 074-404066-77 தொலைநகல்: 2867109

ADMARK